1278

[illegible]

No:- 3.

1114

வெளியீடு 14-9-1989 Issued 14-9-1989

தமிழ்நாடு ஆவணக்காப்பகம் 11 சன
எழும்பூர், சென்னை-600008

12-28

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மார்ச் 28, 1989—தொகுதி 5—எண் 3
Tuesday, the 28th March, 1989—Volume 5-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

உள்ளடக்கம்

பக்கங்கள்.

28—3—1989.


1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 187—195

2. உரிமைப் பிரச்சினை—

முதல் அமைச்சர் மற்றும் சென்னை நகரக் காவல் துறை ஆணையர் மீது .. .. 195—222

3. தகவல் கோரல்—

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் 223—237, 239—240

4. அறிவிப்புகள்—

(அ) அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (ஜெயலலிதா அணி), '' அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் '' என்ற பெயரில் செயல்படுதல் ... .. .. .. 238—239

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து .. .. .. .. .. 242

5. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1988–89— அளித்தல் .. .. .. .. .. 240—242

6. அரசினர் சட்ட முன்வடிவு—

நிதி ஒதுக்கச் (உடனடிச் செலகவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1989 .. .. 242—243

7. வரவு–செலவுத் திட்டம், 1989–90— பொது விவாதம்—தொடர்ச்சி .. .. .. 243—293

* திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி 243—258
* திரு. எஸ். ஏ. தங்கராஜன் . .. .. 258—263
* திரு. ப. சுந்தரம் .. .. .. 263—268
* திரு. எம். முகமது சித்திக் .. .. .. 668—272
* திரு. மா. மணிமாறன் .. .. .. 272—282
* திரு. ரெ. பிச்சைமுத்து .. .. .. 283—285
* திரு. கே. வி. இராமசாமி .. .. .. 285—289
* திரு. யூ. கே. வெள்ளிங்கிரி .. .. .. 289—293

8. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் .. .. 293—294


டி. 2 எ 53-26—1

144355
D
V2N,31 M9
N89.5.3

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1989, மார்ச் 28, செவ்வாய்க்கிழமை.

பங்குனி 15, விபவ—திருவள்ளுவர் ஆண்டு—2020.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. சாத்தையா என்கிற தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்."

அன்பு, நாணம், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்னும் ஐந்து பண்புகளும் சால்பு என்பதைத் தாங்கி நிற்கும் தூண்களாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### குளச்சல் துறைமுகத் திட்டம்.

5.—(* வினா எண். 294) **திரு. ஆ. பாலையா :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் துறைமுகத் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்பொழுது தொடங்கப்படும் ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே,

(அ) ஆம். திட்ட மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசினால் நியமிக்கப்பட்டுள்ள இயக்கக் குழு (Steering Committee) அறிக்கையின் அடிப்படையில் திருத்திய செயற்குறிப்பு பெறப்பட்டு, அதற்கு அரசு அனுமதி வழங்கிய பின்னர் வேலை தொடங்கப்படும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது ? ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணத்தை வைத்துக் கொண்டு அந்தத் திட்டத்தை முழுமையாக முடிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987–88-ஆம் ஆண்டு ரூபாய் 35 லட்சத்திற்கு இதற்காக மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதன் பேரில், ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்ட நேரத்தில் ரூபாய் 61 லட்சத்திற்கு அவர்கள் ஒப்பந்தப் புள்ளி தந்தார்கள். இதில் அதிகமான வேறுபாடுகள் இருந்த காரணத்தால் இதுபற்றி ஒரு ' ஸ்டியரிங் கமிட்டி ' இயக்கக் குழு நியமித்து அவர்களுடைய கருத்து அறியப்பட்டு, அது பொதுப்பணித் துறையின் முடிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அது வந்ததற்குப் பிறகுதான் இறுதி முடிவு மேற்கொண்டு, அதற்குப் பின்னால் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு வேலைகள் துவங்கப்பட வேண்டும்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் மிகத் தொன்மை வாய்ந்த துறைமுகம் என்பதைத் தமிழகம் நன்றாக அறியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இதை மறுக்க மாட்டேன். என்னைத் திரும்பிப் பார்க்க வேண்டாம். (சிரிப்பு)

திரு ஆ. பாலையா : தலைவர் அவர்களே, இந்தத் துறைமுகத் திட்டத்தை விரைவாக முடிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் மாவட்ட மக்களுடைய கருத்தாக இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அரசு இதிலே முக்கிய கவனம் செலுத்தி இந்தத் திட்டத்தை விரைவாக முடிப்பதற்கு தக்க நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் அமைக்கப்பட்டால் அந்தத் துறைமுகத்திலிருந்து என்னென்ன பொருள்கள் ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது ? அதன் மூலம் அரசுக்கு அன்னிய நாட்டுச் செலாவணி என்கிற முறையில் வரக்கூடிய வருமானத்தின் மதிப்பு என்ன? இப்போது ஏற்றுமதி செய்வதற்கு வாய்ப்பாக என்னென்ன பொருள்கள் அங்கே கிடைக்கின்றன என்பது பற்றிய குறிப்புகளை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது குளச்சல் துறைமுகத்திலிருந்து வெளிநாடுகளுக்கு, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளுக்கு மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஓராண்டிற்கு 30,000-லிருந்து 50,000 டன்கள் வரையில் மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது ஓராண்டிற்குக் கிடைக்கக்கூடிய வருமானம் சுமார் ஒரு லட்சம் ரூபாய் வரையில் தான் நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. குளச்சல் துறைமுகம் அபிவிருத்தி செய்யப் படுமானால் நமக்குச் சுமார் நான்கு லட்சம் ரூபாய் வரையில் கூடுதலான வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப் படுகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகமானது ஒரு இயற்கைத் துறைமுகம். நமது இந்தியாவில் உள்ள இயற்கைத் துறைமுகங்களில் இது முக்கியம் வாய்ந்ததாக இருக்கிறது. அதிக நிதி ஒதுக்கீடு செய்து இந்தத் துறைமுகத்தை நல்ல முறையில் அமைத்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல மணல் ஏற்றுமதி பெருகுவதோடு மட்டுமல்லாமல் மற்ற பல்வேறு பொருள்களை அங்கேயிருந்து ஏற்றுமதி செய்வதற்கும், கப்பல்கள் வந்து செல்வதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே, அதிக நிதி ஒதுக்கீடு செய்து, அந்தத் துறைமுகத்தை விரைவில் அரசு முடித்துத் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளதைப் போல, அபிவிருத்தி செய்யவேண்டும் என்றநோக்கத்தோடுதான் 35 லட்சம் ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டன. கூடுதலாக செலவாகும், என்ற நிலைமையிலே தான் நிபுணர் குழுவிற்கு அனுப்பப்பட்டு அவர்களுடைய முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. செ நூர் முகமது : பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் துறைமுகம் வழியாக—மணவாளக்குறிச்சி மணல் ஆலையில் உற்பத்தி செய்கின்ற மணல் அபூர்வமான மணல் என்று சொல்லப்படுகிறது—வெளி நாடுகளில் மிக அதிகமாக தேவைப்படுகின்ற மணல் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆனால் இந்தப் பெரும்பான்மையான மணலும் கேரள மாநிலத்திலே இருக்கிற துறைமுகங்கள் வழியாக ஏற்றுமதி செய்யப்படுகின்ற நிலைமை இருக்கிறது. ஆகவே அமைச்சர் பெருமான் குறிப்பிட்டதைப் போல, இந்தத் துறைமுகத்தை உடனடியாக நாம் நிறைவு செய்வோமானால், கேரள துறைமுகம் வழியாக அனுப்பப்படுகின்ற மணல் குளச்சல் வழியாக அனுப்பப்பட்டு அதிகமான வருமானம் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதால், மிகக் குறைவான கால கட்டத்தில், எவ்வளவு வருடத்திற்குள் இந்தத் துறைமுகப் பணியை முடிக்க இயலும் என்று அரசு கருதுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, வெகு விரைவில் நாம் செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் கடலுக்குள் பில்லர் அமைத்து, அதற்கு மேலாக அந்த ஜெட்டி, தோணித் துறை கட்டுவது என்பது மற்ற சாதாரண இடங்களில் கட்டுவதைப் போல அல்லாமல், இதை புதிய தொழில் நுட்ப ரீதியிலே கட்ட வேண்டும். இருந்தாலும் கூட, இதனுடைய முக்கியத்துவம் கருதி, விரைவான முறையிலே செயல்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். மணல் மட்டுமல்லாமல், அந்தத் துறைமுகம் சீர்திருத்தம் செய்யப் படுகின்ற நேரத்தில், கயிறு, உரம் போன்றவற்றைக் கூட நாம் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கும், அல்லது இறக்குமதி செய்வதற்கும், பயன்படக்கூடிய துறைமுகமாக இது அமையும்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஒதுக்கீடு செய்த பணத்தில் மத்திய அரசினுடைய பங்கு உண்டா ? அப்படியானால், மத்திய அரசினுடைய பங்கு எவ்வளவு, மாநில அரசினுடைய பங்கு எவ்வளவு என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, முழுமையாக மாநில அரசினுடைய நிதிதான். முடிந்தால், மத்திய அரசு இந்தக் கேள்வியினுடைய பதிலைப் பயன்படுத்தி நிதி கொடுக்குமானால் இன்னும் விரிவுபடுத்தப்பட்ட நிலைமை யில், இந்தத் துறைமுகத்தை நாம் செய்யலாம்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்ற பதிலில், அந்தத் துறைமுகம் ' கார்கோ ஷிப் ' , அதாவது சரக்கு ஏற்றிச் செல்லுகின்ற துறைமுகமாக செயல்படுவதாகச் சொல்கிறார்கள். இதை இன்னும் சீர்திருத்தம் செய்து, கடல் வழித் தடங்கள், மூலமாக மெசின் போட்கள் மூலமாக, சென்னை, இன்னும் தூத்துக்குடி போன்ற பகுதிகளோடு இணைப்பதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது இது சரக்கு ஏற்றும் துறைமுகமாகத்தான் இருக்கிறது. பயணிகளைப் பற்றிய பிரச்சினை எழவில்லை.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தோணித் துறையைக் கட்டுவதற்கு நவீனத் தொழில் நுட்பத்தோடு கட்ட வேண்டிய தேவை இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்தத் தொழில் நுட்பம் உள் நாட்டு வல்லுநர்களோடு மேற் கொள்ளப்படுகிறதா அல்லது வெளி நாட்டு தொழில் நுட்பம் பெறப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, உள் நாட்டுத் தொழில் நுட்ப வல்லுநர்களால்தான் செய்யப்படு டுறது.

திரு. ஆர். சாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்த குளச்சல் துறைமுகத்தை அபிவிருத்தி செய்தால், எத்தனை பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்? இதனால் அந்தப் பகுதி மக்கள் அதிக நன்மை பெறுவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது ஆண்டுக்கு 4 முறைதான் வெளிநாட்டுக்கப்பல்கள் வந்து மணலை எடுத்துக்கொண்டு போகின்றன. ஒரு தடவை மணலை எடுத்துக்கொண்டு செல்வதற்கு 10 நாட்களுக்கு சுமார் 2 ஆயிரம் பேர்களுக்கு தற்காலிகமாக வேலைவாய்ப்பு கிடைக் கிறது. இதை அதிகப்படுத்துவோமானால், கூடுதலான தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான நிலைமைகள் எதிர்காலத்தில் உருவாகலாம்.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, இந்தத் துறை முகத்தை விஸ்தரிப்பதற்காக மத்திய அரசினுடைய உதவியைக் கோருவதற்கு கோரிக்கை ஏதாவது அனுப்பப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அனுப்பப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 6 மற்றும் 7 மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

(முற்பகல் 9–10)

## சென்னை மெரினாக் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சி சாலை

8—(*வினா எண். 477) திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை மெரினாச் கடற்கரையில் கடல்வாழ் உயிரினக் காட்சி சாலை (Oceanarium) நவீன முறையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

[1989 மார்ச் 28

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரினக்காட்சிசாலை (Oceanarium) நவீனமுறையில் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் ஏதுமில்லை.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் முத்துக் குளிப்பதற்காக ஒரு நல்ல சூழ்நிலையிலே இயற்கையாகவே கடற்கரை உள்ளது. தூத்துக்குடியில் இப்படிப்பட்ட பல்வேறு வகை மீன்கள் கிடைக்கின்ற காரணத்தால் கடல் வாழ் உயிர் இனக் காட்சி சாலையை அமைக்கின்ற உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, இது சென்னை மெரினா கடற்கரையில் கடல் வாழ் உயிரினக் காட்சிசாலை அமைக்கும் திட்டம் பற்றிய கேள்வியாகும். தூத்துக்குடியில் அமைப்பது குறித்து தனிக் கேள்வி போட்டால், அதற்கு பதில் அளிக்க ஏதுவாக இருக்கும்.

திரு. கோ. வீரையன் : தலைவர் அவர்களே, சென்னை மெரினா கடற்கரையில் கடல்வாழ் உயிரின காட்சிசாலை நவீன முறையில் அமைப்பது பற்றிய திட்டம் இந்த அரசின் பரசீலனையில் இல்லை என்று சொன்னார்கள். இதுவரை இல்லாவிட்டாலும் இப்படிப்பட்ட ஒரு நவீன கடல்வாழ் உயிரினக்காட்சிசாலையை அமைப்பதற்கு அரசு இனிமேலாவது பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கடற்கரை ஓரங்களில் கடல்வாழ் உயிரினங்களின் காட்சிசாலைகள் அமைப்பது ஒரு உசிதமான யோசனை. திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில்கூட கடற்கரை ஓரத்தில் இது போன்ற கடல்வாழ் உயிரினக் காட்சிசாலைகள் அமைந்திருக்கின்றன. இதுபோன்ற காட்சிசாலைகளை அமைப்பதற்கு இந்த அரசுக்கும் ஆசை உண்டு. நிதிநிலை பற்றாக்குறைதான் இடைஞ்சலாக இருக்கிறது. எனினும் உறுப்பினருடைய ஆலோசனையை ஏற்று, அதுபற்றி சிந்திக்கப்படும்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னையில் உலகத்திலேயே மிக அழகான கடற்கரை என்று பெயர் பெற்ற மெரினாக் கடற்கரையில் இப்படிப்பட்ட கடல்வாழ் உயிரினங்களின் காட்சிசாலை ஒன்று அமைப்பது மிக மிகச் சிறப்பான ஒன்றாகும். பல்வேறு மாநிலங்களிலிருந்து வருகின்றவர்கள்



1989 மார்ச் 28]

அதைக் கண்டு செல்லக் கூடிய ஒரு நல்ல காட்சிசாலையாக அமையும் என்பதில் நாம் அனைவரும் ஒன்றுபடுவோம் என்று கருதுகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அதுபற்றிக் கூறுகின்றபொழுது நிதிநிலை பற்றாக் குறையைப் பற்றி எடுத்துக் கூறி, ஆனாலும் அந்த யோசனை அரசுக்கு இருக்கிறது என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இந்த அரசு மீண்டும் விரைவான நடவடிக்கைகளை மேற் கொண்டு 'டூரிசம் டெவலப்மெண்ட் டிபார்ட்மெண்ட்' என்ற மத்திய அரசிற்குச் சொந்தமான அந்தத் துறையோடும். தொடர்புகொண்டு, அவர்களுடைய உதவியினையும் பெற்று. தமிழ்நாடு டூரிசம் டெவலப்மெண்ட் கார்ப்பொரேஷனுடைய, உதவியினையும் நாம் சேர்த்துப் பெற்று....................
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் சொல்வது வினா தானே! (சிரிப்பு)

திரு. இரா. மோகன் : அந்தக் காட்சிசாலையை அமைப் பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தற்போது மெரினாக் கடற்கரையிலே பல்வேறு காட்சிகளை உறுப்பினர்கள் காணலாம். இந்தக் காட்சியையும் விரைவில் காணலாம் (சிரிப்பு).

திரு சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, உயிரின காட்சி அரங்கங்களைத் திறப்
பதிலே நமது முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கின்ற
ஆர்வத்தை நான் மனதாரப் பாராட்டுகிறேன். பல்வேறு உயி
ரினக் காட்சிசாலைகளை மெரினாக் கடற்கரையில் திறந்து
வைக்கலாம் என்று சொன்னார்கள். எனக்கு ஒரு சிறிய
ஆலோசனை. மனிதர்களிலே மிருகங்களாக இருக்கக் கூடிய
வர்களையும் அந்த ஒரு காட்சிசாலையில் அடைத்துவைத்து,
நாம் எல்லாம் பார்த்துப் பாடங்களையும் படிப்பதற்கு ஒரு
ஏற்பாடு செய்வார்களா எனக் கேட்டுக் கொள்ள ஆசைப்படு
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நண்பரவர்கள் உறுதுணையாக இருந்தால் அந்த முயற்சி மேற்கொள்ளப் படும். (சிரிப்பு).

[1989 மார்ச் 29

**திரு. எஸ். எஸ். ராமசுப்பு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மெரினா கடற்கரைக்கு சுற்றுலாப் பயணிகள் அதிகமாக வருகின்றார்கள். அங்கே ஒரு மீன் கண்காட்சி சிறியதாக அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கண்காட்சியை விரிவுபடுத்தினால் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு வசதியாக இருக்கும். அதனால் வருமானத்தையும் பெருக்கலாம். எனவே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் பதில் கூறியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி வசதி இருந்தால் சென்னை கடற்கரையில் இவ்வாறு கண்காட்சி அமைக்கப்படும் என்று சொன்னார்கள். சென்னை மாநகராட்சிக்கு அதனுடைய வளர்ச்சிக்காகவும், அழகுபடுத்துவதற்காகவும் இப்போது நிறைய பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். கோடிக் கணக்கான ரூபாய். அதிலே பல லட்சம் ரூபாயை எடுத்து இதற்கென ஒதுக்கி, இதைச் செய்வதற்கு, இந்தக் கண்காட்சியை அமைப்பதற்கு, அதுவும் இந்த ஆண்டிலேயே முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்தப் பிரச்சினையில் உறுப்பினர்கள் அனைவருமே அதிக ஆர்வம் காட்டுகிற காரணத்தால் முதல் கட்டமாக மெரினாக் கடற்கரையில் இது போன்ற உயிரினக் காட்சி சாலை அமைப்பதை விரைவுபடுத்த இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் தற்போது ஒரு மீன் காட்சியகம் ''அக்வேரியம்'' இருக்கிறது. அதனுடைய பராமரிப்பு சரியாக இல்லாத காரணத்தாலே அது பயன் உள்ளதாக இல்லை. அதை முறையாகப் பராமரிக்கவும் ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பழையதும் பராமரிக்கப்படும்; புதியதும் வரும்.

**திரு. ஆர். சிங்காரம் :** பேரவைத் தலைவர் அவர்களே, மெரினா கடற்கரையில் தலைவர்களின் கல்லறைகளை இனிமேல் வைக்கக்கூடாது என்று ஒரு பொது நல வாதி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து இருப்பதாகத் தெரிகிறது. அது பற்றி அரசுக்குத் தெரியுமா? ஆம் எனில், இந்த அக்வேரியத்தை வேறு இடத்திற்கு மாற்ற திட்டமா அல்லது கல்லறைகளை இனிமேல் வைக்கக் கூடாது என்ற திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.



1989 மார்ச் 28]

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, இது உயிரோடு இருப்பவர்களுடைய காட்சி சாலை பற்றிய கேள்வி. உயிர் இழந்தவர்களுடைய காட்சி சாலை பற்றிய கேள்வி அல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்].

## 2. உரிமைப் பிரச்சினை

### முதல் அமைச்சர் மற்றும் சென்னை நகரக் காவல்துறை ஆணையர் மீது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** கீழ்க்கண்ட மாண்புமிகு உறுப்பினர்கள் அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றி மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீதும், சென்னை நகரக் காவல் துறை ஆணையர் மீதும் அறிவிப்புகள் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. எஸ். ஆர். இராதா, திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன், திரு. எஸ். டி. உகம்சந்த், திரு. ஆர். அண்ணாநம்பி, திரு. கே. ஏ. செங்கோட்டையன், திரு. குமரி அனந்தன்,

இது எவ்வாறு அவை உரிமை மீறிய பிரச்சினையாகும் என்பதைக் குறித்து மிகச் சுருக்கமாகத் தெரிவிக்குமாறு வேண்டுகிறேன். முதலில் திரு. குமரி அனந்தன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருந்த உரிமை மீறல் பிரச்சினை குறித்த தீர்மானத்திற்குக் காரணங்கள் கூறி, எந்த வகையிலே இது உரிமை மீறல் என்று சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலிலே நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு சட்டமன்றத்தினுடைய பெருமையைப் பற்றி நான் இங்கே சொல்ல வேண்டியது இல்லை. அவைகள் பல இருப்பினும், அவைகளிலே தலை சிறந்த அவை எனப் புகழ்பெற்ற இந்த அவையிலே உறுப்பினர்களாக இருக்கின்றவர்கள், தங்களுடைய கடமையினைச் சரிவர ஆற்றுவதற்கு துணை செய்கிற சூழ்நிலை எந்த நேரமும் இருக்க வேண்டும் என்பதனை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களும், ஆளுகின்ற பொறுப்பில் இருக்கிற முதல்வர் அவர்களும், எதிர்க்கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும், ஆளும் கட்சியில் இருக்கிற உறுப்பினர்களும் அத்தனை பேர்களும் ஒத்துக் கொள்வார்கள்.

[திரு. குமரி அனந்தன்] [1989 மார்ச் 28

நான் கொடுத்திருந்த உரிமைப் பிரச்சினையில் எதிர்க் கட்சித் தலைவராக இருக்கிற செல்வி ஜெயலலிதா அவர்களு டைய அரசியல் ஆலோசகர் திரு. நடராஜன் அவர்கள் கைது செய்யப்பட்டதும், அவருடைய வீடு சோதனை இடப்பட்டதும் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. வீடு சோதனை இடப்படுகிறது. சோதனை இடப்படுகிற நேரத்தில் அது யாருடைய வீடு என்று பார்க்கிறபோது அமைச்சருடைய அந் தஸ்தில் இருந்து கொண்டிருக்கிற எதிர்க்கட்சித் தலைவருடைய வீடாக — எதிர்க்கட்சித் தலைவருடைய ஆலோசகருடைய வீடாக இருக்கிறது.

(முற்பகல் 9–20)

எனவே நமது சபாநாயகர் அவர்களுக்கு, அந்தத் தேடுதல் முயற்சியிலே ஈடுபடுகின்ற அதிகாரிகள் இப்படி நாங்கள் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களுடைய ஆலோசகருடைய வீட்டிற்கு சோதனையிடச் செல்கிறோம் என்ற தகவல் சொல்லப்பட்டதா அல்லது சொல்லப்படவில்லையா என்பது தெரியவில்லை. உள்ளே நுழைந்து தேடுதல் முயற்சியிலே ஈடுபடுகிறவர்கள் கண்டுபிடிக்கின்ற பல பொருள்களிலே டாக்குமெண்ட் என்று சொல்கின்ற அளவுக்கு கிடைக்கின்ற ஆவணங்களையும் எடுக்கிறார்கள். அந்த ஆவணங்களை எடுக்கின்ற நேரத்திலே இது எவ்வளவு விரைவாகச் செயல்படுத்தப்படுகிறது என்பதை யும் நாம் சற்று பின்நோக்கிப் பார்க்கவேண்டியிருக்கிறது. ஒருவர், மாதத்தினுடைய முதல் தேதியிலே நடந்த சம்பவத்தைப் பற்றி 18-ந் தேதி புகார் கொடுக்கிறார். அந்த 18-ந் தேதியே, உடனேயே விரைவாக வெகு வேகமாகச் செயல் தொடங்குகிறது. அதனுடைய அடிப்படையிலே வீடு சோதனை இடப்படுகிறது. சோதனையிடப்படுகிற நேரத்தில் அங்கே ஒரு உறை, மூடிய உறை, சீல்ட் கவர், ஒட்டி மூடப்பட்ட உறை ஒன்று கிடைக்கிறது. அதிலே மேலே எழுதியிருக்கின்ற முகவரி மாண்புமிகு சபாநாய கர் அவர்களுடைய பெயரிலே இருக்கிறது. சபாநாயகருடைய பெயரிலே ஒரு உறை இருந்தவுடனேயே, அது, எதற்காக அந்த வீடு சோதனையிடப்படுகிறதோ அதற்குச் சம்பந்தம் உடையது அல்ல என்கின்ற காரணத்திற்காக விட்டிருக்கலாம். ஒரு வேளை அதிலே கூட ஏதாவது இருக்குமோ என்று சோதிக்க வேண்டும் என்ற எண்ணம் அந்த அதிகாரிகளுக்கு இருந்திருக்கு மேயானால், அவைத் தலைவருடைய பெயரிடப்பட்டிருக்கின்ற காரணத்தாலே அதை அவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டுவர வேண்டும் என்றாவது சிந்தித்து இருக்கலாம். இப் படி உங்களுடைய பெயரிலே கிடைத்திருக்கின்ற காரணத்தாலே அதனை நாங்கள் திறந்து பார்ப்பதற்கோ, மற்றவைகளுக்கோ உங்களுடைய அனுமதியை நாங்கள் வேண்டுகிறோம்



1989 மார்ச் 28] [திரு. குமரி அனந்தன்]

என்றோ, ஆலோசனையை வேண்டுகிறோம் என்றோ அவைத் தலைவருடைய அனுமதியைக் கேட்டிருக்கலாம். ஒரு கடிதம் முக்கியமானதா இல்லையா என்பது அது யாருக்கு எழுதப்பட்டது. யாரால் எழுதப்பட்டது என்பதைப் பொறுத்திருக்கிறது. யாருக்கு எழுதப்பட்டிருக்கிறது என்று சொன்னால் தமிழகத்தை ஆண்டு கொண்டு இருக்கின்ற, இந்த சட்டமன்றத்தையே ஆண்டு கொண் டிருக்கின்ற மூத்த தமிழ்க்குடிமகனுடைய பெயர் அங்கே இருக் கிறது. எனவே, எந்தக் குடிமகனாக இருந்தாலும், அனை வரையும் பாதுகாத்து அவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண் டும் என்று சொல்லுகின்ற, சட்டத்தை இயற்றுகின்ற இந்த சட்டப் பேரவையினுடைய அவைத் தலைவராக இருந்து கொண்டிருக் கின்றவருடைய பெயர் அங்கே இருக்கின்றபோது உடனே ஒரு மரியாதை கலந்த, ஒரு அச்சம் கலந்த ஒரு நிலை அவர்களுடைய நெஞ்சத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். ஒரு பயபக்தியோடு அதனை அவர்கள் அணுகியிருக்க வேண்டும். அவைத் தலைவர் அவர்களுக்கு அந்த அளவுக்கு அவர்கள் மரியாதை கொடுத்திருக்க வேண்டும். அதனைக் கொடுக்கவில்லை என்பதோடு அதனை எழுதியது யார் என்று பார்க்கின்றபோது ஒரு தொகுதியிலேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர், அந்த மக்களு டைய பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றவர், அதுமட்டு மல்லாது அப்படிப்பட்ட பல சட்டமன்ற உறுப்பினர்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட ஒரு எதிர்க் கட்சித் தலைவராகவும் மந்திரி அந்தஸ்தை உடையவராகவும் இருந்து கொண்டிருக்கிறார்.

எனவே, இந்தக் கடிதம் இரண்டு வகையிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாக ஆகிவிடுகின்ற நேரத்திலே போலீஸ் துறையினர் மகஜரிலே காட்டியிருக்கின்றார்கள். காட்டிய பொருள் என்று சொல்லுகின்ற காரணத்திற்காக நீதிமன்றத்திலே கொடுத்து இருக்க வேண்டும். அதையும் செய்யவில்லை. திறந்து பார்த்து இருக்கிறார்கள். அதிலே கடிதம் இருந்தது என்பது தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. கடிதம் இருந்தது. அதுவும் செல்வி ஜெயலலிதா அவர்கள் எழுதிய கடிதம் இருந்தது. சபாநாயக ருக்கு எழுதிய கடிதம் இருந்தது என்று சொன்னதற்குப் பின் னாலே, உறையிட்டு மூடிய உறைக்குள்ளே இருந்தது என்று சொன்னதற்குப் பின்னாலே இரண்டு முரண்பட்ட செய்திகள் வருகின்றன. அது மூடியது அல்ல; ஸ்டேப்பிள்ட் அல்லது பின் னாலே குத்தப்பட்டது என்று நினைக்கின்றார்களா அல்லது அதிலே ஒரு இயந்திரத்தின் மூலம் கம்பியடித்தது என்று சொல் கிறார்களா என்று எதை வைத்துப் பார்த்தாலும், மூடிய கவர், மூடிய உறை, சீல்டு கவர் என்பதற்கு மாறுபட்டு இருக்கிறது. ஆக ஒரு முரண்பாடு அங்கே இருக்கிறது. அந்த முரண்பாடு வரு வதற்குக் காரணம் என்ன? அந்த முரண்பாடு ஏதாவது நோக்கத் தோடு இங்கே சொல்லப்படுகிறதா? உண்மையிலே அப்படி அல்ல என்று சொல்லத் தூண்டுகிறதே.

[திரு. குமரி அனந்தன்] [1989 மார்ச் 28

அதைப்போல கடிதம் என்று எப்போது சொல்லிவிட்டார்களோ—போலீஸ்காரர் தெளிவாக எழுதியிருக்கிறார் அதை கடிதம் என்று, அது போட்டோ நகலாக மாறியது எப்படி? அது போட்டோ நகலாக மாறுகிறது என்றால் முதலிலே ஒரு போலீஸ் அதிகாரியோ, ஏதோ ஒரு அதிகாரியோ கமிஷனருக்கு அடுத்த நிலையிலே கீழ்ப்படியிலே இருக்கின்றவர் எழுதிய ஒன்று, மேற்படியிலே இருக்கின்ற யாராவது சொன்ன காரணத்தினாலே அது போட்டோ நகல் என்று ஆகிறதா? அப்படியேதான் இருந்தது என்று சொன்னால், அந்தக் கடிதம் என்று எழுதப்பட்டிருந்த கடிதம் எப்படி சபாநாயகருக்குப் போய்ச் சேர்ந்தது? தானாகப் போவதற்கு இயலாது. தானாகப் போவதற்கு முடியாத ஒரு கடிதம் எப்படிப் போயிற்று? யார் கொண்டு கொடுத்தார்கள்? ஒரு வாழ்த்துத் தந்தியினைக் கொண்டு போகின்ற ஒருவரிடம் கூட கையெழுத்து போட்டுத்தான் அந்த தந்தியினைப் பெற்றுக் கொள்கின்றோம், 'நாம் பெற்றுக்கொண்டோம்' என்பதற்கு அடையாளமாக; அதைப் போஸ்ட்மேன் கொடுத்தார் என்பதற்கு அடையாளமாக. இங்கே போலீஸ்மென்தான் போய் இருக்கிறார்கள். பிறகு அவர்கள் எப்படி போஸ்ட்மென்-ஆக ஆனார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆக, காவல்துறையினர் தபால்துறையினராக மாறி இருந்தார்களா? அல்லது கடிதம் எப்படிச் சென்றது?

நிச்சயமாக, தபாலிலே வரவில்லை என்பது, நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்களே பின்னாலே தெரிவித்த பல செய்திகளிலிருந்து தெரிகிறது. யாரோ கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று சொல்லுகிற செய்தியாக இருக்குமானால், கொண்டு வந்து கொடுத்தவர், கொடுத்த கடிதத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, கையெழுத்துப் பெற்றுத்தானே கொடுத்திருப்பார்? அப்படிக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருந்தார் என்றால், கையெழுத்துப் போட்டுக் கொடுத்தது யார்? அப்படிக் கொடுக்கின்ற நேரத்திலே, அந்த நேரத்திலேயே நமது மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் 'Th: genuineness of the letter'—அதைப் பார்க்கின்ற நேரத்தில் இது எப்படி இங்கே வந்து சேர்ந்தது என்ற விசாரணையை அவர்களிடம் நடத்தினாரா என்று நமக்கு தெரியாது. ஆனால் அந்தக் கடிதம் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய கையாலேயே எழுதப்பட்டது என்பதனை சபாநாயகர் ஒரு முறைக்குப் பலமுறை இங்கே தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

ஆக, நடராஜன் வீட்டிலிருந்து எடுத்த அந்தக் கடிதம் எப்படி அங்கே போய்ச் சேர்ந்தது என்பது மர்மமான முறையிலே இருக்கிறதே, யாரோ என்று சொல்கிற ஒரு நிலை இருக்க வேண்டுமா? நாம் அதை யார்தான் கொடுத்தார் என்று சொல்கிற நிலை அதற்கு இருக்கவேண்டாமா? அப்படிக் கொடுத்திருந்தாலும்கூட 35-வது அமென்ட்மென்ட் மூலம் அப்படி ஒரு கடிதம் கைப்பட



1989 மார்ச் 28] [திரு. குமரி அனந்தன்]

எழுதியிருந்தாலுங்கூட, ஒரு படிவத்தில் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள்; ஒரு பார்மட் என்று சொல்கிற படிவத்தில் இருக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். அந்தப் படிவத்தில் இருந்ததா என்பதனையும்—அந்தக் கடிதம் எழுதப்பட்டிருக்கிறதே, எந்தச் சூழ்நிலையில் எழுதப்பட்டது என்பதைப் பற்றிய ஆராய்ச்சிக்கு நான் போகவில்லை என்றாலும்—அந்தக் கடிதம் இங்கே வந்ததே, இப்போது கடிதத்தினுடைய உறை, அந்தக் கடிதம், அது தொடர்பான ஆவணங்கள் அத்தனையும் இங்கே அவையிலே வைக்கப்படுமா? அவையிலே வைக்கப்படவில்லையென்று சொன்னால்கூட, சபாநாயகர் அவர்களுடைய அறையிலே வைக்கப்படுமா? அப்படி வைக்கின்ற ஒரு நிலை வருகிறபோது, இங்கு 'இருக்கின்ற கட்சித் தலைவர்கள் அத்தனை பேரும் அதனைப் பார்வையிடுவதற்குரிய வாய்ப்பு ஏற்படுமோ! ஒரு ஆவணம் என்பதனை சாதாரணமாகக் கொடுத்து விடமுடியுமா?

நான் மாண்புமிகு சபாநாயகர் அவர்களுடைய அனுமதியினைப் பெற்று, இதனை இங்கே இரண்டு வரிகளில்—அதிகமாக நான் படிக்கவில்லை—இரண்டே வரிகளில்—இதனுடைய தலைப்பு—'பிரிவிலெஜஸ் டைஜஸ்ட்'—வால்யூம் 33—அக்டோபர் 1988—நம்பர்-2—இதிலே சுருக்கத்தை மட்டும் படிக்கிறேன். காலத்தின் அருமை கருதியும், அவர்கள் அனுமதித்த அந்த நேரத்தை நான் அதிகமாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்ற நோக்கத்தோடும்.

"Privileges Digest"—Vol. 33—Oc'ober 1988—No. II—

**Request from Central Bureau of Investigation for handing over original letters and telegrams addressed to the Speaker, Lok Sabha by a Member of Lok Sabha and a Member of Rajya Sabha :—**

The Committee recommended that the three documents which were available in the Lok Sabha records could be inspected and photo-copies thereof taken by the Central Bureau of Investigation, if so desired.

House agreed wi h the report of the Committee and the photo-copies of documents were made available to the Central Bureau of Investigation.

திரு. தங்கராஜ் என்ற பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்ற சபாநாயகர் அவர்களுக்கு எழுதிய கடிதத்தை, எங்களுக்கு வேண்டும் என்று கேட்ட நேரத்தில், கேட்டது யார்? 'சென்டிரல் பீரோ ஆப் இன்வெஸ்டிகேஷன்—சி.பி.ஐ. கேட்கிறது. சி.பி.ஐ. கேட்கின்ற நேரத்திலேகூட, 'நீங்கள் இதனை இங்கே வந்து பார்வையிடலாம்; வேண்டும் என்றால் இங்கே போட்டோ காப்பி

எடுத்துக்கொள்ளலாமே தவிர, இதனைத் தர இயலாது. நீங்கள் இதனை நீதிமன்றத்திலே வைக்கவேண்டும் என்று கேட்டாலொழிய, அதையும் முறைப்படி கேட்டாலொழிய நான் உங்கள் கைக்கு அதைத் தரமுடியாது' என்று எழுதுகிறார்கள்.

மீண்டும் அந்த வேண்டுகோள் வருகிறது அந்தப் போலீஸ் அதிகாரியிடமிருந்து. அதற்கும் பதில் எழுதுகிறார்கள் :

"Request from the Deputy Inspector-General of Police and Superintendent of Police, Central Bureau of Investigation, Special Investigation Cell No. II New Delhi for handing over the original letter, dated 25th February 1988 addressed to the Speaker, Lok Sabha by a Member and certain other documents :—

Committee held that there was no reason to change the views expressed by them in the First Report relating to the recommendation made by the Committee on Privileges in their First Report, viz., that the original documents may not be handed over *I repeat, the original documents may not be handed over—unless the same may be required to be produced in a Court of Law.

House agreed with the Report."

(முற்பகல் 9–30)

அது 'கோர்ட் ஆப் லா'-வுக்கு, நீதிமன்றத்திற்குத் தேவை என்றால், மட்டுமே, அது தேவை என்பது சரிதான் என்று நமது அவைத் தலைவர் ஒத்துக்கொண்டால் மட்டுமே அது கொடுக்கப்படுமே தவிர, போலீசுடைய பரிசோதனைக்கோ, பரிசீலனைக்கோ, ஆய்வுக்கோ கூட அந்த ஒரிஜினல் கடிதம் கொடுக்கப்பட மாட்டாது என்று சொன்னால், இங்கே போலீஸ் அதிகாரிகள் அந்த ஒரிஜினல் கடிதத்தை எப்படி கையாண்டு இருக்கிறார்கள்; அதனுடைய புனிதத்தைப் பற்றி அவர்கள் என்ன எண்ணியிருக்கிறார்கள்; அந்தக்கடிதம், உண்மையிலேயே கையால் எழுதப்பட்ட அந்தக் கடிதம் அவைத் தலைவருக்கு என்று எழுதப்பட்ட அந்தக் கடிதம் அவைத் தலைவருக்கு அனுப்புகின்ற நோக்கத்தோடு வைக்கப்படவில்லை. எழுதியது எல்லாம் அனுப்பப்பட வேண்டும் என்று இல்லை. ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்பதற்காக முனைந்து நாம் செய்கிறபோது அதை முற்றும் முழுமையாக நிறைவேற்றித்தான் தீரவேண்டும் என்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது.



ஒருவருக்கு 10 லட்சம் ரூபாய்க்கு ஒரு செக்—காசோலையை எழுதி வைக்கிறோம் என்று வையுங்கள். ஒரு போலீஸ் அதிகாரி சோதனையிடுகிறார். காசோலையைக் காண்கிறார், ஓகோ, ஓகோ ராமசாமிக்கு 10 லட்சம் ரூபாய்க்கு காசோலை எழுதப்பட்டிருக்கிறது. எனவே ராமசாமிக்கு இந்த 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை கொண்டு போய்க் கொடுத்து விடலாம் என்று அவர் முடிவு எடுக்கலாமா? அது என்ன ? ஏது? ஏன் எழுதப்பட்டிருக்கிறது: இது நமக்குச் சம்பந்தம் இல்லையே என்று தானே விட்டுப் போகவேண்டும். அதனை விட்டு எடுத்துக்கொண்டு போய் கொடுப்பதுஎப்படி? சரி எடுத்துக்கொண்டுபோய் கொடுத்த உடனே ஒரு எதிர்கட்சித்தலைவருடைய கடிதம் ; யார் கொண்டு வந்து கொடுத்தார்கள் என்று வெளியே சொல்ல முடியாத நிலையில் ஒரு கடிதம் வந்தது, ராஜினாமா கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று எந்த வகையில் சபாநாயகருடைய அலுவலகத்திலிருந்து தகவல் வெளியே வருகிறது? அது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று சொன்னால், அதற்குப் பின்னால் என்ன செய்து இருக்கிறார்கள் என்று படிப்படியாகப் பார்க்கிறபோது ஏற்றுக்கொள்ளப்பட்டது எந்த வகையில் நியாயம் என்பதை நான் முதலில் சொல்ல விரும்புகிறேன். நம் விதி சரியாகச் சொல்கிறது; ஒரு கடிதம் அந்தப்படிவத்தில் இருக்கவேண்டும், அந்தப் படிவத்தில் இருக்கவேண்டும் என்பது மட்டும் அல்லாது வடிவத்திலும் இருக்க வேண்டும். அந்த வடிவத்தில் இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்லாது அது உள்ளப்பூர்வமாக எழுதப்பட்டதாக இருக்க வேண்டும். உளப்பூர்வமாக இருக்க வேண்டும் என்பது மட்டும் அல்லாது அதைக் கொடுப்பதற்கு நேரில் வரவேண்டும்; அப்படி நேரில் வரவில்லை என்று சொன்னால் உங்களுக்குத் தெரிந்து நீங்கள் கடிதம் அனுப்பித் தான் வந்ததா என்று கடிதம் எழுதி கேட்டு விளக்கம் பெற்று அதன்பிறகு தான் அந்த ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டதாக முடிவு செய்யவேண்டும் இல்லை என்றால் அந்த உறுப்பினரை அழைத்து இது நீங்கள் உங்களுடைய மனப்பூர்வமாக விரும்பி எழுதப்பட்டதா? இப்படி கேட்கவேண்டும்; இது நீங்கள் விரும்பி கொடுத்து அனுப்பியது தானா அல்லது கொடுத்தது தானா என்று கேட்கவேண்டும். இந்த இரண்டையுமே கேட்காமல் அந்த ராஜினாமா உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டது என்று அறிவிப்பதற்கு காரணம் என்ன? அந்த ராஜினாமா என்று சொல்லுகின்ற கடிதம் எப்படி வந்தது என்ற ஒரு வினாவை நான் தொடுத்தேன்.

அந்தக் கடிதம் வந்த நாள் ஒரு விடுமுறை நாளாக இருந்த போதிலும், அலுவலகப் பணி நேரம் முடிந்தநேரமாக இருந்த போதிலும் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள் பாராட்டிக்கொண்டிருக்கின்ற—ஒரு பெருமைக்குரிய தலைவரைப் பாராட்டிக்கொண்டு—இருக்கின்ற பாராட்டு விழாவில் கலந்து இருக்கின்ற நேரத்தில் முதலமைச்சர் அழைப்பு அங்கே போலீஸ் ஒலிபெருக்கி மூலம் வந்து, சபாநாயகர்

நேரில்சென்று தானே பார்வையிடுகின்ற நிலை ஏற்பட்டு இருக்கிறது, அது எப்படி ஏற்பட்டது? மாண்புமிகு சபாநாயகர் அவர்களே நாம் பக்கத்தில் பக்கத்தில் இருந்த காரணத்தால் நான் அதைச் சொல்லவில்லை. அப்படிச் சொன்னால் நான் ஒரு குற்றத்தைச் செய்தவன் ஆவேன். நீங்களே ஒலிபெருக்கியில் அதைத் தெரிவித்தீர்கள், முதலமைச்சர் அழைக்கிறார் என்று. அதைப் பத்திரிகைகளில் மறுநாள் பிரசுரித்தார்கள். நீங்கள் இந்த அவையினுடைய தலைவர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நான் மிகச்சிறந்த மரியாதை கொடுக்கிறேன். ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்றவர்கள் அவர்கள். ஆனால் அவர் இந்த ஆளுகின்ற பொறுப்பில் இருக்கின்ற முதலமைச்சராக இருந்தாலும் இந்த அவையைப் பொறுத்தவரையில் உண்மையிலேயே உங்களை நம்பித்தான் அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய பாதுகாப்பை நம்பித்தான் இந்த அவையில் இருக்கின்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். எனவே உங்களை அவர் அழைத்தார் என்று சொல்லுகின்ற செய்தி எங்களுக்குக் கொஞ்சம் மன வேதனைப்படுவதாகத் தான் இருந்தது. ஒருவருக்கொருவர் பேசுவதிலே தவறு இல்லை.

ஆன்ால் நீங்கள் அவைத் தலைவராக இருக்கின்ற காரணத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நமக்கு எந்த வகையில் பெருமைக்குரியவராக இருந்தாலும் அந்த ஆசனத்திற்குரிய மரியாதையின்படி அவர்கள் உங்களை வந்து பார்க்கவேண்டும் என்பதுதான் நியாயமே தவிர நீங்கள் அவர் அழைத்துச் சென்று பார்க்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய பணிவான வேண்டுகோள். எந்தச் சூழ்நிலையில், அவ்வளவு அவசரம்; அவ்வளவு விரைவு; அவ்வளவு வேகம்? உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டது ராஜினாமா என்று சொல்லுவதற்கு என்ன காரணம்? அப்படிச் சொல்லவேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? சரி, அடுத்தாற்போல் இது பரிசீலனையில்தான் இருக்கிறது என்று முதலமைச்சர் எப்படிச் சொல்கிறார். மறுநாள் பத்திரிகைகளில் செய்தி வருகிறது, இது பரிசீலனையில்தான் இருக்கிறது என்று. பரிசீலிக்க வேண்டியது நீங்கள். முதலமைச்சர் உட்பட இந்த அவை. இந்த அவைக்கு முன்னால், 'பிரைமா பேசி' என்று சொல்லுகின்ற அளவுக்கு எல்லாம் இதிலே போகாமல் அந்த genuineness இருக்கிறதா என்று பார்த்து நீங்களே முடிவு செய்யலாம். அப்படி இருக்க இது பரிசீலிக்கப்படுகிறது என்று முதலமைச்சர் எப்படிச் சொன்னார் ? அப்படிச் சொல்லுகின்றபோது இதுவரை மீறப்பட்டது ஒரு அவை உறுப்பினருடைய உரிமை ; இதுவரை மீறப்பட்டது ஒரு எதிர்க்கட்சித் தலைவருடைய உரிமை; இப்போது சபாநாயகருடைய உரிமையே மீறப்பட்டிருக்கிறது. ஆக, சபாநாயகருடைய உரிமை மீறப்படுகின்ற காரணம் என்ன? இப்படி ஒரு சூழ்நிலை உருவாவானேன்? இதுவரையிலும் சட்டமன்றத்திலே இப்படி ஆகாத சூழ்நிலை உருவாவதற்கு என்ன காரணம் என்று நாம் சிந்திக்கவேண்டுமென்று நான் உங்களை அன்போடு வேண்டுகிறேன்.



இன்னும் ஒரு செய்தியை இது தொடர்பாக நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், போலீஸ் அந்தக் கடிதத்தைக் கைப்பற்றி மகஜர் தயாரித்தனர். அதற்குப் பிறகு முரண்பட்ட செய்திகளைச் சொல்கிறது. அப்படிச் சொல்கிற இந்தப் போலீஸ் இலாக்கா, நமது அமைச்சர்களும், முதல் அமைச்சர் அவர்களும் பரிசீலனையிலே இருக்கிறது என்று சொன்னதற்குப் பிறகு எப்படி நடந்து கொள்கிறது என்று நாம் பார்க்க வேண்டும். அவர்களிடமிருந்து செய்தி எதுவும் வரமாட்டேன் என்கிறது. அதுவரையில் செய்தி சொன்னவர்கள் சும்மா இருக்கிறார்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்களோ என்ன சொல்கிறீர்கள் என்று சொன்னால், வெளியே ஒரு இடத்திலே பேசுகிறபோது, அந்தக் கடிதத்தைக் கிழித்து எறிந்து இருக்கலாம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். கிழித்து எறிவது கிழித்து எறியாமல் வைத்திருப்பது அந்தந்த உறுப்பினரைப் பொறுத்த விருப்பம். அது அவர்களுடைய முடிவு. நாம் அதைப் பற்றிச் சொல்வதற்கு இல்லை. நம்மைப் பொறுத்தவரையிலே இந்தக் கடிதத்தை முறையற்ற முறையிலே எடுத்து, முறையற்ற முறையிலே பிரசுரித்து, முறையற்ற முறையிலே உங்களுக்கு வருமாறு செய்து, அவை உரிமை மீறலைச் செய்திருப்பது இந்த போலீஸ் இலாக்கா. போலீஸ் இலாக்காவை மட்டுமே குற்றம் சொல்லி விட்டுப் போவது எனக்குத் திருப்தியாக இருக்கலாம். ஆனாலும் அது கூடாது. நம்மைப் பொறுத்தவரையிலே அரியலூரிலே ரயில் விபத்து நடந்தால், 'அரியலூர் அழகேசா' என்று நாம் பேச ஆரம்பித்து விடவில்லையா? அடுத்து லால்பகதூர் சாஸ்திரி ஒரு பக்கத்திலே பொறுப்பேற்று, அவர் என்ன செய்தார் என்று உங்களுக்குத் தெரியும். அதை நான் இங்கே சொல்ல மாட்டேன்; அதனாலே சொல்கிறேன். என்ன செய்தார் என்று உங்களுக்குத் தெரியும். டி. டி. கே. அவர்கள் எப்படி நடந்து கொண்டார் என்பது உங்களுக்குத் தெரியும். நான் அதனாலே, அதைப்போலவே இங்கே நீங்கள் செய்யவேண்டுமென்று பேசுகிறேனோ என்று எண்ணி விடவேண்டாம் என்பதற்காகத்தான் அதனைச் சொல்கிறேன். ஆனாலும் கூட அரியலூரில் நடந்த ரயில் விபத்திற்கு லால்பகதூர் சாஸ்திரி எந்தவகையிலே காரணமாக ஏற்றுக்கொண்டார்? தேசியமயமாக்கப்படுகின்ற செய்திகள் வருகின்ற நேரத்திலே, மரியாதைக்குரிய டி. டி.கே. அவர்கள் எப்படி நடந்துகொண்டார்? இன்னும் ஒருபடி மேலே போய் சொன்னால் 'போன் டேப்பிங்' என்று வந்ததற்குப் பிறகு, தி நேஷனல் பார்ட்டி என்று சொல்கிறோமே, ஏழு கட்சி கூட்டணி என்று சொல்கிறோமே அதனுடைய தலைவர்களிலே ஒருவராக இருக்கிற . ஹெக்டே—அவர் முதல்வராக இருந்தவர்-'போன் டேப்பிங்' நடந்ததற்குப் பிறகு அவர் எடுத்த நிலை என்ன என்பது உங்களுக்குத் தெரியுமே. 'லெட்டர் டேப்பிங்' தானே இப்போது நடந்து இருக்கிறது. 'போன் டேப்பிங்' குற்றம் என்றால் 'லெட்டர் டேப்பிங்' குற்றம் அல்லவா? அந்த லெட்டர் டேப்பிங்' மட்டும் அல்லாது, அதையே எழுதியவருக்கு

விரோதமாக, ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்படுவது குற்றம் அல்லவா? அவைகளையெல்லாம் பார்க்கின்றபோது, நீதிமன்றத்தினுடைய உரிமை மீறப்படுவதற்கும், இந்த அவையி னுடைய உரிமை மீறப்படுவதற்கும், ஒரு உறுப்பினருடைய உரிமை மீறப்படுவதற்கும், ஒரு சபாநாயகருடைய உரிமை மீறப்படுவதற்கும் எல்லாம் மூலமாக அமைந்து விட்டது இந்த போலீஸ் இலாக்கா என்றால் அந்த போலீஸ் இலாக்காவை நிர்வகித்து வருகின்ற நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த உரிமையை மீறியிருக்கின்றார்கள் என்று தானே பொருள் படும்? மூலம் எங்கிருக்கிறதென்றுதானே பார்க்க வேண்டும். அதன் மூலம்தானே இந்த ஜனநாயகத்தை நாம் காக்க வேண்டும். அதனாலே இதில் உரிமை மீறப்பட்டிருக்கிறதென்பதையும் இப்படி ஜனங்களுடைய, மக்களுடைய ஜனநாயக உரிமைகள் மீறப்பட்ட நேரத்திலே மற்றவர்கள் என்ன செய்தார்கள் என்பதையும் சுட்டிக் காட்டுவதற்குரிய காரணம், இதனை நினைவுபடுத்துவதற்கே தவிர, சரித்திர சம்பவங்களை இங்கே சமர்ப்பிப்பதற்கே தவிர, உங்களுடைய நினைவுக் குள் கொண்டு வருவதற்கே தவிர அது அப்படியே போய்விடும் என்ற நம்பிக்கையிலே அல்ல. அதன்மூலம் நீங்கள் செயல் படுவீர்கள், அவைகளை நீங்கள் வழிகாட்டுத் துறையாக, டைரக்டிவ்ஸ்-ஆக எடுத்துக்கொள்வீர்கள், கைடுலைன்ஸ்-ஆக எடுத்துக்கொள்வீர்கள். எடுத்துக்கொண்டு மற்ற தலைவர்கள் எந்தெந்த வகையிலே தங்களை ஆட்படுத்திக்கொண்டார்களோ, தங்களை நடத்திக் கொண்டார்களோ அந்த வகையிலே நடத்திக் கொள்வீர்களென்ற காரணத்திற்காக இந்த அவை உரிமை மீறலைச் செய்திருக்கின்ற போலீஸ் துறை மீதும் போலீஸ் துறை ஆணையர் மீதும் உள்துறை பொறுப்பு வகித்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் மீதும் அவை உரிமைப் பிரச்சினையை, அவை உரிமை மீறல் நடந்து இருக்கிறது என்ற காரணத்திற்காக, இதை அவை உரிமை மீறல் குழுவிற்கு நீங்கள் அனுப்புவதோடு (மேசையைத் தட்டும் ஒலி) முழுக்க ஆராய்ந்து, எந்தெந்த வகையிலே யார் யார் தவறு செய்தார்கள் என்பது அத்தனையையும் வெளியே கொண்டு வருகின்ற வகையிலே, உரிமைக்குழுவிற்கு நீங்கள் அனுப்பவேண்டு மென்று கேட்டு அமைகிறேன். வணக்கம்,

*திரு. எஸ், திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உரிமை மீறல் குறித்து தங்களின் அனுமதிக் காக அனுப்பப்பட்டு இருந்தபோது இருந்த சூழ்நிலையைக் காட்டிலும் இப்போது மிக மோசமான சூழ்நிலைகள், பதட்ட நிலை தமிழகத்திலே ஏற்பட்டுள்ளது. எதிர்க் கட்சித் தலைவ ராக இருக்கிற, இந்த அவையினுடைய சட்டமன்ற உறுப்பினரின் உரிமை மீறப்படும் விதத்திலேயும், இந்தச் சபையினுடைய



சபாநாயகரான உரிமை, மீறப்படுகின்ற விதத்திலேயும் விதத்திலேயும் உங்களுடைய உரிமையும் மீறப்படும் இந்த உரிமை நடைபெற்ற நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி வேண்டுமென்று மீறலை உரிமைக் குழுவிற்கு அனுப்ப அதை ஏற்கெனவே கொடுத்திருந்தோம். அதை ஒட்டி, எழுப்ப முயன்றபோது, சட்டமன்றத்திலே துர்பாக்கியவசமாக சட்டமன்றத்தினுடைய வரலாற்றிலே இல்லாத அளவுக்கு, ஏன் தமிழக சட்டமன்றத்திலே மட்டுமல்ல. இந்திய நாடாளு மன்றத்திலே, மற்ற சட்ட மன்றங்களிலே அல்லது உலகத்திலே இல்லாத அளவுக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற ஒரு பெண்[illegible]டைய சேலையைத் தொட்டு இழுத்து மானபங்கப் படுத்துகி[illegible]ற அந்தச் சூழ்நிலை இந்த மன்றத்திலே உருவானது மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

(முற்பகல் 9–40)

அந்த உரிமை மீறல் பிரச்சினையை ஒட்டி அப்போதே ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் கொடுத்திருந்தோம். எதிர்க்கட்சித் தலைவர் உட்பட பலர் மீது பொய் வழக்குகள் போடப்பட்டு, அதைப்போல தமிழ்நாடு முழுவதும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் இப்படி பலரும், கட்சியினுடைய முக்கியத் தலைவர்களும், தொண்டர்களும், பொதுமக்களும் கைதுசெய்யப்பட்டு, சிலபேர் மட்டுமே கணக்கிலே காட்டப்பட்டு பல்லாயிரக்கணக்கிலே கைது செய்யப்பட்டவர்கள், இன்றைக்கு சிறையிலே அடைக்கப்பட்டுள்ளனர். அப்படி முக்கியஸ்தர் கள் சிறையிலே அடைக்கப்பட்டு, அவர்களுடைய வீடுகள், கடைகள் நொறுக்கப்பட்டுள்ளன. உதாரணத்திற்கு எங்கள் கட்சியினுடைய மாவட்டச் செயலாளர்களுடைய வீடுகள் பல இடங்களிலே நொறுக்கப்பட்டுள்ளன. நம்முடைய சட்ட மன்றத்திலே கூட காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவ ராக இருக்கிற மாண்புமிகு குமரி அனந்தன் அவர்களுடைய தம்பியினுடைய கடை, வீடு உட்பட பலருடைய வீடுகளும் கடைகளும் தாக்கப்பட்டு பல சூழ்நிலைகள் ஏற்பட்டுள்ளன. எனவே, அவற்றை எல்லாம் முதலிலே எடுத்துக்கொண்டு, இந்த உரிமை மீறல் பிரச்சினையை எடுத்துக்கொள்வதற்கு முன்பாக ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண் டும். இருந்தாலும், நீங்கள் இந்த உரிமை மீறல் பிரச்சினையை எடுத்து விவாதிக்க அனுமதித்து இருக்கிறீர்கள். அது முடிந்த பின்னால் அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி தரு வீர்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

இந்த உரிமை மீறலைப் பொறுத்தவரை நம்முடைய காங் கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர் கள் சுட்டிக்காட்டியதைப் போல இந்தக் கடிதம் 15-ம் தேதி எழுதப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 18-ம்

தேதி இரவு உங்களுக்குக் கிடைத்து, நீங்களும், அது கிடைத்ததாக பத்திரிகைகளுக்குச் சொல்லியிருக்கிறீர்கள். அந்த ராஜிநாமா ஏற்கப்பட்டது என்று நீங்கள் அறிவித்ததாக ஒரு பத்திரிகையிலே விடியற்காலையிலே செய்தி வந்திருக்கிறது. இன்னொரு பத்திரிகையிலே நடவடிக்கைக்காக துறையினுடைய செயலாளருக்கு அனுப்பியிருக்கிறேன் என்று நீங்கள் சொன்னதாக தகவல் வந்திருக்கிறது. ஆக, இந்தத் தகவல்களுக்கிடையே இந்தக் கடிதம் எழுதியது சம்பந்தப்பட்ட உறுப்பினர் அவரது விருப்பத்தோடு எழுதினாரா, அனுப்பினாரா என்பதை அறிந்துகொள்ள நீங்கள் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் இங்கே நாங்கள் சுட்டிக்காட்ட வேண்டியது எங்களுடைய கடமையாகும். ஏனென்றால் அவையினுடைய விதிப்படி கடிதம் வந்தவுடனே அந்தக் கடிதத்தை எழுதியவர் அவருடைய விருப்பத்தோடு எழுதினாரா என்பதை முதலிலே ஆராய்ந்த பின்னால்தான் அதன்மீது நடவடிக்கை எடுக்கமுடியும். அதை அறிந்துகொள்ளாமலேயே அவசரம் அவசரமாக செயல்பட வேண்டிய சூழ்நிலை, துர்பாக்கியமான நிலைமை பேரவைத் தலைவருக்கு ஏற்பட்டிருக்கிறது என்றுதான் நாங்கள் கருதுகிறோம்.

அதற்கு அடுத்து, 18-ம் தேதி எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா அவர்களுடைய குடும்ப நண்பர் நடராஜன் அவர்கள் வீட்டிலே சோதனையிட்டபோது, சோதனை முடிந்த பின்னால் போலீசார் தருகிற ரசீதிலே அது மிகத் தெளிவாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. ஒரு கடிதம் கைப்பற்றப்பட்டிருப்பதாகவும், அந்தக் கடிதம் ஒட்டி சீல் வைக்கப்பட்டிருப்பதாகவும், அது எதிர்க்கட்சித் தலைவரால் பேரவைத் தலைவருக்கு எழுதப்பட்டிருப்பதாகவும், வெளியே முகவரி இட்டிருப்பதாகவும், இவை எல்லாம் தெரிந்ததற்குப் பின்னாலும் உடைத்துப் பார்த்தோம் என்று காவல் துறையினர் சோதனையிட்ட பின்னால் ரசீது தருகிறபோது ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறார்கள்.

எனவே, பேரவை உறுப்பினருடைய கடிதம் கிழிக்கப்பட்டிருக்கிறது. அதன் மூலம் பேரவை உறுப்பினருடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது காவல் துறையினரால். அதுவும் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் எதிர்க்கட்சித் தலைவருடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது. சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தைக் கிழித்த காரணத்தினால் சபையினுடைய உரிமை மீறப்பட்டிருக்கிறது. சபாநாயகருக்கு அது முகவரி இட்டு எழுதப்பட்ட கடிதம் என்பதால் சபாநாயகருடைய உரிமையும் காவல் துறையினரால் மீறப்பட்டிருக்கிறது. இத்தனை உரிமைகளும் காவல் துறையால் பறிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இது அன்று எடுக்கப்பட்ட கடிதம்தான் தங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்பதற்கு 'கைப்புண்ணுக்கு எப்படி கண்ணாடி தேவை இல்லையோ அதைப் போல' அன்று மாலையே நடராஜன் அவர்களுடைய வீட்டிலே சோதனை நடக்கிறது.





அன்று மாலையே அந்தக் கடிதம் உங்களுக்கு வருகிறது. அதனுடைய நகல் எடுக்கப்பட்டு எல்லா பத்திரிகைகளுக்கும் இரவோடு இரவாக அனுப்பப்படுகிறது. அன்று இரவே நீங்களும் அவசரம், அவசரமாக இந்தக் கடிதம் வந்ததாக சபாநாயகர் அவர்களே, நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். எனவே இது அன்றைக்குத்தான் நடந்தது. அன்றைக்குத் தான் உங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. காவல் துறையினுடைய ரசீதிலே சொல்லப்பட்டதுபோல் அன்று எடுக்கப்பட்டு காவல் துறையால்தான் தங்களுக்குத் தரப்பட்டுள்ளது என்பதற்கு வேறு சான்றுகள் தேவையில்லை. எனவே இந்த அத்து மீறலை காவல் துறையினர் அத்து மீறிச் செய்துள்ளனர்.

ஏற்கெனவே திரு. நடராஜன் மீது போடப்பட்ட பொய் வழக்கை ஒட்டி, அந்த வழக்கிற்கு சம்பந்தம் இல்லாத சட்டமன்றத்தினுடைய மாண்புமிகு பேரவையினுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் பேரவைத் தலைவருக்கு எழுதப்பட்ட கடிதத்தைக் காவல் துறையினர் சட்டத்திற்குப் புறம்பாக எடுத்துச் சென்று அதைக் கிழித்து அந்தக் கடிதத்தை உங்களுக்கு, பேரவைத் தலைவருக்கு அனுப்பி இருக்கிறார்கள். எய்தவன் இருக்க அம்பை நோவதில் பயன் இல்லை. காவல் துறையினுடைய இந்தக் காரியங்களுக்குத் தார்மீக ரீதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டியவர்களாகிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்கள் சுட்டிக் காட்டியது போல் வெளியே ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த போது நீங்கள் அவசரம் அவசரமாக அழைக்கப்பட்டு, காவல் துறையால் எடுக்கப்பட்ட இந்தக் கடிதம் ஏதோ ஒரு மாபெரும் புதையல் கிடைத்ததைப் போன்ற உணர்வோடு வேகமாக உங்களிடத்தில் சேர்க்கப்பட்டு, அதன் மூலமாக எதிர்க்கட்சியை அழிக்க, எதிர்க் கட்சித் தலைவருடைய பதவியைப் பறிக்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய புகழைக் குறைக்கிற விதத்தில் இந்தச் செயல்பாடுகள் சட்டத்திற்குப் புறம்பாக அவசரம், அவசரமாக நடைபெற்றுள்ளன.

எனவே இவை அனைத்துக்கும் தார்மீக ரீதியாகப் பொறுப்பேற்று இவற்றை எல்லாம் தன்னுடைய தலைமையிலேயே செய்த காவல் துறை ஆணையாளர் அவர்களும், காவல் துறைக்கு உத்தரவிட்டு அனுமதி தந்து இந்தச் சட்டத்திற்குப் புறம்பான, சட்டமன்ற உறுப்பினர்கள் அதிலும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுகிற விதத்தில் இந்தக் காரியங்கள் எல்லாம் நடப்பதற்குத் துணையாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இதற்குப் பொறுப்பேற்று, அவர்கள் சுட்டிக் காட்டியதைப்போல தார்மீக ரீதியாகப்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மார்ச் 28

பொறுப்பேற்று ராஜினாமா செய்ய வேண்டும் என்பது தான் இந்த உரிமை மீறல் மூலமாக நாங்கள் வலியுறுத்த விரும்புவதாகும். எனவே இந்த உரிமை மீறல் பிரச்சினையை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று இந்த நேரத்தில் எதிர்க் கட்சியின் சார்பில் நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

இங்கே சட்டமன்றத்தில் இந்தப் பிரச்சினையைக் கொடுத்த போது இது அன்றைக்கே பெரிய பிரச்சினையாக இருந்தது. ஆனால் அதற்குப் பின்னாலே அதைவிட மிக மோசமான சம்பவங்கள் இந்த மன்றத்தில் நடைபெற்றிருக்கின்றன. ஆகவே அதையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு, அந்த உரிமை மீறலையும், அது சபையிலே நடந்த காரணத்தால் சபையிலேயே அந்த உரிமை மீறலை விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

இந்தியாவினுடைய வரலாற்றிலேயே, இன்னும் சொல்லப் போனால் உலகத்திலே எந்தச் சட்டமன்றத்தின் அல்லது பாராளுமன்றத்தின் வரலாற்றிலேயும் இல்லாத அளவுக்கு எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற ஒரு பெண்ணினுடைய சேலை உங்களுடைய அமைச்சரால்—இங்கே நான் பெயரைக் கூட சொல்ல விரும்புகிறேன், திரு. துரைமுருகன் அவர்களுடைய கையாலேயே—இழுக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பக்கம் நான் தான் இருந்து பார்த்தேன். அந்தக் கொடுமையான சூழ்நிலை இந்தச் சட்டமன்றத்தில் நடந்தது. அதை இங்கே இருக்கின்ற பத்திரிகை நிருபர்கள் மற்றும் சபையிலே இருக்கிற அத்தனை பேரும் பார்த்தார்கள். அவர் தாக்கப்பட்டார்; நாங்கள் எல்லாம் அடிக்கப்பட்டோம். இந்தக் கொடுமையான சம்பவத்தால் சபையின் மரபையும், கண்ணியத்தையும் உறுப்பினர்களுடைய உரிமைகளையும் பாதிக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனாலேயே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மானபங்கப்படுத்தப்படுவார் என்ற அந்த உணர்வோடும், பயத்தோடும் ஒரு பெண் என்கிற காரணத்தால் சட்டமன்றத்திற்கு வரப் பயப்படுகிற அந்தச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே இவற்றுக்கெல்லாம் காரணமாக இருந்த சம்பவங்கள் நிச்சயமாக உரிமை மீறல் சம்பவமாகும். எனவே அதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்ற இந்தத் தீர்மானத்தின் வாயிலாக உங்களை நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது குறித்து தனது கருத்து ஏதேனும் தெரிவிக்க விரும்பினால் தெரிவிக்கலாம்.



1989 மார்ச் 28]

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்களும், எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்களும் உரிமைப் பிரச்சினை என்கிற பெயரால் அந்த உரிமைப் பிரச்சினை அனுமதிக்கப்பட்டதைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு விஷயங்களை இங்கே எடுத்துக் கூறி இருக்கிறார்கள். ஒத்திவைப்புத் தீர்மானத்திலே விவாதிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்பியதையும் நிதிநிலை அறிக்கை வெளியிடப்பட்டபோது நடந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும் மிகச் சுதந்திரமாக, அமைச்சர் ஒருவர் குறுக்கிட்டபோது கூட நான் அதைத் தடுத்து நிறுத்தி, கருத்துக்களை இங்கே வெளியிடுகிற வகையில் தலைவர் அவர்களே, தங்களால் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 9–50.)

நேற்றைக்கு நான் குறிப்பிட்டது போல, இந்த அவை கருத்துக்கு கருத்து, கொள்கைக்கு கொள்கை, அரசின் மீது குறைபாடுகள் இருந்தால் அவைகளை எடுத்துரைப்பது, அது போல, எதிர்க்கட்சி மீது குறைபாடுகள் இருந்தால் அல்லது ஒரு காலத்திலே ஆளுங் கட்சியாக இருந்த காரணத்தினால் அந்தக் குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவது, இதுபோன்ற வாதப் பிரதிவாதங்களின் மூலம் வெம்மை இல்லாமல் ஒளி பொருந்திய வாதங்களின் மூலம் இந்த அவை நடக்க வேண்டுமென்று விரும்புகின்றவன் நான். அநேகமாக நடுநிலையோடு சிந்திக்கின்ற எல்லா உறுப்பினர்களும் எல்லாக் கட்சிகளினுடைய தலைவர்களும் அவ்வாறு எண்ணுவார்கள், எதிர்பார்ப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு நிரம்ப உண்டு.

திரு. குமரி அனந்தன் அவர்கள் இங்கே எடுத்துக் காட்டியது போல, இந்த அவைக்கு என்று ஒரு மரபு உண்டு. ஆனால் அந்த மரபுகள், சில ஆண்டுக் காலமாக எந்த அளவுக்கு மீறப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த அவை நிகழ்ச்சிகள் மூலமாக இந்த நாடு மிக நன்றாக உணரும். அவர்கள் வேறு பல நிகழ்ச்சிகளை அடுக்கிக் காட்டிய காரணத்தினால், பதிலுக்குப் பதில் சொல்கிறேன் என்பதல்ல. இதே மன்றத்தில் எதிர்கட்சி வரிசையிலே நான் அமர்ந்திருக்கின்றேன்.

1977-க்குப் பிறகு என்பதை மாத்திரம் நான் சுட்டிக்காட்டவில்லை. 1967-க்கு முன் 1957 முதல், அமர்ந்திருக்கிறேன். எத்தனையோ முதலமைச்சர்கள், நிதி அமைச்சர்கள் வரவு-செலவுத் திட்டத்தை இந்த அவையிலே படித்திருக்கின்றார்கள். பெருந்

தலைவர் காமராசர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, இந்த அவையிலேநான் இடம் பெற்றேன். அப்போது நிதி அமைச்சராக இருந்த திரு. சி. சுப்பிரமணியம் ஆகட்டும், அதற்குப் பிறகு நிதி நிலை அறிக்கை படித்த பெரியவர் திரு. பக்தவத்சலம் ஆகட்டும், எங்களுடைய ஆட்சி கலைக்கப்பட்டு மீண்டும் இந்த அவையிலே முதலமைச்சர் பொறுப்பையேற்றிருந்த எனது அருமை நண்பர் மாண்புமிகு திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஆகட்டும் அல்லது எந்த ஒரு நேரத்திலும் நிதிநிலை அறிக்கை படிக்கப்படுகிற நாளில் வேறு பிரச்சினைகள் எழுப்பப்படுவதும், இந்த பிரச்சினைக்குப் பதில் சொல்லிவிட்டுத்தான் நிதிநிலை அறிக்கை படிக்க வேண்டுமென்று வாதிடுவதும், அந்த வாதத்தை அழுத்தந்திருத்தமாக வலியுறுத்துவதும் இதற்குப் பதில் சொல்லாமல் நிதிநிலை அறிக்கையைப் படிக்காதே என்று ஆணையிடுவதும், தங்களுடைய ஆணையின்படி நிதிநிலை அறிக்கையைப் படிக்கிற நேரத்திலே அதைப் பிடுங்கிக் கிழிப்பதும் எந்த வகை மரபுக்குரியது என்பதை என்னால் எண்ணிப் பார்க்க முடியவில்லை. இந்த அவையிலே ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி--இரு தரப்பிலே உள்ளவர்களும் தாக்கப்பட்டிருக்கிறார்கள். நான் அதற்காக வேதனைப் படுகிறேன். வெட்கப்படுகிறேன், தலை குனிகிறேன். எனக்குள்ள வருத்தமெல்லாம், இந்தக் கலவரம் அன்றைக்கு எப்படி ஏற்பட்டது, ஏன் ஏற்பட்டது என்பதை இந்த அவையிலே உள்ள அரசியல் நாகரீகம் படைத்த கண்ணியம் மிகுந்த சிலர் கூட எடுத்துச் சொல்ல மறுக்கிறார்களே என்பதுதான் எனக்குள்ள வேதனையெல்லாம். அரசியல் கருமேகங்கள் அவர்களுடைய உள்ளத்தை மறைத்திருக்கின்ற காரணத்தினால் அவர்கள் சொல்லாமல் இருக்கலாம். கொஞ்சம் எண்ணிப் பாருங்கள். என்னுடைய அருமை நண்பர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இப்படி ஒரு அறிக்கையை அவர் படிக்கத் தொடங்கி, எதிரிலே உள்ளவர் யாராவது அதைப் பிடுங்கியிருந்தால், இந்த அவை எந்த அளவுக்கு ரணகளமாக ஆகி இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள். யாரும் அப்படிச் செய்யவில்லை. அதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒரு முதலமைச்சருக்கு வருகின்ற களங்கம், அவமானம் இவைகள், இந்த அவையிலே உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும், நான் எல்லோருக்கும் முதலமைச்சர்தான் என்கின்ற வகையிலே இருந்திருக்க வேண்டாமா என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குப் பிறகு நடைபெற்ற நிகழ்ச்சிகள், பத்திரிகைகளில் வந்த செய்திகள், திரு. துரைமுருகன் மீது கூறப்படும் குற்றச்சாட்டுகள் இவைகள் எல்லாம் மறுக்கப்பட வேண்டியவை; மறுக்கக்கூடும் என்றாலும், அதை விவாதப் பொருளாக ஆக்கி, மறுபடியும் அமளியோடு, ஓர் அவையில் நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்ற அவப்பெயரை இந்தியத் திருநாட்டுக்குச் செய்தியாக நான் அனுப்ப விரும்பவில்லை. எனவேதான் மிகுந்த நிதானத்தோடு



ஆனால் ஆணித்தரமாக—என்மீதும், போலீஸ்மீதும் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுச் செய்திகள் என்னுடைய அருமை நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய உரிமைப் பிரச்சினை மீதும், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் தந்துள்ள உரிமைப் பிரச்சினை மீதும்—சில கருத்துக்களை நான் இங்கே எடுத்து வைத்து, உரிமைப் பிரச்சினைக்கு உரியதல்ல இது, என்று எடுத்துக் கூற விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் அவர்கள் தந்துள்ள உரிமை மீறல் பிரச்சினை குறித்த விளக்கத்தில் அவரே குறிப்பிடுகிறார். திரு. நடராஜன் என்பவர் எதிர்க்கட்சித் தலைவர் செல்வி ஜெயலலிதா லலிதா அவர்களுடைய குடும்ப நண்பர் மாத்திரமல்ல. அரசியல் ஆலோசகர் என்று குறிப்பிடுகிறார். இங்கே மீண்டும் அதுபற்றி குறிப்பிட்டார். அவர் எழுதித்தந்துள்ள விளக்க உரையிலும் குறிப்பிட்டுள்ளார். இது விவாதத்திற்குரிய ஒன்றா, அல்லவா என்பதை நண்பர் திரு. குமரி அனந்தன் அவர்கள்தான் எண்ணிப்பார்க்க வேண்டும். எதிர்க்கட்சித் தலைவரின் அரசியல் ஆலோசகராகவும், உதவியாளராகவும் உள்ள திரு. நடராஜன் வீட்டில் சோதனையிட்டு போலீசார் தஸ்தாவேஜுகளைக் கைப்பற்றியுள்ளார்கள் என்று கூறியிருக்கிறார். திரு. நடராஜன் யார், அவர் வீட்டில் இப்படி சோதனையிடலாமா என்பது அவர் எழுப்பிய மிக முக்கியமான வினா. அதற்கு நான் ஒரு விளக்கத்தை இங்கே சொல்ல வேண்டும். அது என்னுடைய கடமை. திரு. நடராஜன் பெயர் இங்கே இழுக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் விளக்கம் கூற வேண்டும்.

கவர்னர் ஆட்சியிலேயே திரு. நடராஜன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் அவர்கள் அ.தி.மு.க.-வின் அதிகாரப்பூர்வமான ஏடான 'அண்ணாவில்' 1—7—1988 அன்று வந்த செய்தியிலும், அதற்குப் பிறகு என்னுடைய அருமை நண்பரும், எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு. திருநாவுக்கரசு அவர்கள், வெளியில் திரு. நடராஜன் பற்றி வெளியிட்ட கருத்து 'பொன்மனம்' பத்திரிகையில் 2—7—1988 அன்று வந்தவுடன் அதுபற்றி விசாரிக்க அரசுக்கு ஒரு குறிப்பு எழுதினார்கள். பத்திரிகையில் வந்த செய்தியில் " திரு. நடராஜன் என்ற நபர் தமிழக அரசின் செய்தித்துறையில் துணை இயக்குநர். (வேறு விஷயங்களும் இருக்கின்றன. அவற்றை நான் படிக்க விரும்பவில்லை. ஆத்திரத்தைக் கிளப்பக் கூடாது என்பதற்காக பத்திரிகையில் வந்த முழுச் செய்தியையும் படிக்க விரும்பவில்லை.) அந்த அரசு அதிகாரி செல்வி ஜெயலலிதா வீட்டில் உட்கார்ந்துகொண்டு அரசியல் கட்சி நடத்துவதை ஆளுநர் அலெக்சாண்டர் எப்படி அனுமதிக்கிறார்? மக்கள் வரிப் பணத்தில் சம்பளம் வாங்கும் அரசு ஊழியர் மீது நடவடிக்கை எடுக்க

ஆளுநர் அவர்கள் முன்வருவார்களா ?'' இது 1–7–1988 ஆம் தேதி அண்ணா பத்திரிகையில் வெளிவந்த செய்தி. இது ஒவ்வொரு நாளும் ஆளுநருக்கு அனுப்பப்படுகிற குறிப்பில்தான் இணைத்து அனுப்பப்பட்டிருக்கிறது. அதுபோல மக்கள் குரல் பத்திரிகையில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அளித்த பேட்டி, அதுவும் ஆளுநருக்கு அனுப்பப்படுகிறது. அதில் அவர் எவ்வாறெல்லாம் சொல்லியிருக்கிறார் என்பதை எல்லாம் நான் இங்கே சொல்ல விரும்பவில்லை. ஏனென்றால் சூடான விவாதமாக மாறக்கூடாது என்பதற்காக சுருக்கமாகச் சொல்கிறேன். மாதம் 2 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கும் திரு. நடராஜன் தினம் 2 ஆயிரம் ரூபாய் வாடகை கொடுத்து ஐந்து நட்சத்திர ஓட்டலில் எப்படித் தங்க முடிகிறது? பணம் எப்படி வருகிறது லட்சக் கணக்கில் செலவிட்டு சொந்த ஊரான கூத்தாநல்லூரில் மருத்துவமனை எப்படிக் கட்ட முடிகிறது? அரசு அதிகாரியாக இருந்துகொண்டு திரு. நடராஜன் கட்சி நடவடிக்கையில் ஈடுபடலாமா என்பதற்கு எத்தனையோ உதாரணம் சொல்ல முடியும்'' என்பதை திரு. திருநாவுக்கரசு தன்னுடைய பொன்மனம் பத்திரிகையில் எழுதியிருக்கிறார்—பைல் என்னிடத்தில் இருக்கிறது — பைல் போன உடனே கவர்னர் அலுவலகத்திலிருந்து முத்திரையிட்டு, இதை எல்லாம் கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டு இந்தச் செய்திகள்மீது உடனடியாக நடவடிக்கை தேவை என்று 2–7–1988-ல் கவர்னர் குறிப்பிட்டு எழுதுகிறார்.

(முற்பகல் 10.00)

அந்தக் குறிப்பின்படி அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கிறது. லஞ்ச ஒழிப்புத் துறை இயக்குநர்— விஜிலன்ஸ் கமிஷனர் —அந்தப் புகார் குறித்து விசாரித்து, அடுத்த மாதம் 2–8–1988 அன்று அரசாங்கத்திற்கு அறிக்கை தருகிறார். அந்த அறிக்கையில் நடராஜன், அ·தி·மு.க. (ஜெயலலிதா) பிரிவு கட்சியோடு தொடர்புகொண்டிருப்பது உண்மைதான் என்றும், அது அரசு அலுவலர் ஒழுங்கு விதிகளுக்குப் புறம்பானது என்றும், அந்தக் கட்சியோடும், அந்தக் கட்சித் தலைவர்களோடும் அவர் சென்ற சுற்றுப்பயணங்கள், மேற்கொண்ட நடவடிக்கைகள் போன்றவற்றுக்கான ஆதாரங்களையும் தொகுத்து விஜிலன்ஸ் கமிஷன் அரசுக்கு தந்தது கவர்னர் ஆட்சியில். அதை ஆங்கிலத்திலே படிக்கிறேன்.

Thiru M. Natarajan, being a Government servant, associated himself with the members and leader Selvi Jayalalitha, A.D.M.K. Party, a political party and actively involved himself in the activities





of the said party, thereby contravening Rule 14 (i) of the Tamil Nadu Government Servants' Conduct Rules, 1973. Thiru M. Natarajan, being a Government servant and employed as Deputy Director, during the period of his medical leave from 26th March 1988 onwards, was found availing lavish hospitality from a private individual Thiru Ashok Kumar of India Factors Limited, Madras by staying in Savera Hotel, Madras and the Trident, Madras and made the said Ashok Kumar pay for the same a total sum of about Rs. 38,500, thereby contravening Rule 3 (i) Explanation (2) Note (2) of the Tamil Nadu Government Servants' Conduct Rules.

இப்படியெல்லாம் அவரைப் பற்றிய ரிப்போர்ட்டுகள் கவர்னர் ஆட்சியிலே அனுப்பப்படுகின்றன. இதைப்பற்றி, இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து கவர்னர் ஆட்சியில் 15 நாட்களுக்குள் பதில் தர வேண்டுமென்று 29—8—1988 அன்று நடராஜனுக்குக் கடிதம் அனுப்பப்படுகிறது. அந்தக் கடிதத்தை 1—9—1988 அன்று நடராஜன் பெற்றுக்கொள்கிறார். விளக்கம் தருவதற்கு மாறாக 15 ஆம் தேதி மேலும் ஒரு வாரம் தவணை கேட்டு, அரசுக்கு நடராஜன் கடிதம் எழுதுகிறார். அதற்கு அரசு மேலும் 15 நாட்கள் தவணை கொடுத்து, 30—9—1988-க்குள் பதில் தர வேண்டுமென்றும், தராவிட்டால் மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் கூறப்படுகிறது. அதற்கு 3—10—1988-ல் பதில் அனுப்பிய நடராஜன், குற்றச்சாட்டுகள் தவறானவை என்றும், வேண்டுமென்றே போடப்பட்டவை என்றும் கூறியதோடு, பத்திரிகைச் செய்திகளையும், குற்றச்சாட்டு குறித்த முழு விவரங்களையும், அறிக்கையையும் தான் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறார். நடராஜனுடைய அந்த வேண்டுகோளுக்கு அரசாங்கம் 2—12—1988 அன்று கவர்னர் ஆட்சியில் எழுதிய பதிலில், பத்திரிகைச் செய்திக் குறிப்புகளை அவர் நேரடியாக அலுவலகத்திற்கு வந்து 15—12—1988 ஆம் தேதிக்கு முன்னால் எப்போது வேண்டுமானாலும் அலுவலக நாட்களில் பார்க்கலாமென்று பதில் எழுதப்பட்டது. ஆனால் அதன்படி நடராஜன் வரவேயில்லை. அந்தச் செய்திகளை அவர் பார்க்கவுமில்லை. மீண்டும் அரசின் சார்பில் 19—12—1988 அன்று கவர்னர் பெருமானுடைய ஆட்சியில், மேலும் 2—1—1989 வரை தவணை நீட்டித்துக் கொடுத்து, அந்தக் காலத்திற்குள் வந்து பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கலாமென்றும், விசாரணை அறிக்கையைப் பொறுத்தவரையில் அது இரகசியமானது என்பதால் அதைப் பார்க்க இயலாது என்றும் பதில் எழுதப்பட்டது. இதற்கு எந்தவிதமான பதிலும் இல்லாததால் அரசாங்க துணைச் 1 சயலாளர் ஒருவரை விசாரணை அதிகாரியாக நியமித்து 5—2—1989 அன்று விசாரணை நடைபெறும் என்றும், அதற்கு

ஆஜர் ஆக வேண்டுமென்றும் நடராஜனுக்கு கடிதம் எழுதப்பட்டது. இதற்கிடையில் நடராஜன் தான் பதவி விலகிவிடுவதாகக் கூறி 3—11—1988-ல் ஒரு கடிதம் அனுப்பினார். ஆனால் அந்த ராஜினாமாக் கடிதம் கவர்னர் ஆட்சியில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் அவர் 1984-ஆம் ஆண்டில் வீடு வாங்கியதற்காக அரசாங்கத்திடமிருந்து 84,500 ரூபாயைக் கடனாகப் பெற்றிருந்தார். மோட்டார் கார் வாங்குவதற்கு முன்பணமாக 80,000 ரூபாய் பெற்றிருக்கிறார். இந்தத் தொகையிலே கட்டியது போக ஒரு லட்சத்து முப்பதாயிரம் ரூபாய் அசலும், மேலும் அதற்கான வட்டியும் இன்னும் பாக்கியாக அரசுக்குத் தர வேண்டியுள்ளது. இந்தப் பாக்கித் தொகை நிலுவையில் இருப்பதாலும், அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை தீராமல் இருப்பதாலும், அவருடைய பதவி விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட இயலவில்லை என்று 8—12—1988-ல் கவர்னர் ஆட்சியில் ஒரு பதில் எழுதப்பட்டது. அவர் பதவி விலகலை ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்காத நிலையில், அவர் அரசு ஊழியராகத்தான் கருதப்படுவார். இது கவர்னர் ஆட்சியினுடைய முடிவு.

இந்த நடராஜனுடைய வீட்டில் சோதனை நடைபெற்றதைத்தான் நம் குமரி அனந்தன் அவர்கள் "எதிர்க்கட்சித் தலைவருடைய ஆலோசகர் வீட்டில் சோதனை நடத்தலாமா" என்று சற்று உணர்ச்சி வயப்பட்டுக் கேட்டார்கள். நான் இங்கே சொல்ல விரும்புவதெல்லாம் 'சபாநாயகர் என்னை அழைத்தார்—அவர் வந்தார்' என்றெல்லாம்இங்கே குறையாக குற்றமாகக் கூறப்பட்டது.

18-ம் தேதியன்று மாலை ஒரு படத்தினுடைய 100வது நாள் விழாவுக்காக நான் புறப்பட வேண்டும். அதற்காக என்னைத் தயார் செய்து கொள்ள வீட்டிற்கு வந்தபோது "சபாநாயகரிடமிருந்து அவசரமாக ஒரு டெலிபோன் வந்ததாகவும், உடனடியாக தன்னோடு நான் தொடர்புகொண்டு பேச வேண்டுமென்று சபாநாயகர் விரும்பியதாகவும்' சொன்னார்கள். நான் "எப்போது வந்தது" என்றேன். "10 நிமிஷத்திற்கு முன்பு" என்றார்கள். நான், உடனடியாக சபாநாயகரிடம் வீட்டில் தொடர்பு கொண்டேன். அவர்—பாம் குரோவ் ஓட்டல் என்று நினைக்கிறேன்—அங்கே ஒரு நிகழ்ச்சிக்குச் சென்றிருக்கிறார் என்று சொன்னவுடன் "என்னிடம் அவசரமாகத் தொடர்பு கொள்ள வேண்டுமென்று விரும்பினாராம். நான் இன்ன இடத்தில்—உட்லண்ட்ஸ் ஹோட்டலில் ஒரு படவிழாவிற்காகச் செல்கிறேன். அங்கே என்னோடு தொடர்பு கொள்ளலாம்" என்று போலீஸ் மூலமாகச் சொன்னது உண்மைதான். ஏனென்றால், மிக அவசரமாக என்னிடத்தில் தொடர்பு கொள்ள வேண்டுமென்று சபாநாயகர் விரும்பினார் என்று சொன்னதால் அப்படிச் சொன்னேன். சொன்னது மாத்திரமல்ல "அவசரமாகச் சந்திக்க வேண்டுமென்றால், அந்த விழாவுக்கு அவருக்கும் அழைப்பு இருக்கிறது,



அங்கே என்னைச் சந்திக்கலாம்" என்றும் சொல்லச் சொன்னேன். போலீசார் உடனடியாக—துரிதமாகச் செயல்பட்டு அவருக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் அந்த விழாவை முடித்துவிட்டு இங்கே வந்தார். வந்த உடனே "என்ன அவசரம்" என்று கேட்டேன். அப்போதுதான் சொன்னார்கள்—"எதிர்க்கட்சித் தலைவர் இராஜிநாமாக் கடிதம் ஒன்று என்னிடத்தில் வந்திருக்கிறது" என்று சொன்னார்கள். "எப்படி உங்களிடத்தில் வந்தது" என்று கேட்டேன். அவர்கள் "விழாவிற்காக புறப்பட்டுக் காரில் ஏறும்போது ஒருவர் கொண்டு வந்து அந்தக் கடிதத்தைக் கொடுத்ததாகவும் அந்தக் கடிதம் கொடுக்கப்பட்டபோதுகூட சபாநாயகர் அவர்கள், ஏற்கெனவே இங்கே இடங்களை, யார் யாருக்கு எப்படி அலாட் செய்வது? "அ.தி.மு.க. (ஜெ) என்று போடுவதா அல்லது (ஜெ) இல்லாமல் அ.தி.மு.க. என்று போடுவதா என்பதை எல்லா உறுப்பினர்களும் கடிதம் மூலம் எழுதித் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன்—அது குறித்த கடிதம்தான் வந்திருக்கிறது என்று கருதி காரில் வந்தபோது பிரித்துப் பார்த்தேன். நான் திடுக்கிடுகிற அளவுக்கு செல்வி ஜெயலலிதா அவர்கள் கையாலே எழுதப்பட்ட ராஜினாமாக் கடிதம் இருந்தது. எனவேதான் காரிலிருந்து இறங்கி உங்களோடு டெலிபோனில் தொடர்பு கொள்ள முயன்றேன். ஆனால் நீங்கள் கிடைக்கவில்லை. அதனால்தான் "அவசரமாகப் பேச வேண்டும்" என்று சொல்லிவிட்டுச் சென்றேன் என்றார்கள். உடனே நான் சொன்னேன், "ஏதாவது அவருடைய கட்சித் தகராறில் உணர்ச்சி வசப்பட்டு, எழுதியிருக்கக் கூடும், எனவே அதை நீங்கள் உடனடியாகப் பயன்படுத்தத் தேவையில்லை. முடிந்தால் நீங்கள் அவரோடு டெலிபோனில்—தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேளுங்கள். அல்லது நாளைக்குக் கேளுங்கள், இதில் அவசரப்பட வேண்டாம்" என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

பிறகு, இந்தச் செய்தி எப்படியோ பரவியது. பரவியதன் காரணமாக, அவரை—சபாநாயகரை—சில நிருபர்கள் சந்தித்து—சந்தித்து அல்ல—டெலிபோனில் தொடர்பு கொண்டு அவரைக் கேட்டிருக்கிறார்கள். அவர் சொன்னதெல்லாம் "ஜெயலலிதா அம்மையாருடைய கையெழுத்தோடு கூடிய ராஜினாமாக் கடிதம் ஒன்று என்னிடம் வந்திருக்கிறது. நான் கடிதத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறேன். மேல் நடவடிக்கைக்காக செயலாளரிடத்திலே கொடுத்திருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

காலையில் பத்திரிகையில் பரபரப்பாகச் செய்தி வந்த உடனே, நிருபர்கள் என்னைச் சந்தித்துக் கேட்டபோது நான் சொன்னேன். "யாரையும் அவையிலிருந்து துரத்துகிற எண்ணம் எனக்குக் கிடையாது" என்று சொன்னேன். நண்பர் குமரி அனந்தன் அவர்கள் —நல்ல வேளையாக இங்கே பேசும்போது

குறிப்பிடவில்லை—ஆனால் விளக்க உரையில் சொல்லியிருக்கிறார்கள். ''10 பேரை ஏற்கெனவே பழிவாங்கியதற்காக இந்த நடவடிக்கையை முதலமைச்சர் எடுத்தாரா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது'' என்று எழுதியிருக்கிறார். நான் அப்படிச் சொல்லவில்லை. ''அவர்கள் காலத்தில் 10 பேரை நடவடிக்கை எடுத்து விலக்கினார்களே, அதுபோன்ற மனப்பான்மை எனக்குக் கிடையாது. யாரையும் துரத்த மாட்டேன்'' என்று சொன்னேன். ஏனென்றால் ஒரு இடைத் தேர்தலை நான் விரும்பவில்லை. அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றுவதை நான் வரவேற்கிறேனே தவிர, அவர் இருக்கக் கூடாது என்ற எண்ணம் எனக்கு இல்லவே இல்லை. அதனால்தான் எப்படி என்னுடைய நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்களும், நண்பர் திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் அவர்களும் சபாநாயகர் அவர்களைச் சந்தித்து ''இந்தக் கடிதத்தை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டாம்'' என்று சொன்னார்களோ—அவர்கள் சபாநாயகரைச் சந்தித்து சொல்ல என்ன உரிமை அவர்களுக்கு இருக்கிறதோ அதே உரிமை—நான் முதலமைச்சர் என்ற முறையில் கூட என்னைப் பெரிதுபடுத்திக் கொள்ளவில்லை—அவர்களுக்குள்ள உரிமைபோல் எனக்கும் உரிமை இருப்பதாகக் கருதிக் கொண்டு சபாநாயகரிடம் ''இந்தக் கடிதத்தை ஏற்றுக்கொள்ள வேண்டாம்'' என்று சொல்லி ''முறைப்படி நடவடிக்கை எடுங்கள்'' என்று கேட்டுக்கொண்டேன். முறைப்படி நடவடிக்கை என்பது அந்தக் கடிதம் நீங்கள் எழுதியதுதானா? சொந்தப் பொறுப்பில் எழுதப்பட்டதுதானா? என்றெல்லாம் கேட்க வேண்டும். அப்படிக் கேட்டதற்குப் பதில் வந்த உடனே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்கலாம் என்றேன்.

''ஆமாம், சொந்தப் பொறுப்பில் எழுதப்பட்டதுதான், ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்று சொன்னால் பதவி விலக்கப்பட வேண்டியதுதான். இல்லை என்று சொன்னால் பதவி விலக்கப்படவேண்டிய அவசியம் இல்லை. சட்டமன்ற விதிமுறைகள் அப்படித்தான் இருக்கின்றன என்பது எல்லா உறுப்பினர்களுக்கும் நன்றாகத் தெரியும். உடனடியாக அவர்கள் அம்மையார் அவர்களுக்கு கடிதம் எழுதினார்கள். ஆனால் அவர்கள் பயந்துபோய் வாங்க மறுத்துவிட்டார்கள். ஏதோ ஒரு கடிதம் ராஜினாமாவை ஏற்றுக்கொண்டு விட்டதாக வந்திருக்கிறது போலும் என்று அறிவிப்பு வந்துவிடும் என்று மெஸஞ்சரைத் திருப்பி அனுப்பி விட்டார்கள், கடிதத்தை வாங்க முடியாது என்று. பிறகு சபாநாயகர் அவர்களிடத்திலே இதுபற்றிச் சொன்னபோது நான் மீண்டும் திருநாவுக்கரசு அவர்களையும், கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களையும் அழைத்துப் பேசுங்கள்; கடிதத்திலே அப்படியெல்லாம் பதவி விலகலை ஏற்றுக்கொண்டதாக இல்லை; விளக்கம் தான் கேட்கப்பட்டது என்று சொல்லுங்கள் என்று சொன்ன பிறகு அவர்கள் இருவரையும்—திருநாவுக்கரசு அவர்களையும், கே. கே. எஸ். எஸ். ஆர். அவர்களையும் அழைத்து, இப்படி மெஸஞ்சரைத் திருப்பி அனுப்பி விட்டார்கள் என்று சொன்னபோது அதற்குள்ளே என்ன இருக்கிறது என்று தெரியாமல் திருப்பி அனுப்பி இருக்கலாம் என்று கூறிவிட்டு அவர்களே அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டுபோய் அம்மையாரிடத்திலே கொடுத்து, அம்மையார் விளக்கம் அளித்து, அதை என் கைப்பட எழுதி இருந்தாலும், நான் அனுப்பவில்லை என்று சொன்ன பிறகு அந்த ராஜினாமா ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எண்ணிப் பார்க்கவேண்டும், பழிவாங்குகிற எண்ணம் சிறிதளவாவது இந்த அரசுக்கு இருக்குமேயானால், அப்போது அந்தக் கடிதத்தைப் பயன்படுத்தி அவர்கள் பதவி விலக்கப்பட்டார்கள் என்று கூறியிருக்க முடியும். அப்படிப்பட்ட குறுகிய மனப்பான்மை இந்த அரசுக்கு நிச்சயமாகக் கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) தயவுசெய்து யாரும் கைதட்ட வேண்டாம்.



(முற்பகல் 10-10.)

நான் இன்னும் சொல்ல விரும்புகிறேன், அன்றைக்கு சூடான நேரத்திலே கூறவில்லை;—இன்றைக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன்—பட்ஜெட் படிப்பதிலே கண்ணும் கருத்துமாக இருந்த காரணத்தால், குறுக்கிட்டு, அந்தக் கருத்துக்களை நான் மறுக்கவில்லை, அன்றைக்குக்கூட அம்மையார் சொன்னார்கள். ''என்னுடைய போன் டேப் செய்யப்படுகிறது; ஒட்டுக் கேட்கப்படுகிறது'' என்று சொன்னார்கள், கவர்னர் ஆட்சி வந்தபிறகு ஒட்டுக் கேட்கின்ற முறையே தவிர்க்கப்பட்டுவிட்டது. ஆக, இன்னும் சொல்லவிரும்புகிறேன், அப்படி ஒட்டுக் கேட்கப்பட வேண்டுமென்கின்ற கருத்து என்னிடத்திலே தெரிவிக்கப்பட்டபோது—இப்போது இங்கு இருக்கிறேன், வேண்டுமானால் பைலை வரவழைத்துப் பார்க்கலாம்; பைலைப் பார்க்க வேண்டுமென்று ரொம்ப ஆசைப்பட்டார் அவர்—அதிலே நான் எழுதியிருக்கிறேன், எந்தக் கட்சித் தலைவர்களுடைய போன்களும் ஒட்டுக் கேட்கப்படக் கூடாது என்று திட்டவட்டமாக எழுதியிருக்கிறேன். அதுமாத்திரமல்ல, இந்த டெலிபோன் டிபார்ட்மென்ட் மேனேஜராக இருக்கிறவர்கூட—திருமதி, மன்னிக்கவேண்டும், செல்வி ஜெயலலிதா அவர்கள் அண்மையிலே தன்னுடைய போன் ஒட்டுக் கேட்கப்படுகிறது என்று கூறியபோது—அவரே மறுத்து எல்லாப் பத்திரிகைகளிலும்—ஆங்கிலப் பத்திரிகை, தமிழ்ப் பத்திரிகைகளிலே எல்லாம் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். யாருடைய போன்களும் ஒட்டுக் கேட்கப்படவில்லை; அதற்கு அனுமதிக்கவில்லை. டெலிபோன் டிபார்ட்மென்ட் எங்களுக்கு சொந்தமானதல்ல; மத்திய அரசுக்குச் சொந்தமானது. மூப்பனார் அவர்கள் கூட இரகசியமாகக் கேட்டுப் பார்க்கலாம், ''ஏதாவது நடக்கிறதா, கருணாநிதி அப்படியெல்லாம் செய்கிறாரா; ஏதாவது கிரிமினல் வேலை நடத்துகிறாரா'' என்று அவரே கூட கேட்டுப் பார்த்துத் தெரிந்துகொள்ளக்கூடிய இடத்தில் இருக்கின்ற காரணத்தால், மனசாட்சிக்கு மதிப்பளித்துத் தெரிந்துகொள்ளுங்கள். இப்போது நிச்சயமாக ஒட்டுக் கேட்கப்படவில்லை.

ஆனால் ஒன்றைமட்டும் ஒத்துக்கொள்கிறேன். 1976-க்கு முன்பு கழக ஆட்சி இருந்தபோது இந்தியாவிலே எல்லா மாநிலங்களிலும் அரசியல் தலைவர்களுடைய போன்கள் ஒட்டுக் கேட்கப்பட்டது உண்மை. அப்போது இருந்த ஆட்சியிலேயும் ஒட்டுக் கேட்கப்பட்டது; அதற்குப் பிறகு வந்த ஆட்சியிலே, எம்.ஜி.ஆர். ஆட்சியிலே ஒட்டுக் கேட்கப்பட்டதும் உண்மை. ஆனால் இப்போது எந்த அரசியல் கட்சித் தலைவர்களுடைய போன்களும் ஒட்டுக் கேட்கப் படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த உரிமைப் பிரச்சினையில் போலீஸ் கமிஷனர் என்ன தகவலைத் தந்திருக்கிறார் என்பதை இங்கே நான் படித்துக் காட்ட வேண்டியது என்னுடைய கடமை. அவர் கூறியிருக்கிறார் ''18—3—1989 அன்று பி.டி தனகோபால், அ.இ.அ.தி.மு.க., தகப்பனார் பெயர் சிங்கமுத்துக் கவுண்டர், ஆரம்பாளையம், வெள்ளப்பாளையம், ஆலமேடு, சேலம் மாவட்டம் என்பவர், தான் ஜெயலலிதா அணியைச் சேர்ந்தவர் என்றும், தமிழ்நாடு சட்டப் பேரவைத் தேர்தலில் திருச்செங்கோடு தொகுதியில் போட்டியிடவேண்டி டிக்கெட் கேட்டு விண்ணப்பித்து இருந்ததாகவும் ஜெயலலிதாவின் நெருங்கிய நண்பரான நடராஜன் மற்றும் சம்பந்தப்பட்ட கமிட்டி உறுப்பினர்கள் வேட்பாளர் தேர்வுக்காக முன் பணம் கட்டுவது சம்பந்தமாகவும் மேற்படி பணம் கட்டுபவர் தேர்தலில் வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப் படாவிட்டால் திருப்பிக் கொடுக்கப்படுமென்றும் தெரிவித்ததால், தான் 20 ஆயிரம் ரூபாய் தொகையை 20–12–1988 அன்று ரசீது 782—பெற்றுக்கொண்டு கொடுத்ததாகவும்'' புகார் கொடுத்தார்கள். அந்தப் புகார்தாரர், மேலும் தான் தேர்தலில் போட்டியிட வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்படாததால் 1–3–1989 அன்று செல்வி ஜெயலலிதா வீட்டுக்கு—போயஸ் கார்டன் சென்று பணத்தைத் திருப்பி கேட்கச் சென்றதாகவும் அப்போது நடராஜனும் மற்றும் 4 பேரும் அவரை சட்டவிரோதமாக ஒரு அறையிலே அடைத்துவைத்து துப்பாக்கி முனையில் மிரட்டி தான் முன் பணமாகக் கொடுத்ததற்காக வைத்திருந்த ரசீதைப் பிடுங்கிக் கொண்டதாகவும், உயிருக்குப் பயந்து புகார் கொடுக்க வந்துள்ளதாகவும் தெரிவித்தார். அவரது புகாரின் பேரில் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுமென்று கமிஷனர் கூறியிருக்கிறார். அதுபோலவே அவர்கள் நீதிமன்றத்திலே ஒப்படைத்திருக்கின்ற அங்கு எடுக்கப்பட்ட அந்த ஆவணங்கள் ஆதாரக் கடிதங்கள் எதிலும் கவரில் சபாநாயகருடைய பெயர் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. குமரி அனந்தன் அவர்களே இங்கு குறிப்பிட்டதைப் போல் அது முத்திரையிடப்பட்டதல்ல ; 'பின்' போடப்பட்டதுதான். சபாநாயகருடைய பெயர் இல்லை. எத்தனையோ முறை என்னுடைய வீடெல்லாம் சோதனை இடப்பட்டிருக்கிறது. பால் கமிஷன் அறிக்கை திருடினேன் என்டதற்காக என்னுடைய வீட்டிலே, திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு, சோதனை நடைபெற்றபொழுது எல்லாத் தாள்களும் எடுக்கப்பட்டன ; எல்லா உறைகளும் பிரித்துப் பார்க்கப்பட்டன.





இது போலீசார் இயல்பாகச் செய்கின்ற காரியம். சில நேரங்களில் போலீசார் அத்து மீறி நடந்துகொண்டிருக்கலாம். அப்படி நடந்து கொண்டிருந்தால் அவைகளுக்கு நடவடிக்கையெடுக்க நான் நிச்சயமாகத் தயாராக இருப்பேன்.

இன்னமும் சொல்கிறேன். இந்த அவைக்குச் சொல்லலாம் என்பதற்காகச் சொல்கிறேன் நடராஜன் மேல் மாத்திரம் அல்லாமல் இந்த வழக்கைப் பதிவு செய்யும்பொழுது கொடுத்த புகாரின்மீது செல்வி ஜெயலலிதா மீது கூடப் புகார். அந்த வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதைப் பத்திரிகைகளிலே பார்த்த நான் உடனடியாகக் கமிஷனரோடு தொடர்புகொண்டு நடராஜன், மற்றவர்களோடு இருக்கட்டும். செல்வி ஜெயலலிதா மீது எந்த நடவடிக்கையும் தேவையில்லை என்று நான் கறாராக அவர்களிடத்திலே சொல்லியிருக்கின்றேன்.

இவ்வளவுக்கும் பிறகு என்மீது ஒரு களங்கத்தையோ, குற்றத்தையோ சுமத்தி, பதவி விலக வேண்டுமென்று சொன்னால், வந்து இரண்டு மாதம்தான் ஆகிறது; அதற்குள் போகச் சொல்கிறீர்களே, நியாயம்தானா என்றுதான் உங்களை நான் கேட்க விரும்புகின்றேன்.

நான் இந்த அறுபது நாட்களிலே, தமிழக மக்களுக்காகப் பலவற்றைச் சிந்தித்து, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்திருக்கின்றேன். அதற்கான பட்ஜெட்டைச் சமர்ப்பித்திருக்கின்றேன் ; அதிலே குற்றங் குறையிருந்தால் நிவர்த்தி செய்யுங்கள்; அவைகளைத் திருத்திக் கொள்ளச் சொல்லுங்கள்; அவைகளை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கின்றேன் என்று கூறி, இந்த அவை தொடர்ந்து அமைதியாக, நாம் நீண்டகாலமாகக் கட்டிக் காத்துவந்த நம்முடைய அரசியல் பண்பாட்டுக்கு எந்த வகையான ஊனமும் ஏற்படாமல் நடத்துவதற்கு அனைவரும் உதவிடவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இதில் உரிமைப் பிரச்சினைக்கு எள்ளளவும் இடமில்லை; ஒரு கிரிமினல் வழக்கு, வெளியிலே நடைபெற்றிருக்கிற கிரிமினல் வழக்கு பற்றி உரிமைப் பிரச்சினை கொண்டுவருவதுகூட அடிப்படையிலேயே சரியானதல்ல என்பதையும் அவைத் தலைவரவர்களே, தங்களுக்குக் கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பல விவரங்களை இங்கே சொன்னார்கள். அதிலே, பத்திரிகையிலே வந்த, நடராஜனைப் பற்றிய செய்திகள், ஒரு அரசு அதிகாரியாக இருந்து, அரசியலிலே கலந்து கொண்டார் என்பது போன்ற குற்றச்சாட்டுகள், ஆளுநர் எடுத்த நடவடிக்கைகள், அதற்கும் இப்பொழுது கொண்டு வந்திருக்கிற உரிமைப் பிரச்சினைக்கும் சம்பந்தமில்லை. ஏனென்றால் அது குறித்து வழக்கும் இல்லை. வழக்கு, இறுதியாக மாண்புமிகு முதலமைச்சரவர்கள் படித்த அந்தப் புகாரையொட்டி எடுக்கப்பட்ட வழக்காகும். அது ஒன்று.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மார்ச் 28

நாங்கள் சொல்வது, அந்த வழக்கு - நீங்கள் பல செக்ஷன் களிலே போட்டிருக்கிறீர்கள், அது நீதிமன்றத்திலே இருக்கிறது; அது சம்பந்தப்பட்டவர்கள் அதற்கு எதிர்மனு செய்து வாதாடு வார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும்.

ஆனால், அந்த வழக்கிற்குச் சம்பந்தமில்லாத, மாண்புமிகு பேரவை உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர் எழுதிய அந்தக் கடிதத்தை நடராஜன் வீட்டிலிருந்து காவல் துறையினர் சட் டத்திற்குப் புறம்பாக, அதைக் கைப்பற்றி, அதிலே இங்கே சொல்கிறபொழுது முகவரி இடப்படவில்லை என்று சொன்னார் கள். அந்த ரசீதிலேயே, ஏழாவது அயிட்டமாகத் தரப்பட்டிருப் பது, நீல நிறப் பேடில் இருந்து எடுக்கப்பட்டிருக்கிறது; அந்தக் கவரிலே எதிர்க்கட்சித் தலைவர் அனுப்பினார் என்று இருக் கிறது. முகவரி, சபாநாயகருக்கு இடப்பட்டிருக்கிறது. சீல் செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) அது கடிதத்தின் மேலே. உறையிலேயே சபாநாயகருக்கு என்றிருக்கிறது. அதாவது ஜெயலலிதா, எம்.எல்.ஏ., தேதி 15, இடப்பட்டது. சீல் வைக்கப் பட்டது. சபாநாயகருக்கு விலாசம் இடப்பட்டுள்ளது. ஆக சபாநாயகருக்கு விலாசம் இடப்பட்டுள்ளது என்று தெரிந்ததற்குப் பின்னாலேயும், போலீஸ் கமிஷனருடைய உத்தரவின் பேரிலே அல்லது எங்களுடைய குற்றச்சாட்டு, முதலமைச்சரவர்களுடைய அனுமதியின் பேரில் அது எப்படிப் பிரிக்கப்பட்டது-நாங்கள் சொல் வதே, அது தெரிந்துதான், அந்தக் கடிதம் இருக்கிறது என்று தெரிந்துதான், இந்த வழக்கு—உடனடியாக இரண்டு மணிக்கு கம்ப்ளெயிண்ட் வாங்கியிருக்கிறார்கள், அதுவும் டைப்ட் பெட்டி ஷனிலே ஒரு கம்ப்ளெயிண்ட் வாங்கப்பட்டிருக்கிறது, வாங்கப் பட்டு, உடனடியாக இரண்டு மணிக்கு பதிவு செய்யப்பட்டு, உட னடியாக நடராஜன் வீட்டுக்குப் போய், அந்தக் கடிதம் எடுக்கப் பட்டிருக்கிறது. அந்தக் கடிதம் உங்களுக்கு என்று தெரிந்ததற்குப் பின்னாலேயும், பேரவைத் தலைவரவர்களுக்கு விலாசம் இடப் பட்டிருக்கிறது என்று தெரிந்ததற்குப் பின்னாலேயும், அது கிழிக்கப்பட்டு, அந்தக் கடிதம் உங்களுக்குக் காவல் துறையால் தான் தரப்பட்டது என்பது எங்களுடைய வாதமாகும்.

எனவே, அது உங்களிடத்திலே தரப்படுகிறபொழுது, நீங்கள் ஏன் யார் கொடுத்தார்— அந்தக் கடிதத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறபொழுது, அதுவும் ஒரு எதிர்க்கட்சித் தலைவருடைய கடிதம் வருகிறபொழுது, பிரித்து வருகிறபொழுது, அதைப் பார்த்த நீங்கள் அந்தக் கடிதத்தை யார் கொடுத்தார்கள் என் பதைக் கூட நீங்கள் பதிவு செய்து கொள்ளாமல்—இங்கே கூட நீங்கள் வெளியிடலாம், வெளியிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்— இப்படி முறைகேடாக, அவசரம் அவசரமாக சட்டத்திற்குப் புறம்பாக, அந்த வழக்கிற்குச் சம்பந்தமில்லாத ஆவணங்களைக் கைப்பற்றி, உங்களிடத்திலே ஒப்படைக்கப் பட்டு, அதன்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது; அதன் மூலமாகச் சபையினுடைய உறுப்பினருடைய உரிமையும், எதிர்க் கட்சிகளினுடைய உரிமையும், ஏன்-உங்களுடைய பேரவைத்



1989 மார்ச் 28] [திரு. எஸ். திருநாவுக்கரசு]

தலைவருடைய உரிமையும் கூட, இந்த அவையினுடைய உரிமை யும் கூட மீறப்பட்டிருக்கிறது என்கின்ற அடிப்படையிலேதான் இந்த உரிமைப் பிரச்சினையே தவிர, மற்ற வழக்குகள், நடராஜன் இருக்கலாமா, இருக்கக் கூடாதா, அவர்மேல் என்ன வழக்குகள் என்பதெல்லாம் இதற்குச் சம்பந்தம் இல்லாத, இதோடு நேரடி யாக, இந்த உரிமை மீறலோடு தொடர்பு இல்லாத பிரச்சினை கள். ஆகவே, உங்களுடைய வாதத் திறமையால் இரண்டையும் ஒன்றாக்கி, நீங்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறீர்களே தவிர அதற்கும் இந்த உரிமை மீறலுக்கும்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரு. குமரி அனந்தன் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவருடைய ஆலோசகர் என்று சொன்ன காரணத்தால் ஆலோசகர் அல்ல என்பதற்கான விளக்கங்களை அளித்தேன், அவ்வளவுதான்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, அதையும் கூட மறுக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். வெளியிலே இருந்து மற்றவர்கள் எப்படி நினைக்கிறார்களோ அதை அவர்கள் சொல் லியிருக்கிறார்கள். அவர் அரசியல் ஆலோசகர் என்று அதிகாரப் பூர்வமாக ஒன்றுமில்லை; அவர் குடும்ப நண்பர் தான்; ஆகவே, குடும்ப நண்பர் வீட்டிலேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது அந்தக் கடிதம்.

தவறான முறையில் அந்தக் கடிதம் பயன்படுத்தப்பட்டிருக் கிறது. காவல் துறை அத்துமீறி நடந்து கொண்டிருக்கிறது. அதற்கு சம்பந்தப்பட்டிருக்கிற, பொறுப்பு ஏற்றிருக்கிற முதல மைச்சர் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்பது தான் அந்த உரிமை மீறல் மூலமாக நாங்கள் வெளியிட்டிருந்ததாகும்.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு நான் பதில் அளிப்பதற்குப் பதிலாக, அவைத் தலைவர் தான் பதில் அளிக்க வேண்டும். காவல் துறை எடுத்த கடிதம் வேறு, அவைத் தலைவருக்கு வந்து சேர்ந்த கடிதம் வேறு. அது செல்வி ஜெயலலிதா அவர்கள், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கைப்படவே எழுதிய கடிதம். காவல் துறை யினர் நீதி மன்றத்திலே தந்திருப்பதாகச் சொல்வது 'ஜெராக்ஸ் காப்பி'. எனவே, யார் அவரிடத்தில் கடிதம் கொடுத்தார்கள் போலீஸ்காரரா, வேறு யாராவதா என்பது எனக்குத் தெரியாது. அதை அவைத் தலைவர் தான் விளக்க வேண்டும்.

திரு. எஸ், டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, நானும் ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். ஒரு விளக்கம் பெற விரும்புகிறேன்,

[1989 மார்ச் 28

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல, எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசியிருக்கிறார்கள். அவரையே கேளுங்கள். இது முறையல்ல, நீங்கள் உட்காருங்கள், அருள்கூர்ந்து. இதன் தொடர்பான உரிமைப் பிரச்சினையை அன்றைக்கே திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம் என்று நான் தான் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தேன். எதிர்பாராமல் அப்படி எடுக்க முடியாமல் போயிற்று. நேற்று மதிப்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களைக் கூப்பிட்டு இன்றைக்கு எடுத்துக்.கொள்ளலாமா என்று கேட்டபொழுது, இல்லை, முறையாக எதிர்க்கட்டிசியினர் வந்து விடட்டும், பின்பு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதற்குப் பின்பு தான் இன்றைக்கு எடுத்துக்கொள்கிறோம் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. திரு. குமரி அனந்தன் அவர்கள் இது எப்படி உரிமை மீறல் என்று விளக்கம் சொன்னார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக்கரசு அவர்களும் இது எப்படி உரிமை மீறல் என்று விளக்கம் சொன்னார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விளக்கம் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை முழுமையாக ஆராய்ந்து, இது உரிமை மீறலா, உரிமைக் குழுவிற்கு அனுப்புவதா, என்ன செய்வது என்பதைப் பற்றித் தீர்மானித்து என்னுடைய தீர்ப்பைப் பின்னர் அறிவிக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பின்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதற்கு நான் ஒரு சுமூக சூழ்நிலையில் பதில் சொல்வது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். ஏற்கெனவே பல்வேறு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் என்னிடத்தில் வந்திருக்கின்றன. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போல மாண்புமிகு திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் கொடுத்திருக்கிறார்கள். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, இப்படி நிறைய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் இருக்கின்றன. இவைகள் அனைத்தையும் இன்று 12-00 மணிக்கு நடைபெறுகிற அலுவல் ஆய்வுக் குழுவில் ஆய்ந்து, எதை எதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்று அனுசரித்து கண்டிப்பாக நான் அவற்றை எடுத்துக்கொள்வேன். உங்களுடைய முழுமையான கருத்துக்கு இந்த அவையில் வாய்ப்பு அளிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அன்போடு ஒத்துழைத்து அடுத்த அலுவலுக்குப் போகுமாறு கேட்டுக் கொள்கிறேன்.



## 3. தகவல் கோரல்.

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, உரிமை மீறல் குறித்து பின்னால், விரைவில் தீர்ப்பு கூறுவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்கு அடுத்து மிக முக்கியத்துவம் வாய்ந்த சம்பவங்கள் குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம். பல ஒத்திவைப்புகள் வந்திருக்கின்றன என்று சொன்னீர்கள். பலவிதமான பொதுப் பிரச்சினைகள், தொகுதிப் பிரச்சினைகள் குறித்து ஒத்திவைப்புகள் வந்திருக்கும். தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டு, பல்லாயிரக்கணக்கிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள், தொண்டர்கள், காங்கிரஸ் தலைவர்கள், தொண்டர்கள், சம்பந்தமில்லாத பொது மக்கள், கிராமங்களில் கூட சென்று ஒன்றும் அறியாத அப்பாவிகள் கைது செய்யப்படுகிறார்கள். என்னுடைய சொந்த ஊரான தீயத்தூர், அறந்தாங்கியிலிருந்து 35 கிலோ மீட்டர் தாண்டியிருக்கிறது. அங்கே லாரிகளில் காவல் துறையினர் சென்று, ஊரிலே யாரெல்லாம் இருந்தார்களோ, 50, 60 பேர்களுக்கு மேலாக, வயதானவர்கள், பெரியவர்கள் அவர்களையெல்லாம், எந்தக் கட்சியும் கிடையாது, ஒரு கட்சியும் இல்லாமல் இருக்கிற பொது மக்களையெல்லாம் கைது செய்து கொண்டு போய் அடைத்திருக்கிறார்கள், என்னுடைய ஊர் என்ற காரணத்தால். நேற்று தொலைபேசியிலே தகவல் வந்தது. இப்படி தொகுதியில், மாவட்டத்தில், தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு பல்வேறு மட்டங்களில் தலைவர்கள், தொண்டர்கள் கைது செய்யப்பட்டு, எண்ணிக்கையை அதிகமாகக் காட்டக் கூடாது என்ற காரணத்தால், அவர்கள் எல்லாம் சட்டரீதியாக ரிமாண்ட் செய்யப்படாமல் சிறைகளில் அடைக்கப்பட்டு, சிலபேர் மீது மற்றும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டு இன்றைக்கு பெரிய அளவில் பதட்ட நிலை வெளியே இருக்கிறது. உயிருக்கும், உடைமைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என்கிற நிலை வெளியே இருக்கிறது. அது குறித்து நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருகிறோம். அதற்குப் பின்னால், அதையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, சட்டமன்றத்தில் சபையினுடைய உறுப்பினர்கள் உரிமை பாதிக்கப்படுகிற வகையில் பல சம்பவங்கள், துர்பாக்கியமான சம்பவங்கள், வருந்தத்தக்க சம்பவங்கள், வெட்கக்கேடான தலை குனியக்கூடிய பல சம்பவங்கள் இங்கே நடைபெற்று இருக்கின்றன. ஒரு பெண் அத்துமீறி தாக்கப்பட்டு நான் ஏற்கனவே சொன்னதைப்போல, சேலை இழுக்கப்பட்டு, இப்படி பல சம்பவங்கள் இங்கே நடந்திருக்கின்றன. இவற்றையெல்லாம் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமாக எடுத்து, மேலும் விவாதிக்க வேண்டும் என்பதற்கு நீங்கள் அனுமதிக்க வேண்டுமென்று தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, தற்போது ஓர் உரிமை மீறல் பிரச்சினையை சபை விரிவாக விவாதித்து இருக்கிறது. நான் கூட ஓர் உரிமை மீறல் பிரச்சினையை அவசர நிமித்தம் கொடுத்து இருக்கிறேன். சபாநாயகர் அவர்கள் இதை எடுத்துக்கொள்ளவில்லையே, ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். நிறைய உரிமை மீறல் பிரச்சினைகளும் வந்திருக்கின்றன, நிறைய ஒத்திவைப்புத் தீர்மானங்களும் வந்திருக்கின்றன. அவைகளில் எது முக்கியத்துவம் வாய்ந்தது, எது முக்கியத்துவம் வாய்ந்தது இல்லை என்பதை ஆராய்வது அல்ல இப்போதுள்ள பிரச்சினை. கண்டிப்பாக நான் ஒவ்வொன்றாக எடுத்துக் கொள்வேன், அவைகளை நீங்கள் முழுமையாக ஆராய்வதற்கு இடம் தருவேன் என்ற உறுதியை நான் அளித்து இருக்கிறேன்.

அதே நேரத்தில் 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் நடைபெறுகிறபோது எதை முந்தி எடுத்துக்கொள்ளலாம் என் பதைப் பற்றிக் கூட நாம் உடனடியாக முடிவு எடுத்தபின், அதற்கு நான் வாய்ப்பு அளிப்பேன், அதே நேரத்தில் இங்கே ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பாக, உரிமை மீறல் மற்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வருகிற கால கட்டத்தில் குறிப் பிடத்தக்க எதிர்க்கட்சித் தலைவர்கள், ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் அனைவரும் இருந்து, இதைப்பற்றி மீண்டும் பேசி முடிவு எடுத்தால் சிறப்பாக இருக்கும் என்பதற்காகத் தான் இதை அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து முடிவு எடுக்க லாம் என்று சொன்னேன். எனவே அருள்கூர்ந்து நம்முடைய மதிப்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இதை வலியுறுத்தாமல் இருந்தால், 12 மணிக்கு இதைப்பற்றிக் கலந்து பேசி முடிவு எடுக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நாங்கள் தான் முதலில் ஒத்திவைப்புத் தீர்மானத்தை, 25 ஆம் தேதி சபை கூடுகிறபோதே கொடுத்து உள்ளோம். இரண்டாவது பல ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்தாலும் எல்லாவற்றையும் நீங்கள் ஒவ்வொன்றாகப் பார்க்காமல், இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து, வெளியே, இருக்கிற ஒரு பதட்டமான நிலையை மனதிலேகொண்டு அவற்றுக்கு நீங்கள் முதலிலே அனுமதி தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் கூட உள்ளே வர முடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. உறுப் பினர் செங்கோட்டையன், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய செயலாளராக இருக்கிறார். அவர் சட்டமன்ற உறுப்பினர், இன்றைக்கு அவர் வரமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஏன் என்றால், 2, 3 நாட்களாக அவரைக் காவல்துறையினர் பல இடங்களில் தேடி வருவதாக எங்களுக்குத்



தகவல் கிடைத்திருக்கிறது. எங்களுடைய சட்டமன்றக் கட்சி அலுவலகத்திலே கேட்டு இருக்கிறார்கள். இல்லங்களிலே போய்த் தேடியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிற காரணத்தால், அவரைக் கைது செய்ய ஏதாவது உத்தரவை இட்டிருக்கிறார்களா என்பதை நான் அறிய விரும்பு கிறேன். ஏன் என்றால், முதலமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதினுடைய அடிப்படையிலே, அவருடைய பெயரைக் குறிப்பிட்டதினுடைய அடிப்படையிலே நான் கேட்க விரும்பு கிறேன். காவல்துறையினர் டி. சி. அளவிலே தேடி வருகிறார்கள். அப்படித் தேடி வருகிற தகவல் கிடைத்திருக்கிற காரணத் தாலே, அவர்கள் சட்டமன்றத்திற்கு வருவதற்குப் பயந்து கொண்டு இன்றைக்கு வராமல் இருக்கிற நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. எனவே இவற்றை எல்லாம் விவாதிக்கவேண்டும், இது குறித்து முதலமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும், அதற்கு வாய்ப்பு அளிக்கவேண்டும் என்ற காரணத்தாலே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, திரு. செங்கோட்டையனைக் கைது செய்யும்படியான உத்தரவு எதுவும் அரசின் சார்பிலே பிறப்பிக்கப்படவில்லை. அப்படி ஏதாவது போலீசார், அவர்களாகவே நடவடிக்கையில் ஈடு பட்டிருந்தால் அதை அவர்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும் என்று இந்த அவையின் மூலமாகக் கூறிக்கொள்கிறேன். திரு. செங்கோட்டையன் தாராளமாக சபைக்கு வரலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்ளே, நான் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஒரு தரப்பினருடைய உரிமை மீறல் பிரச்சினையை இந்தச் சபை விரிவாக விவாதித்தது இருக்கிறது. மற்றொரு உரிமை மீறல் பிரச்சினையை நாம் முறையாகவும் நிறைவாகவும் விவாதித்தால்தான் இந்தச் சபையினுடைய கண்ணியம் எப்படி எப்படி எல்லாம் அலைக்கழிக்கப்பட்டது, யார் யாரால் அழிக்கப் பட்டது என்பது எல்லாம் தெரியவரும். எனவே நீங்கள் நான் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்து, தாங்கள் அதை அனுமதிக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து நீங்கள் அனை வரும் பேரவைத் தலைவரோடு ஒத்துழைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 12 மணிக்கு அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. திருநாவுக் கரசு அவர்கள் சொன்ன அந்த முக்கியத்துவத்தையும், உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்ன பிரச்சினையின் முக்கியத்துவத் தையும் உணர்ந்து, அதில் ஏதாவது ஒன்றை முதலில் எடுத்துக் கொள்வதற்கு நான் கண்டிப்பாக அனுமதி தருவேன் என்பதை மட்டும் தெரிவித்து, அருள் கூர்ந்து எல்லோரும் என்னுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : இந்தச் சபையில் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்து நான் கொடுத்திருக்கிறேன். அதுவும் நாட்டுக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 12 மணிக்குஅலுவல்' ஆய்வுக் குழுக் கூட்டத்தில் கண்டிப்பாக இதைப் பற்றி முடிவு எடுத்து, அதற்கான விரிவான நடைமுறையை வகுப்போம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : முழுமையான நிலைமைகள் நாட்டுக்குத் தெரிய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவுசெய்வு 12 மணிக்கு அனைத்துத் தலைவர்களும் சந்தித்து, கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்கு 12 மணிக்குச் சந்திப்போம்.

திரு. எம். அப்துல் லத்தீப் : இப்போது எடுத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய வற்புறுத்தலாகும். ஆகவே, தயவுசெய்து இப்போதே எடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதை நானும் ஆதரிக்கிறேன். உடனடியாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை இப்போதே எடுத்து விவாதிக்க வேண்டும். ஏன் என்றால், இந்தப் பிரச்சினையினுடைய முக்கியத்துவத்தையொட்டி—இங்கே திரு. செங்கோட்டையனைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—தமிழ்நாடு முழுவதும் சுமார் 10 ஆயிரம் பேர்கள் கைது செய்யப்பட்டு, ஜெயிலில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அதேபோல் எந்தவிதமான வழக்கும் இல்லாமல், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் வன்முறையில் ஈடுபட்டோ, எந்த விதமான அசம்பாவிதமான சம்பவங்களிலே ஈடுபட்டோ, அதன் காரணமாக அசம்பாவிதமான எந்தச் சம்பவங்களும் நடைபெறவில்லை. ஆனால் ஒன்றிரண்டு வழக்குகள் இருந்து, அதையொட்டி யாரையாவது கைது செய்திருந்தால்கூட பிரச்சினை இல்லை. ஆனால் ஒட்டுமொத்தமாக ஒரு வழக்கும் இல்லாமல், '' பிரவென்டிவ் அரஸ்ட் '' என்ற முறையிலேகூட பல பேர்கள் கைது செய்யப்பட்டு, ரிமான்ட் செய்யப்படுகின்ற வகையில், காவல்துறையில் பதிவு செய்யப்படாமல் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஜெயிலிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கும் ஒரு உத்தரவாதம் அளித்து, அவர்களை எல்லாம் விடுதலை செய்ய, நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற வகையிலே, அதையெல்லாம் பற்றி விவாதிப்பதற்காகத்தான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை மேலும் வலியுறுத்துகிறோம்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏறத்தாழ ஒத்திவைப்புத் தீர்மானத்திலே விவாதிக்கப்பட்டதாகவே இந்த நிகழ்ச்சி அமைந்து வி. டதாக நான் கருதுகிறேன். 10,000 பேர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். இல்லை. 1,000 அல்லது 1,500 பேர்கள் வரைதான் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. எந்த வன்முறையும் நடைபெறாது இருக்கும்போது கைது செய்யப்பட்டதாகச் சொல்கிறார். வந்த கணக்கின்படி இதுவரையில் 28 பஸ்கள் அடித்து நொறுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அந்த வன்முறைச் சம்பவங்களிலே ஈடுபட்டவர்கள்தான் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஒரு சிலர் முன்கூட்டியே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அமைதியான சூழ்நிலை ஏற்பட்டவுடன் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்ற உத்தரவாதத்தை நான் இங்கே அளிக்கிறேன். ஒத்திவைப்புத் தீர்மானம், உரிமைப் பிரச்சினை என்ற பெயரால் எல்லாவற்றையும் பேசி அதன் மூலமாக நாட்டிற்கு ஒருதலைப் பட்சமான கருத்துக்கள்தான் வெளிவரும் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள்.

திரு. துரைமுருகனைப் பற்றி இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னது என்பது அவருடைய கூற்றே தவிர, நாங்கள் ஏற்றுக்கொண்ட கூற்று அல்ல. நடக்காதவைகளையும் சொல்லலாம். அதைப்பற்றிய விளக்கங்களையும் நாங்கள் அளிக்கலாம். எனவே அவற்றுக்கெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே, அதைக் கூட்டுகின்ற நேரத்திலே விவாதிக்க நேரம் இருக்கின்ற காரணத்தால், இன்று பட்ஜெட் உரையின்மீது உள்ள விவாதத்திற்கும், துணை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கும், வழிவகுத்திட வேண்டுமென்று தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய திருநாவுக்கரசு அவர்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் உரிமை மீறல் பிரச்சினை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார். அப்படியானால் உரிமைமீறல் பிரச்சினையையும், ஒத்திவைப்பு பிரச்சினையையும், ஆக இரண்டையும் ஒரே மாதிரியாக 'ட்ரீட்' பண்ணமுடியாது. இதுசம்பந்தமாக தாங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ? உரிமை மீறல் பிரச்சினை பற்றி முதலில் எடுக்கப்படுமா ? அப்படித்தான் நாங்கள் இப்போதும் கருதுகிறோம். அதில் என்ன நிலை என்பதையும் தாங்கள் தெரிவிக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய உறுப்பினர் பெருமக்களே, 25-ஆம் நாள் தொடங்குகிறபோதே தரப்பட்ட உரிமை மீறல் பிரச்சினைகளை, உரிமை மீறல் என்ற முறையில் நான் அடுத்த நாள் எடுத்துக்கொள்வதாக இருந்தேன். அதற்குப் பிறகு நடந்த நிகழ்ச்சிகள் தொடர்பாக ஒத்திவைப்புப் பிரச்சினை

கள் இருக்கின்றன. உரிமைமீறல் பிரச்சினைகள் இருக்கின்றன. இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பில்லாத வேறுவகையான ஒத்திவைப்புப் பிரச்சினைகளும் இருக்கின்றன. மதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். எனவே முறைப்படி பார்த்தால் முன்னதாக கொடுக்கப்பட்டது என்பதுமதிப்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களால் கொடுக்கபட்டதுதான். ஆனால் நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் நிகழ்ச்சியினுடைய முக்கியத்துவம் கருதி இதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்கிறார்கள். எனவே, என்னுடைய கருத்தை நீங்கள் அனைவரும் பெருந்தன்மையோடு ஏற்றுக் கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் 12 மணிக்கு அனைத்தையும் நான் உங்களிடத்திலே ஒப்படைக்கிறேன். நீங்கள் அனைவரும் சேர்ந்து எதை முதலில் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறீர்களோ, கண்டிப்பாக நான் அதை முதலில் எடுத்துக் கொள்வேன். ஆக உரிமை மீறலை முதலில் எடுத்துக்கொள்வதானாலும் சரி, ஒத்திவைப்பை எடுத்து கொள்வதானாலும் சரி, எனக்கு அது உடன்பாடே! எனக்கு அதிலே இரண்டாவது கருத்தே இல்லை. எனவே அருள்கூர்ந்து அடுத்த அலுவலுக்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அலுவல் ஆய்வுக்குழு முடிந்தவுடனே இதை எடுத்துக்கொள்வதற்கு சம்மதம் தருகிறீர்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கூட்டத்தில் நீங்கள் என்ன முடிவு செய்யப்போகின்றீர்களோ அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : அலுவல் ஆய்வுக்குழுவிலே நீங்கள் தான் முடிவு எடுக்கமுடியும். ஏனென்றால் நாங்கள் எல்லாம் அங்கே உறுப்பினர்கள் தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுடைய கருத்திற்கும் முழு மதிப்பு அளிப்பேன். உறுப்பினர் என்றால் வெறும் முடிவு எடுக்காதவர் அல்ல, முடிவு எடுப்பதற்குத் துணை செய்பவர்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இங்கே அலுவல் ஆய்வுக் குழுவிலே எண்ணிக்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் குறைவாக இருக்கிறோம். பெரும்பான்மை என்றால்கூட, முதலமைச்சர் அவர்கள், அங்கேயிருக்கின்ற அமைச்சர்கள், நீங்கள் சொல்வதுதான் இறுதியான முடிவாக இருக்கமுடியும். எனவே, அங்கே சென்று அதற்குப் பின்னாலே இப்படி முடிவு எடுக்கப்படவில்லை என்று அறிவிக்க வாய்ப்பு இருக்கிறது. அதனாலே இந்தப் பிரச்சினையை தள்ளிப் போடும்படியான வாய்ப்பு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குத் தெரியாதது அல்ல. அனுமானத்தின் அடிப்படையில் இப்படி முடிவு எடுக்கலாமா? அக்கூட்டத்தில் இது எண்ணிக்கையின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுவது அல்ல; எண்ணங்களின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படுவது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இந்த எண்ணங்கள் சாதகமாக இருக்குமானால், அங்கே போய்த்தான் முடிவு எடுக்கவேண்டிய அவசியமில்லை. இங்கேயே முடிவு எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாராளமாக உறுப்பினர் கருத்தை முழுமையாக விவாதிப்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. எதிர்க்கட்சியில் இருப்பவர்கள் எல்லாருமே அந்தக் குழுவிலே இருக்கிறார்கள் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : உங்களுடைய உணர்விலே வாய்ப்புக் கிடைக்குமானால், இப்போதே இந்தப் பிரச்சினையினுடைய அவசர முக்கியத்துவம் கருதி, அனுமதிக்கவேண்டுமென்றுதான் நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய அன்பான வேண்டுகோளை ஏற்றுக் கொள்வீர்கள் என்று கருதுகிறேன். இன்னும் $1\frac{1}{2}$ மணி நேரம்தான் இருக்கிறது. ஏற்கெனவே நாம் ஓர் உரிமைப் பிரச்சினையை எடுத்து அது தொடர்பாக முழுவதுமாக விவாதித்து இருக்கிறோம். எனவே, இதை 12 மணிக்கு சந்தித்து முடிவு எடுப்போம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் நான் ஏற்கெனவே சொன்னதைப் போல ஏற்பட்டுள்ள பதட்ட நிலையை கவனத்திலே கொண்டு ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு முன் உரிமை கொடுத்து இப்போதே எடுத்து விவாதிக்க வேண்டும். ஏனென்றால் தமிழ்நாடு முழுவதும் இதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை, கட்சித் தலைவர்கள், தொண்டர்கள், பொதுமக்கள் தொல்லைகளுக்கு ஆட்படுத்தப்பட்டு காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களுடைய வீடுகள் தாக்கப்பட்டு, கடைகள் சூறையாடப்பட்டு எவ்வளவோ பதட்ட நிலை நிலவுகிறது. அதனால்தான் வேறு அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதிக்க வேண்டும், நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் நாங்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். அதைத் தாங்கள் அனுமதிக்கவில்லை என்றால் நாங்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவித்து வெளியேற வேண்டியிருக்கும். எனவே இறுதியாக உங்கள் முடிவை அறிய விரும்புகிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, தீர்மானங்களிலே உரிமைப் பிரச்சினைக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அப்படி எடுத்துக் கொள்வதாக இருந்தால், privilege Motion always take precedence overal l other motions என்ற முறையிலே நான் கொடுத்த உரிமைப் பிரச்சினையைத்தான் தாங்கள் முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு தான் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் இதை சுமூகமான முறையிலே அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசித்தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது தங்களுடைய விருப்பமாக இருந்தால், தலைவருடைய விருப்பத்திற்கு மதிப்பு அளிக்கும் வகையில் அங்கே பேசி முடிவுஎடுத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

அதே நேரத்திலே அலுவல் ஆய்வுக் குழுவிலே ஒரு விதமான எண்ணம் தான் ஏற்படும் என்று சொல்வதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஏனென்றால் அங்கே தலைவர் மற்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் சம அந்தஸ்தும் வாய்ப்பும் கொடுக்கப்படுகிறது. எனவே அந்த அலுவல் ஆய்வுக் குழுவிலே எந்தத் தீர்மானம் எடுத்தாலும் அது ஒட்டு மொத்தமான கருத்தின் அடிப்படையிலேயே எடுத்த தீர்மானமாக இருக்குமே தவிர தனிப்பட்டவர்களுடைய கருத்தைத் திணிக்கிற ஒன்றாக எப்போதும் கருதப்படக் கூடாது. அந்த மரபை அடிப்படையாகக் கொண்டும், அந்த அலுவல் ஆய்வுக் குழுவின் கண்ணியத்தை அடிப்படையாகக் கொண்டும் அப்படித்தான் கருதப்பட வேண்டும் என்ற முறையில் நான் அதனுடைய தீர்ப்பை ஏற்றுக் கொள்வதற்குத்தயார். ஆனால் நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்வதற்கு இணங்குவீர்கள் என்று சொன்னால் உரிமை மீறல் பிரச்சினையைத் தான் முதலிலே நீங்கள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற இந்த மன்றத்தினுடைய மரபை ஒட்டி நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை உரிமை மீறிய பிரச்சினையைத் தான் முதலிலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எந்த விதியும் சட்டத்திலே இல்லை. ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் மற்ற எல்லாவற்றையும் விட பிரையாரிட்டி கொடுத்து, மற்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்பதால் தான் அதற்கு முக்கியத்துவம் வருகிறது. எனவே மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகிறேன்.

அதோடு இங்கே பேசுகிற போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்படி மறுப்பு தெரிவித்தார்களோ அது போல் மறுப்புத் தெரிவிக்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். முதலமைச்சருடைய அருகிலே வந்து நின்றார் என்பது உண்மையே தவிர முதலமைச்சர் அவர்களை செங்கோட்டையனோ அல்லது மற்ற எந்த உறுப்பினர்களோ



தாக்கவில்லை என்பதை அவையில் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால் பத்திரிகையிலே வருகிற செய்திகள் இரண்டு தரப்பிலேயிருந்தும் வரவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். ஆனால் நடந்ததை எல்லோரும், பத்திரிகையாளர்கள் அத்தனை பேர்களும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் அருகிலே வந்து நின்றார் என்பது உண்மைதான். அவரை அடிக்கவோ அல்லது கண்ணாடியை உடைக்கவோ இல்லை, அதை நாங்கள் மறுக்கிறோம். இந்தச் சந்தேகங்கள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்றால் முதலிலே கொடுத்த ஒத்தி வைப்புத் தீர்மானம் அதற்குப் பின்னாலே வந்த சம்பவங்கள், அதையொட்டி மேலும் ஏற்பட்ட பதட்ட நிலை இவற்றையெல்லாம் மேலும் விவாதிப்பதற்காகத்தான் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லி அதற்கு உங்கள் தீர்ப்பை எதிர்பார்க்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் சட்டமன்றத்திலே நடைபெற்ற சம்பவங்கள் பற்றி எதிர் கட்சியினுடைய துணைத் தலைவர் சார்பாக ஒருதலைபட்சமாக கருத்துக்களை மட்டுமே இங்கே பேசிக் கொண்டிருக்கிற போது, அனைத்து உறுப்பினர்களுக்கும் இங்கே அன்று நடைபெற்றவைகளைப் பற்றி கருத்துக்களையும் உண்மைகளையும் கூறுவதற்கு வாய்ப்பு அளிக்காமல் கூறுவது அல்லது அனுமதிப்பது முறையாகுமா என்ற ஒழுங்குப் பிரச்சினையை கிளப்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, லத்தீப் அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கிற உரிமை மீறல் பிரச்சினை பற்றி சொன்னார்கள். நானும் ஒரு உரிமை மீறல் பிரச்சினையை உங்களிடத்திலே தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். ஒரு நாளைக்கு ஒரு உரிமை மீறலை எடுத்துக்கொள்ளலாம் அதை நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஒத்தி வைப்புத் தீர்மானத்தைப் பொறுத்த வரையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வன்முறையிலே ஈடுபட்டவர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அது சரியான தகவல் ஆகாது. எங்களுடைய கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் வன்முறையிலே ஈடுபடவில்லை. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் மாணவர் தலைவர் டாக்டர் செல்வகுமார் அவர்கள் அவருடைய இல்லத்திலே உறங்கிக் கொண்டிருந்த போது தட்டி எழுப்பி கைது செய்யப்பட்டிருக்கிறார். இது போல் பல சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன. எனவே ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய கட்சியின் சார்பில் பீட்டர் ஆல்போன்ஸ் கொடுத்திருக்கிற ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முதலிலே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

(முற்பகல் 10-40)

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர் களே, 26-3-1989 அன்று காலை 10 மணியளவிலே நான் என்னுடைய இல்லத்தில் இருந்த நேரத்தில் திடீரென்று காவல் துறையைச் சேர்ந்த சுமார் 100 பேர் என்னுடைய இல்லத்திலே புகுந்து என்னுடைய தொகுதியிலிருந்து என்னை சந்திக்க வந்த ஒரு சிலரை என்னுடைய இல்லத்திலேயே கைது செய் திருக்கிறார்கள். அவர்கள் வந்தது சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம் ஒரு சில கையெழுத்துக்களை — அட்டஸ்டேஷன் வாங்க வேண்டும் என்ற முறையில் வந்தவர் களை கைது செய்து காவல் துறையில் வைத்து இருக்கிறார்கள். இப்படி நிலைமை ஏற்பட்டால் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நான் என்னுடைய கடமையை எப்படி ஆற்ற முடியும் ? என்னுடைய உரிமையும் அங்கே மீறப்பட்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி சட்ட மன்ற உறுப்பினருடைய இல்லத்திலே அவருடைய தொகு தியைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும் சந்திக்க வருவதே தவறு என்று இந்த அரசு கருதுகிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

திருமதி பாப்பா உமாநாத் : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இந்தச் சபையில் நடந்து கொண்டிருப் பதை காலையிலிருந்து நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். இப்போது நடப்பது உரிமை மீறல் பிரச்சினை மீது நடக்கக் கூடிய விவாதமா அல்லது ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நடக்கக் கூடிய விவாதமா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது எல்லோருக்குமே நன்றாகத் தெரிகிறது. ஆனாலும் கூட இன்னும் நம்முடைய உள்ளங் களைத் திறந்து முடிவு எடுக்க வரவில்லை. அருள் கூர்ந்து இங்கு இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரையும் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது நீங்கள் தந்திருக்கின்ற உரிமை மீறல் பிரச்சினைகள், ஒத்திவைப்புத் தீர்மானங்கள் அவற்றினுடைய முக்கியத்துவங்களை நானும் உணர்வேன். எனவேதான் நிறைய உரிமை மீறல் பிரச்சனைகள், ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்திருப்பதனால் அவற்றை வரிசைப்படி எடுத்துக்கொண்டு எதற்கு முக்கியத்துவம் தர வேண்டும் என்பதை நீங்களே முடிவு எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்த கருத்தில் உங்களுக்கு வாய்ப்பு அளித்தேன். எனவே தான் நான் மீண்டும் மீண்டும் உங்களை வேண்டிக்கொள்வது 12 மணிக்கு கூடுகின்ற அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எதற்கு முதல்



முக்கியத்துவம் தர வேண்டும் என்பதைப் பற்றி நீங்களே முடிவு எடுங்கள். அதற்குப் பிறகு இன்றைக்கே எடுத்துக் கொள் வது என்று நீங்கள் முடிவு எடுத்தாலும் நான் எடுத்துக் கொள்ளத் தயார்., நாளைக்கு எடுத்துக்கொள்ளலாம் என்று கருதி னாலும் நான் எடுத்துக்கொள்ளத் தயார். எனவே என்னு டைய இந்தத் தீர்ப்பை ஏற்று நீங்கள் அடுத்த அலுவலுக்கு வருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இங்கே இருக் கிறார்கள். அங்கே போய் 12 மணிக்கு நாம் கூடுகின்றபோது இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்படும் என்று அவர்கள் சொன்னால் நாம் இப்போது அமர்ந்து மற்ற அலுவல் களை நடத்திக் கொண்டு இருக்கலாம். ஏனென்றால் அங்கே சென்று விட்டுத் திரும்ப வந்து இல்லை என்கின்றபோது இதே சூழ்நிலைதான் திரும்ப ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அலுவல் ஆய்வுக் குழு கூட்டத்தில் என்ன முடிவு எடுப்பது என்று முன் கூட்டியே சொன்னால் அந்தக் கூட்டம் எதற்காக ? பேரவையே முடிவு எடுத்தால் ஒரு குழுவே தேவையில்லை என்று நான் கருது கிறேன். என்ன முடிவு எடுப்பது என்பது குறித்து உங்களுடைய கருத்துக்களை எல்லாம் கேட்டுத்தானே முடிவு எடுக்க முடியும் ?

திரு. எஸ். திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் சொல்கிறேன். அலுவல் ஆய்வுக் குழுவிலே போய் பேசித்தான் தீர்வு காண வேண்டும் என்பது போன்ற ஒரு பிரச்சினை அல்ல. வெளியே இருக்கின்ற பதட்ட நிலையை பேசி இப்போதே அவசரமாக நாங்கள் விவாதிக்க வேண்டும் என்று சொல்கின்றபோது அந்த விவாதத்திற்கு நீங்கள் அனுமதித்து விட்டு, அதற்குப் பின்னால் மற்றப் பிரச்சினைகளையெல்லாம் அங்கே விவாதித்து எந்தெந்த தீர்மானங்களை எப்போது எடுத் துக் கொள்வது, எந்தெந்த டிமாண்ட்ஸை எப்போது எடுத்துக் கொள்வது,—இதைத்தான் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியிலே நாம் முடிவு செய்யப் போகிறோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காலையிலே 8-30 மணியளவிற்கு முன்பே காங்கிரஸ் கட்சியின் சார்பில் தங்களைச் சந்தித்து தங்களோடு கலந்து பேசியபோது இன்று உரிமைப் பிரச்சினை பற்றி மாத்திரம் எடுத்துக் கொள்வது என்றும் ஒத்திவைப்புத் தீர்மானங்களை எப்போது எடுத்துக் கொள்வது என்பது குறித்து அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவு செய்து எடுத்துக் கொள்ளலாம் என்றும் சொன்னதாக என்னிடத் திலே தாங்கள் தெரிவித்திருக்கிறீர்கள். அலுவல் ஆய்வுக் குழுவே

[டாக்டர் மு. கருணாநிதி] [1989 மார்ச் 28

தேவையில்லை. எல்லா விவரங்களையும் இங்கேயே பேசி என்
னென்ன அலுவல்கள் என்பதை அவையிலேயே தீர்மானித்துவிட
லாம் என்பது பாராளுமன்ற மரபு அல்ல. நாடாளுமன்றத்திலும்
சரி, அல்லது மாநிலங்கள் அவையிலும் சரி, வேறு எந்த மாநிலத்
திலே உள்ள எந்தச் சட்டமன்றத்திலும் சரி, அலுவல்களை
ஆய்ந்து முடிவு எடுப்பதற்காகத்தான் அலுவல் ஆய்வுக் குழுவே
இருக்கிறது. அந்த அலுவல் ஆய்வுக் குழுவே தேவையில்லை,
இங்கேயே முடிவு செய்ய வேண்டும் என்று சொல்வது பொருத்த
முடைய ஒன்றாக இருக்காது. அலுவல் ஆய்வுக் குழுவில் எண்
ணிக்கையை வைத்துத்தான் முடிவு எடுக்கப்படுவதாக எதிர்க்
கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அவர்
களுடைய அனுபவத்திலே தெரியும். எந்த மானியத்தை என்
றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து எதிர்க் கட்சி
யிலே உள்ளவர்களுக்குள்ள வாய்ப்புகள், எதிர்க் கட்சித் தலைவர்
களுக்கு உள்ள வாய்ப்புகள் இவைகளையெல்லாம் ஆராய்ந்து
பார்த்து முதலமைச்சர் பதில் சொல்வதற்கு ஏற்ற நாள் தானா,
அந்த உரிமை இருக்கிறதா என்பதையெல்லாம் எண்ணிப் பார்த்து,
எத்தனையோ முறை அலுவல் ஆய்வுக் குழுவிலே முடிவுகளை
மேற்கொண்டு இருக்கிறோம். நான் எதிர்க்கட்சியிலே இருந்த
போதும் அது நடைபெற்றிருக்கிறது. ஆனால், எண்ணிக்கை
வைத்து அங்கே ஓட்டெடுப்பு எத்தனை பேர் இதற்கு ஆதரவாக
ஓட்டளித்தார்கள், எத்தனை பேர் எதிர்ப்பாக ஓட்டளித்தார்
கள் என்றெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவிலே கணக்கிடுவது
கிடையாது. அலுவல் ஆய்வுக் குழுவிலே அவரவர்கள் கலந்து
பேசி வரிசைப்படுத்தி எந்தெந்தப் பிரச்சினையை முதலில் எடுத்
துக் கொள்ளலாம் என்ற முடிவுகள்தான் இதுவரையில் எடுக்கப்
பட்டிருக்கின்றன. அந்த மரபுதான் தொடர்ந்து அலுவல் ஆய்வுக்
குழுவிலே காப்பாற்றப்படும். எனவே அதை நம்பி அலுவல்
ஆய்வுக் குழுவிற்கு 12 மணிக்கு வந்து விவாதித்து முடிவு எடுப்பது
தான் சிறந்தது என்பது என்னுடைய கருத்து.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பலமுறை திரும்பத் திரும்ப மீதி இருக்கக் கூடிய உரிமைப் பிரச்சினைகளையும், ஒத்திவைப்புத் தீர்மானங் களையும் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசி, எப்போது எடுத்துக் கொள்ளலாம் என்று அங்கு தீர்மானித்து எடுத்துக் கொள்ளலாம் என்று திரும்பத் திரும்பக் கூறியதற்குப் பிறகும் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் 12 மணி என்று நீங்கள் குறிப்பிட் டதை அவர்கள் கவனத்திலே வைத்துக் கொண்டு 12 மணி வரை யிலே இதே முறையிலே இந்த அவையை நடத்திக் கொண்டு போவதற்கு அவர்கள் முயற்சிப்பதற்கு நீங்கள் அனுமதிக்கப் போகிறீர்களா என்று அறிய விரும்புகிறேன்.



1989 மார்ச் 28]

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கைக்கு உள்நோக்கம் கற்பிக்க முயல்வது முறையானது தானா என்று தெரிந்து கொள்ள விரும்பு கிறேன். காலையிலே நாங்கள் உங்களைச் சந்தித்த நேரத்தில் முதலிலே உரிமைமீறல் தீர்மானம் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதை நாங்கள் ஏற்றுக் கொண்டோம். நாங்களும் இரண் டாவது உரிமைமீறல் தீர்மானம் பற்றி கேட்ட நேரத்தில் அதைப் பிறகு முடிவு செய்யலாம் என்று சொன்னீர்கள். அதை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒத்திவைப்புத் தீர்மானத் தைப் பொறுத்தவரை, எங்களுடைய நிலை, அதை இன்றே எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதை உங்களிடத்திலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் எங்களுக்குச் சொன் னது உண்மையென்றாலும் கூட, நான் தலைவரிடத்திலே பேசி விட்டு வேண்டுமானாலும் பதில் சொல்கிறேன். ஆனால், இப் போது எங்களுடைய நிலை, ஒத்திவைப்புத் தீர்மானத்தை இன்றே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும், அது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் நாங்கள் கருதுகிறோம்.

**திரு. கோ. வீரையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, மக்களைப் பாதிக்கக்கூடிய இந்தப் பிரச்சினையிலே முதல் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததே, நானும், எங்களுடைய தலைவர் திரு. ரமணி அவர்களும், திரு. நூர்முகமது அவர்களும் கையெழுத்துப் போட்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானம்தான் முதலிலே உங்கள் கையிலே கொடுக்கப்பட்டது. காலையிலே உங்களுடைய அறையிலே சந்தித்து உங்களைக் கேட்கும்போது இந்த உரிமைமீறல் பிரச் சினையினுடைய அவசியத்தைக் கருதி, அதை இன்றைக்கு எடுத்துக் கொள்வோம், ஒத்திவைப்புத் தீர்மானத்தை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று நீங்கள் கூறியபோது, நாங்கள் அதை ஏற்றுக் கொண்டோம். அந்த முறையில் உரிமைமீறல் பிரச்சினையினுடைய அவசியத்தைக் கருதி, இன்றைக்கு அது எடுக்கப்படுகிறது என்ற காரணத்தாலேதான் நாங்கள் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானத் தை நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதையும் நாங்கள் ஏற்றுக் கொண்டோம். அந்த முறையில் இது திரும்பத் திரும்பக் கூறுவதனால்தான் குறிப்பிட்டேனே தவிர, உள்நோக்கம் கற் பித்துச் சொல்லவேண்டிய எந்த அவசியமும் எங்களுக்கு ஏற்பட வில்லை. என்றைக்கும் ஏற்படாது என்பதை உறுதியாகக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். பொதுவாக, பிசினஸ் அட்வைசரி கமிட்டி என்பது, அதிலே நாளைக்கு என்ன நிகழ்ச்சி கள், நாளை மறுநாள் என்ன நிகழ்ச்சிகள், டிமாண்ட்ஸ் எப் போது எடுத்துக் கொள்வது என்பதையெல்லாம் பற்றிப் பேசு

வதற்காகத் தானே தவிர, ஒத்திவைப்பு எடுத்துக் கொள்வதா எடுத்துக் கொள்ளாமல் இருப்பதா, எந்த ஒத்திவைப்பு எடுத்துக் கொள்வது என்பதெல்லாம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே பேசுவது அல்ல. அது எல்லாம் சபாநாயகருக்குள்ள உரிமை. சபாநாயகராகிய நீங்களே, எடுத்த எடுப்பிலேயே மறுக்கலாம், அல்லது அனுமதி கொடுக்கலாம், அது உங்களுடைய உரிமை. அதை எதிர்த்து வாதிடவேண்டியது எங்களுடைய உரிமை. நீங்கள் எடுத்துக் கொள்ளவேண்டும் என்று வற்புறுத்துவது உங்களுக்கு இருக்கிற உரிமை. அதிலே அட்ஜோர்ன்மென்ட் மோஷன் எல்லாம், எதை எடுப்பது, எப்படி எடுப்பது என்பதைப்பற்றி யெல்லாம் பிசினஸ் அட்வைசரி கமிட்டியிலே வந்து பேச வேண் டிய அவசியம் இல்லை. அந்த வரம்புக்குட்பட்டதும் அல்ல அது. எனவே, அதற்காகக் காத்து இருக்கவேண்டியதில்லை ........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்புமிகு உறுப்பினர் பெருமக்களே, ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்வது என்று வந்தால் பேரவைத் தலைவருடைய தீர்ப்பு முதலில் திரு. கே. ரமணி அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைத் தான் எடுத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், அவர்தான் முதலிலே, 25-ஆம் நாளே கொடுத்திருப்பவர். எனவே, இன் றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வது என்பதில், முதல் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று வருகிறபோது, திரு. கே. ரமணி அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தைப் பற்றி நேரடியாக திரு. வீரையன் அவர்கள் வந்து கேட்டபோது, சொன்னேன், இன்றைக்கு உரிமைமீறல் பிரச்சினை வருவதனால், நாளைக்கு வைத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். எனவே, முதலில் ஒத்திவைப்புத் தீர்மானம் என்று வந்தால், திரு. கே. ரமணி அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானம்தான் வரும். (குறுக்கீடு) திரு. வீரையன் அவர்களிடத்திலே நான் ஏற்கனவே தெரிவித்தேன், நாளைக்குத் தான் அதை எடுத்துக்கொள்வதாக. அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். முதலிலே திரு. கே. ரமணி அவர்களு டைய ஒத்திவைப்புத் தீர்மானம். அடுத்து உங்களுடைய ஒத்தி வைப்புத் தீர்மானம். (குறுக்கீடு) நான் அவர்களுக்குத் தான் முன்னுரிமை கொடுத்திருக்கிறேன். நாளைக்கு எடுத்துக் கொள்வதாக அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன். அடுத்த அலு வலுக்கு நான் இப்போது போகிறேன். (குறுக்கீடு).

(முற்பகல் 10-50)

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், ஏற்கனவே தாங்கள் இங்கே பலரும் பேசியதைக் கேட்டு ஒரு முடிவை இங்கே சொன் னீர்கள். அந்த முடிவு நிறைவேற வேண்டும். உங்கள் முடிவை மறுபடியும் 'டையலுட்' பண்ணி திரும்பப் பேசிக் கொண்டு



இருந்தால் இந்த அவையில் எந்த நடவடிக்கையையும் நடத்த முடியாது, ஆகவே தாங்கள் சொன்ன முடிவுபடி அலுவல் ஆய்வுக் குழு கூடவேண்டும் 12 மணிக்கு. எனவே என்ன முடி வுகள் வருகிறதோ வரட்டும். மேஜாரிட்டி, மைனாரட்டி எலக் ஷன் பிரச்சினை அல்ல இது என்று கூறிக்கொண்டு உங்களுடைய அந்த தீர்ப்பு இங்கே அமல் ஆகவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள், மார்க் சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த நண்பர்கள் கொடுத்து இருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும் நாங்கள் கொடுத்து இருக்கின்ற ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கும் வித்தி யாசம் இருக்கிறது. நாங்கள்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து உட் காருங்கள். ஒவ்வொரு ஒத்திவைப்புத் தீர்மானத் திலும் என்ன முக்கியத்துவம் இருக்கிறது என்பதை நீங்கள் சொல்ல முடியாது. ஏன் என்றால் அவர் என்ன ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரி யாது. உங்களுக்கு எப்படித் தெரிய முடியும்? அப்படி இருக்கும் போது இதிலே வித்தியாசம் இருக்கிறது என்று நீங்கள் எப்படி சொல்ல முடியும்? அருள்கூர்ந்து எனக்கு அதற்குப் பதில் சொல் லுங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை; இதில் என்ன முக் கியத்துவம் இருக்கிறது என்பது உங்களுக்கு எப்படித் தெரியும். அந்த வாசகத்தைப் பார்க்காமல் பேரவைத் தலைவர் சொல்லு கின்ற வாக்கியத்தை வைத்துக் கொண்டு இதில் வித்தியாசம் இருக்கிறது என்று சொல்லுவதற்கு எப்படி ஓர் உறுப்பின ருக்கு வாய்ப்பு இருக்கிறது? அவர் உங்களிடத்தில் காட்டிவிட்டு அதை கொடுத்திருக்கிறாரா என்பது தான் என்னுடைய கேள்வி. எனவே அருள்கூர்ந்து நம்முடைய மதிப்புக் மிகு மூத்த உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதை ஏற்று 12 மணிக்குப் பின்னால் தான் இது முடிவு எடுக்கப்படும். நம் முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும் சொன் னார்கள் இது அலுவல் குழுவின் ஆய்வுக்கு வராது என்றாலும் நான் பெருந்தன்மை கருதி நீங்கள் எல்லாம் சேர்ந்து முடிவு எடுக்கவேண்டும் என்று சொன்னேனே தவிர என்னுடைய உரி மையை விட்டுக்கொடுத்து அல்ல. இப்போது என்னுடைய முறையான அலுவலுக்கு நான் போகிறேன்.

[1989 மார்ச் 28

4. அறிவிப்புகள்.

(அ) அனைத்திந்திய அண்ணா திர விட முன்னேற்றக் கழகம்
(ஜெயலலிதா அணி), ''அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம்'' என்ற பெயரில் செயல்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி
விப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு கட்சியாக
அங்கீகாரம் அளிக்கப்பட்ட அனைந்திந்திய அண்ணா திரா
விட முன்னேறக் கழக ஜெயலலிதா அணி,இனிமேல் ''அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்'' என்ற
பெயரில் பேரவையில் ஒரு கட்சியாகச் செயல்படும் என்பதைப்
பேரவைக்கு அறிவிக்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, நீங்கள் அங்கீகாரம் செய்ததை நான் ஒன்
றும் சொல்லவில்லை. என்னைப் பொறுத்த வரையில் நான்
தனியாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகம் என்று தேர்தல் சர்ட்டிபிகேட்டில் கொடுத்ததைப்போல்
அதே முறையில் செயல்படுவேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்களைப் பொறுத்த
வரையில் நான் அளித்த தீர்ப்பு அப்படியே இருக்கிறது.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஜானகி அம்மையார் அவர்கள் ஒரு
அறிக்கையின் வாயிலாக தன் பெயரை..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து இதுபற்றி நாம்
ஏற்கனவே 35, 40 மணித் துளிகள் பேசி இது சம்பந்தமாக
நம்முடைய மதிப்புமிகு உறுப்பினர் வெங்கடேஸ்வர தீட்சிதர்
மற்றவர்கள் எல்லாம் இது எங்களுக்கு சம்பந்தமே இல்லை
என்று பேசி, இருக்கிறோம். எனவே உங்களுடைய கட்சி
''அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்''
என்று ஏற்றுக்கொள்ளப்பட்டது. அருள்கூர்ந்து திரு. பி.எச்.
பாண்டியனை இதில் இழுக்க வேண்டாம். எனவே அதுபற்றி
ஏதாவது பேச வேண்டும் என்றால் மடல் கொடுத்தவர்கள்,
கொடுக்காதவர்கள் என்ற பிரச்சினை எல்லாம் என்னிடத்தில்
இருக்கிறது. நேரடியாக மடல் தொடர்பிலேயே அதை
முடித்துக்கொள்ளலாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, கட்சியினுடைய தலைவராக இருந்தவர்
எங்களுடைய கட்சியோடு இணைந்து இரட்டை இலைக்கு
அவரே கையெழுத்துப் போட்டு எங்களுக்கு கொடுத்து இருக்



கிறார், அவரும் அரசியலிலிருந்து விலகிக் கொள்வதாக
என் பெயரை அரசியல் கட்சி எதற்கும் பயன்படுத்தக்
கூடாது என்றும் சொல்லியிருக்கிறார்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை முடிவு எடுக்க
வேண்டியது திரு. பி.எச். பாண்டியன் அவர்களே தவிர
நீங்களோ, நானோ, அல்ல. அவர் எழுதித் தருகின்ற மட
லின் அடிப்படையில்தான் நான் முடிவு எடுக்க முடியும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, பெற்றோர்கள் விவாகரத்து செய்தால்
கூட குழந்தையின் பெயரில் 'இனிசியலை' மாற்ற முடியாது.
கணவன் பெயரை மாற்றலாம். குழந்தையின் பெயரை மாற்ற
முடியாது (கைத்தட்டல்).

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று
எனக்குத் தெரியாது, இது வேறு பிரச்சினை; அது வேறு
பிரச்சினை; அந்த கேஸில் நிறைய ஆஜர்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய
வேண்டுகோளை ஏற்று, மடல் படிவங்களை ஏற்று நான்
உங்களுடைய கட்சியை ''அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழகம்'' என்று அங்கீகரித்து இருக்கிறேன். எனவே
அதற்கு மேலும் அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம்.
ஏன் என்றால் இது ஏற்கெனவே எழுப்பப்பெற்று 35, 40 மணித்
துளிகளைக் காவு கொண்டு; மற்றவர்கள் எல்லாம் வருத்தப்
பட்டுச் சொன்னது எல்லாம் நினைவில் வைத்துக்
கொண்டு இருக்கிறோம். எனவே இப்போது அடுத்த
அலுவலுக்குப் போகிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்—தொடர்ச்சி

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அந்தப் பிரச்சனையை நாளைக்குப் பார்த்துக் கொள்
வோம். இன்றைக்கு அதைவிட முக்கியமானப் பிரச்சினை ஒத்தி
வைப்புத் தீர்மானம். எனவே அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை
நீங்கள் எடுக்கவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்
பிரதான எதிர்க்கட்சிக்கும் அதே போல் மற்ற எதிர்க்கட்சியாக
இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்கும் அந்த வாய்ப்பை திரும்பத்
திரும்ப மறுக்கிறீர்கள், இது பிசினஸ் அட்வைசரி கமிட்டியில்
வைத்து விவாதிக்க வேண்டிய பொருளே அல்ல.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1989 மார்ச் 28

நீங்களே முடிவு செய்ய வேண்டியது. எனவே இன் றைக்கு வெளியே இருக்கின்ற பதட்ட நிலை, எதிர்க்கட்சித் தலைவர் உள்ளே தாக்கப்பட்டு இருக்கின்ற அந்தச் சூழ்நிலை இதனால் உறுப்பினருடைய உரிமை மீறி எதிர்க்கட்சித் தலைவர் உரிமை மீறி, மன்றத்தினுடைய உரிமை மீறி இவை அனைத்தும் பறிக்கப்பட்டிருக்கிறது. எனவே இவற்றை யெல்லாம் விவாதிக்க நீங்கள் வாய்ப்பு அளிக்கவேண்டும் என்று நாங்கள் வற்புறுத்தினோம், நீங்கள் அதற்கு வாய்ப்பு அளிக்க மறுக்கிறீர்கள். எனவே நாங்கள் இதை எதிர்த்து வெளிநடப்புச் செய்கிறோம்.

(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தியதை நீங்கள் ஏற்றுக் கொள்ளாததால் நாங்களும் வெளிநடப்புச் செய் கிறோம்.

(இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப் பினர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தார்கள்.)

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஒரு மணி நேரத்தை தமிழ்நாட்டு மக்களுக் காகச் செலவிடாமல் ஒரு தனி மனிதனுடைய உரிமைக்காக இங்கே நீங்கள் செலவழித்த காரணத்தினால் என்னுடைய கண்டனத்தைத் தெரிவித்து நான் இங்கே அமர்கிறேன். (சிரிப்பு, மேசையைத் தட்டும் ஒலி).

## 5. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1988–89— அளித்தல்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1988–89ஆம் ஆண்டுக் குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மாமன்றத்தில் வைக்க முன்வந்துள்ளேன். இந்த மதிப் பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள மொத்தத் தொகை ரூ. 1,030.46 கோடியில் ரூ. 323.77 கோடி வருவாய்க் கணக்கிலும், ரூ. 706.69 கோடி மூலதனக் கணக்கிலும் வருகின்றன.



1989 மார்ச் 28] [டாக்டர் மு. கருணாநிதி]

நடப்பாண்டு எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு செலவினங்களைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்றத்தில் 1988–89ஆம் ஆண்டு வரவு-செலவு மதிப்பீடுகளை வைத்திருந்தபோதிலும், இவ் வாண்டில் பல்வேறு திட்டங்களுக்காகக் கூடுதல் செலவு செய்ய வேண்டியிருந்தது. இந்தச் செலவுகளில் சில, 1988 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் நாடாளுமன்றத்தில் ரூ. 419.36 கோடி அளவிற்கு வைக்கப்பட்ட, முதல் துணை மதிப்பீடுகளில் இடம் பெற்றன.

இப்பொழுது வைக்கப்பட்டுள்ள இந்த இறுதித் துணை மதிப் பீடுகளில் கோரப்பட்டுள்ள ரூ. 1,030.46 கோடியில் ரூ. 577.12 கோடி நடப்பாண்டில் இந்திய ரிசர்வ் வங்கியிட மிருந்து பெறப்பட்ட வழி வகை முன் பணங்கள் மற்றும் மிகைப் பற்றுக்களைத் திருப்பிக் கொடுக்கத் தேவைப்படுகிறது. இந்த மானியக் கோரிக்கை அனுமதிக்கப்படுவதால், தேவைக்கேற்ப இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து வழி வகை முன்பணம் மற்றும் மிகைப்பற்றுக்கள் பெற ஏதுவாக இருக்கும் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தத் துணை மதிப்பீட்டில் கோரப்பட்டுள்ள முக்கியமான சில ஒதுக்கீடுகள் கீழே சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு இடைக்கால நிவாரணத் தொகை, ஏனைய படிகள் வழங்கிய வகையில் சுமார் ரூ. 63 கோடி செலவிட வேண்டியுள்ளது. சட்டமன்றப் பேரவைக்கான தேர் தல்களை நடத்தியதற்கு ரூ. 7.32 கோடி கூடுதலாகச் செலவிட வேண்டியிருந்தது. கதர், கைத்தறி நெசவாளர் ஆகியோருக்குத் தள்ளுபடி உதவித் தொகை வகையில் பெருமளவில் நிலுவைகள் இருந்ததைக் கருதிப் பார்த்து, கூடுதலாக ரூ. 18.57 கோடி செலவிடப்பட்டது. ஏழ்மை ஒழிப்புத் திட்டங்களுக்காகக் கூடு தலாக ரூ. 27.42 கோடி வழங்கப்பட்டது. மேலும் பொது விநி யோக முறையைப் பராமரிப்பதற்காக, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு மேல் ரூ. 37 கோடி வழங்கப்பட்டது. சென்னை மாநகராட்சிக்கு ரூ. 4.60 கோடி தனி மானியம் வழங்கப்பட்டது. உள்ளூர் தீர்வை மேல்வரி, வீட்டு வரி ஆகியவற்றிற்கான இணை மானி யங்கள் வகையிலும் கேளிக்கை வரியில் பங்கு வகையிலும் உள் ளாட்சி மன்றங்களுக்குக் கூடுதலாக ரூ. 10 கோடிக்கு அனுமதி வழங்கப்பட்டது. மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட கடன் கள் மற்றும் முன்பணங்களைத் திருப்பிச் செலுத்தக் கூடுத லாக சுமார் ரூ. 16 கோடி தேவைப்பட்டது. லாரிகள் மூலம் குடிநீரைக் கொண்டுவந்து வழங்குவதற்காக, சென்னைப் பெரு நகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு, ரூ. 4 கோடி வழங்கப்பட்டது. சாலைகளைப் பராமரிக்க ரூ. 3.50 கோடி கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது. ஓய்வூதியம்

வகையில் செலவுப் பொறுப்புகளைச் சரிக்கட்ட ரூ. 33 கோடி கூடுதலாக ஒதுக்க வேண்டியிருந்தது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ஆகியவற்றின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தும் வகையில், அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் ரூ. 17.37 கோடி பங்கு மூலதனமாக மாற்றியமைக்கப்பட்டது. அரசுப் பணியாளர்களின் வீடு கட்டுவதற்கான முன்பணத் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூடுதலாக ரூ. 6.39 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திற்குக் ( HUDCO ) கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக அந்த இணையத்திற்கு ரூ. 6.33 கோடி வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளின் கீழ் தேவைப்படக் கூடிய கூடுதல் நிதி ஒதுக்கம் குறித்த விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் கோரப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்க வேண்டுமென இந்த அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-00)

4. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1988-89ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்புகிற உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கு இணங்க, 29–3–1989 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

6. அரசினர் சட்டமுன்வடிவு.

நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1989.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''





தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 மற்றும் அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு 1989ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1989) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

7. வரவு-செலவுத் திட்டம், 1989-90—பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1989–90ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்மீது இந்த அவையிலே என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைத் தெரிவிக்கும் முன் நான் என்னை இந்தச் சட்ட மன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய முதுகுளத்தூர் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அவையிலே நான் பேசுவதற்குரிய அரிய வாய்ப்பினை உருவாக்கித் தந்த என்னுடைய கழகத்தினுடைய தலைவர் என் இதயவேந்தன் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்து என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிற பல திட்டங்களை தமிழகத்திலுள்ள எல்லாத் தரப்பு மக்களும் ஒருமித்த கருத்தோடு வரவேற்றுப் பாராட்டியிருக்கிறார்கள். இந்தத் தமிழகத்தினுடைய பல ஆண்டுக்கால வரலாற்றைப் பார்க்கின்றபோது இந்த அளவுக்கு அனைத்துப் பகுதி மக்களுடைய பாராட்டுக்குரிய ஒரு வரவு-செலவுத் திட்ட அறிக்கையை நான் இதுவரையில் கண்டதில்லை; இந்தச் சபையின் வரலாற்றிலேயே அவ்வாறில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி] [1989 மார்ச் 28

ஏழை எளிய மக்களுக்காக மட்டுமல்லாமல், நடுத்தர மக்களுக்காக மட்டுமல்லாமல், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கக் கூடியவர்கள், இந்த நாட்டிலே விவசாயத்தை நம்பி வாழக்கூடியவர்கள், கைத்தறித் தொழிலை நம்பி வாழக்கூடியவர்கள், தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவரும் நன்மை பெறுகின்ற திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். அதிலும் இந்த ஆண்டு மிகப் பெரிய சிறப்பு என்னவென்றால் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களில் வன்னியர் சமூகத்தினரைச் சேர்த்து சீர் மரபினர் என்ற பிரிவினரையும் சேர்த்து அந்த வகையில் 20 சதவீதம் அவர்களுக்கு வேலைவாய்ப்பு, கல்வி வசதி ஆகியவற்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் காண்கிறபோது தமிழக மக்கள் உண்மையிலேயே தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை மிகமிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு அவர்கள் தந்திருக்கின்ற திட்டங்கள் ஏழை, எளிய மக்களின் இதயங்கள் குளிருகின்ற திட்டங்களாகும். அப்படிபட்ட நல்ல திட்டங்களைச் சாதனை நாயகன் டாக்டர் கலைஞர் அவர்கள் தந்திருக்கிறார்கள். எண்ணற்ற இலவசத் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள். சத்துணவுத் திட்டத்தில் முன்னேற்றம்,, அதைப்போல கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டுகிற திட்டம், கைத்தறி நெசவாளர்கள் ஏழைகளாக இருந்தால் கைத்தறியை இனாமாக வாங்கிக் கொடுக்கிற திட்டம் போன்ற திட்டங்களை எல்லாம் உருவாக்கி இருக்கிறார்கள். எனவே கைத்தறி நெசாவர்களுடைய துயர் துடைக்க இந்த அரசு மிகப் பெரிய சாதனைகளை உருவாக்கி இருப்பதை நான் பாராட்டுகிறேன்.

மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற எங்களுடைய இராமநாதபுரம் போன்ற பகுதிகளில் பருவமழை தவறி விட்ட காரணத்தால் அங்கு மக்கள் வறட்சியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தமிழகத்திலே வறட்சியாக இருக்கின்ற பகுதிகளிலே உள்ள விவசாய மக்களுக்கு அரசாங்கத்தினுடைய கடனை மட்டுமல்ல; கூட்டுறவுக் கடன்கள் உட்பட அத்தனை கடன்களையும் ரத்து செய்து அறிவித்திருப்பது மிக, மிக வரவேற்கத்தக்கதாகும். நீண்ட காலக் கடன், மத்திய காலக் கடன் ஆகியவற்றுக்கான அபராத வட்டியை ரத்து செய்திருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். இந்த அளவுக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கு நல்ல வாழ்வினை அளித்திருக்கிற தமிழக முதல்வர் அவர்களை நான் பாராட்டுகிறேன். அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது என்னவென்றால் இதிலே முக்கியத்துவம் கொடுத்து குடிநீர்ப்பிரச்சினைக்காக 12 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதுதான். என்னுடைய கருத்து என்னவென்றால் வறட்சி அதிக



1989 மார்ச் 28] [திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

மாக இருக்கின்ற தமிழகத்தில் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தலையாய பிரச்சினையாக எடுத்துக்கொள்ள வேண்டும். எனவே, இந்த நிதிநிலை அறிக்கையிலே காணப்படுகிற தொகை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கப் போதுமானது என்று நான் கருதவில்லை. எனவே, தயவுசெய்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை தலையாய பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, வறட்சியான பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு உதவுகின்ற வகையில் ஊர்கள் தோறும் ஆழ்குழாய்க் கிணறுகள் போட்டு, குடிநீர்க் கிணறுகள் வெட்டி, நல்ல தண்ணீரே கிடைக்காத பகுதிகளுக்கு லாரிகள் மற்றும் டிராக்டர் போன்ற வாகனங்கள் மூலமாக நல்ல தண்ணீர் வழங்கி அந்த மக்களுடைய கஷ்டத்தைப் போக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

குடிநீர்ப் பிரச்சினைக்காக கடந்த கால அரசு பல கோடி ரூபாயை இந்தத் தமிழ் நாட்டிலே செலவழித்து இருந்தாலும் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் குழாய்கள் பதிக்கப்படவில்லை. போரில் தண்ணீர் இல்லை, குழாய்கள் பதிக்கப்பட்டிருந்தால் அங்கே வேண்டிய தண்ணீர் மற்றும் மின்வசதிகள் இல்லை. ஆகவே, அரசாங்கத்தினுடைய பணம் விரயமானதே தவிர குடிதண்ணீர் கிடைக்க வழி ஏற்படவில்லை. குடிநீர்ப்பிரச்சினை தீர்ந்தபாடில்லை. ஏற்கெனவே பல இடங்களில் மேல்நிலைத் தொட்டி கட்டி அதற்கு திறப்பு விழா எல்லாம் நடத்தியும் அந்தப் பகுதி மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்படாமல் நீண்டகாலமாக இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை எல்லாம் இந்த அரசு உணர்ந்து ஏற்கெனவே அரைகுறையாக வைக்கப்பட்டிருக்கிற திட்டங்களை எல்லாம் சீர்படுத்தி, அந்த மேல்நிலைத் தொட்டிகளுக்கு ஆழ்குழாய்க் கிணறுகளை ஏற்படுத்தி தண்ணீர் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விவசாயிகளுக்காக மட்டுமல்ல; தொழிலாளர்களுக்காகவும் பலவிதமான சலுகைகளை வழங்கி இருக்கிறது. குறிப்பாக கட்டுமானத் தொழிலாளர்களுக்கு அதாவது கொத்தனார் உட்பட யார் இறந்தாலும் 10 ஆயிரம் ரூபாய் இனாமாக வழங்கப்படுகிற அறிவிப்பைக் காண்கிறபோது தமிழகத்திலேயே இதுவரையில் அப்படிப்பட்ட திட்டம் வந்ததாகத் தெரியவில்லை.

(முற்பகல் 11-10)

ஆகவே அரசாங்கத்திலிருந்து அலுவலர்களுக்கு இதுவரை பல சலுகை இருந்து இருக்கலாமே தவிர நாட்டிலே வாழ்கின்ற ஏழையெளிய மக்களுக்கு அவர்களுக்கு ஒரு நிபந்தனை எல்லையில்லாமல் பொருளாதார வரையறை இல்லாமல் எந்த ஒரு தொழிலாளி இறந்தாலும், அந்தத் தொழிலாளிக்கும் இவ்வளவு பெரிய

சலுகை இதுவரையிலும் எந்த அரசாலும் அறிவிக்கப்பட்டதில்லை. அப்படிப்பட்ட சலுகை அறிவிப்பைக் கண்டு நான் இந்த அரசாங்கத்தைப் பாராட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதை நான் வரவேற்கிறேன்.

அதுபோலவே, கட்டிடத் தொழிலாளர்களுக்கு உள்ளது போல, கார் ஓட்டுகின்றவர்கள், பஸ் ஓட்டுகின்றவர்களாக இருந்தாலும், லாரி ஓட்டுகிறவர்களாக இருந்தாலும், டாக்சி ஓட்டுகின்றவர்களாக இருந்தாலும், தனியார் கார் ஓட்டுகின்றவர்களாக இருந்தாலும், அவர்கள் ஓட்டிச் செல்லுகின்றபோது விபத்து ஏற்பட்டால் அதில் இறந்துவிட்டால் அவர்களுக்கும் இந்த தொகை என்று வழங்கி இருப்பதை நான் மனதாரப் பாராட்டுகிறேன். இப்படி ஒரு அறிவிப்பு இந்த நாட்டிலே எங்கும் நடைபெற்றதே இல்லை. அதற்கு வரலாறும் இல்லை.

அப்படிப்பட்ட ஒரு நல்ல திட்டத்தை, நல்ல அறிவிப்பை இந்த அரசு செய்திருப்பதற்காக நான் உண்மையிலேயே மிகமிக பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோலவே, தேர்தல் காலங்களில், சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்று நம்முடைய கழகத்தின் சார்பிலே அறிவிக்கப்பட்டு, அந்த அறிவிப்புக்கிணங்க பல திட்டங்கள், ஒன்றல்ல, இரண்டல்ல, எந்தத் துறை மக்களும் பாதிக்கப்படாத வண்ணம், இந்த நாட்டுக்கு நல்ல பல திட்டங்களை, சொன்னதை முழுக்க முழுக்க நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற நம்முடைய அரசாங்கத்தின் பெருந்தன்மையை இந்த நாட்டு மக்கள் பாராட்டுகிறார்கள்.

அதுபோலவே, ஏழையெளிய மக்களுக்கு ரூ. 35 ஒய்வூதியம் என்று இருப்பதை இன்றைய தினம் ரூ. 50 என்று அதிகமாக ஆக்கி இருக்கின்றார்கள்.

அதுபோலவே, பொங்கல் விழாவாக இருந்தாலும், குறிப்பாக தமிழ் வருடப் பிறப்பாக இருந்தாலும், தீபாவளியாக இருந்தாலும், திருவிழாக்காலங்களில் ஏழையெளிய மக்களுக்கு 5 கிலோ அரிசி இனாமாக வழங்கப்படுவதை நான் மனமாறப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

அதுபோலவே, பொங்கலுக்கு ஏழையெளிய மக்களுக்கு வேஷ்டி சேலை தருகின்ற நிகழ்ச்சி. இதற்கு முன்பு இருந்த அரசு, அறிவிப்போடு இருந்திருக்கலாமே தவிர, பத்திரிகைகளிலே செய்தியாக வந்து இருக்கலாமே தவிர, தேர்தல் காலத்திலே வந்த ஒரு அறிவிப்பாக இருந்ததே தவிர அது செயல்பெற்றதாக தெரியவில்லை. அதற்கு வரலாறும் இல்லை. ஆனால் இன்றையதினம் நம்முடைய கழகத்தினுடைய அரசு சார்பிலே டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்த இந்த நிதிநிலை அறிக்கை மக்கள் பாராட்டுகிற அள





வுக்கு இருக்கிறது. தாய்மார்களுக்கு குறிப்பாக கர்ப்பவதியாக இருக்கக்கூடிய தாய்மார்களுக்கு 4 மாதங்களுக்கு அவர்களுக்கு ஊட்டச்சத்து உணவுக்காக என்று ரூ. 200 அனுமதித்திருக்கிறார்கள். இதற்கு முன்பு முந்தைய அரசுகூட இந்தத் திட்டத்தை அறிவித்து இருந்தாலும் அவர்கள் பணம் வழங்கியதாக வரலாறு இல்லை. ஆனால் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற அடிப்படையில் இந்த திட்டத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு அறிவித்து இருக்கிறது. மக்களை மதிக்கின்ற அளவுக்கு மக்கள் குரலே மகேசன் குரல் என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் தத்துவத்திற்கு ஏற்ப இந்த திட்டத்தை அறிவித்து அப்படியே நிறைவேற்றியிருக்கிறார்கள். அப்படி நல்ல பல திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டிருப்பதை நாம் காணுகிறோம். அப்படிப்பட்ட நல்ல அறிவிப்பை கண்டு இந்த அரசை மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுபோலவே, தாய்மார்களுக்கு, 30 விழுக்காடு வேலை வாய்ப்பு என்று அறிவித்திருக்கிறார்கள். அது ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம் அல்லது அரசாங்கம் எந்தத் துறையாக இருந்தாலும் அங்கு தாய்மார்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அப்படி ஒரு மிகப் பெரிய வாய்ப்பை இந்த ஆண்டு உருவாக்கி இருக்கின்றார்கள்.

அதைப்போலவே, பள்ளி இறுதி வரை படித்தவர்கள், பட்டம் பெற்றவர்கள் அவர்கள் வேலை இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பவர்கள், இந்த நாட்டிலே லட்சோபலட்சம் பேர்கள் இருக்கின்றார்கள். அவர்களையெல்லாம் மனதிலே வைத்து அந்தப் படித்த இளைஞர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 200 ஊதியம் வழங்க அறிவித்திருக்கின்றார்கள். அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியங்களில் 60 பேர்களுக்குக் குறையாமல் வேலை கொடுக்க வாய்ப்புகளை இந்த வரவு செலவுத் திட்டத்திலே உருவாக்கியிருப்பதை நாம் காணுகிறோம். அனைத்து தரப்பு மக்களும் இதைப் பாராட்டுகிறார்கள். அதற்குக் காரணம் எந்தப் பிரிவினராவது இந்த வரவு செலவுத் திட்டத்தில் விடப்பட்டுவிட்டார்களா என்று பார்த்தால் யாருமில்லை என்று சொல்லும் அளவுக்கு இருக்கின்றது. அனைத்து துறையிலே இருக்கக்கூடியவர்களுக்கு அது விவசாயியாக இருந்தாலும், தொழிலாளியாக இருந்தாலும், தாய்மார்களாக இருந்தாலும் அல்லது தொழில் அதிபர்களாக இருந்தாலும், விவசாயப் பெருங்குடி மக்களாக இருந்தாலும் சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றது. வியாபாரிகளாக இருந்தாலும், அவர்களுக்கும் விற்பனை வரிச் சலுகை, பலபொருள்களுக்கு ஒரு முனை வரியாக விற்பனை வரி விதிப்பு வழங்கியிருக்கின்றார்கள். ஒரு நல்ல வரவு செலவுத் திட்டம் என்று இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கின்ற இந்த நேரத்தில், ஏதோ துரதிருஷ்டவசமாக

சட்டமன்றத்திலே நடந்திருக்கின்ற நிகழ்ச்சிகளைப் பற்றி எண்ணும்போது, மக்களை திசை திருப்பும் நோக்கமாகத்தான் இந்த நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்ற ஐயப்பாட்டை எனக்குத் தோற்றுவிக்கிறது.

இந்த உயர்ந்த, சிறந்த நிதிநிலை அறிக்கையை மக்களும் அத்தனை அரசியல் கட்சிகளும் பார்த்து பாராட்டிவிடக்கூடாது என்று கருதி மக்களுடைய கவனத்தைத் திசை திருப்புவதற்காகத்தான் இத்தகைய நிகழ்ச்சிகள் நடந்திருக்குமோ என்ற ஐயப்பாட்டை எனக்கு ஏற்படுத்துகிறது. எவ்வளவு பெரிய திட்டங்களை, சிறந்த திட்டங்களை நாம் இந்த நிதிநிலை அறிக்கையிலே காணுகிறோம். டாக்டர் கலைஞர் அவர்கள் நல்ல பல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதுபோலவே, குடும்பத்திலே உள்ளவர்கள் யாராவது இறந்தால், திடீரென்று இறந்துவிட்டால் ஏழையாக இருந்தால், வசதியற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கு ரூ. 2,000 இனாம் தொகை, அதற்கு நிதிநிலை எல்லை கிடையாது. வருமான வரம்பு கிடையாது. ஏழையாக இருந்தாலும் நடுத்தர மக்களாக இருந்தாலும் அவர்களுக்கு வாழ்வளிக்கக்கூடிய திட்டமாக உருவாகியிருக்கிறது. அத்தனை திட்டங்களையும் மிக மிகப் பாராட்டுவதோடு, குறிப்பாக கைத்தறி சங்கங்களில் பல இடங்களில் ஊழல்கள் நடந்திருக்கின்றன. அந்தக் கைத்தறி சங்க ஊழல்களை அரசு பரிசீலித்து அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கைத்தறித் தொழிலை அதிகமாக நம்பிக்கொண்டிருக்கின்ற ஏழை நெசவாளர்களுக்கு கைத்தறித் தொழிலுக்கு கைத்தறி வாங்கிக்கொடுப்பதற்காகவும் தொகை இனாமாக கொடுக்கவும் நிதிநிலை அறிக்கையில் சலுகை வழங்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே அரசால் வழங்கப்பட்ட சலுகைகள் மக்கள் அனுபவிக்க முடியாத அளவுக்கு நெசவாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்களில் பல கோடி ரூபாய்கள் அளவுக்கு பல இடங்களில் மோசடி செய்திருக்கின்றார்கள். அப்போது இருந்த ஆட்சியிலே நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அந்த ரூபாயை மோசடி செய்து கையாடல் செய்து சாப்பிட்டிருக்கின்றார்கள். அதை உடனடியாக பரிசீலித்து யார் தவறு செய்திருந்தாலும், அரசியல்வாதியாக இருந்தாலும், அதிகாரியாக இருந்தாலும், சங்க நிர்வாகியாக இருந்தாலும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்கக் கூடாது. அதைச் செய்யாமல் போனால், ஏற்கெனவே பல கோடி ரூபாய் மக்கள்



வரிப் பணத்தை பாழ் ஆக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் விட்ட குற்றத்திற்கு ஆளாவோம். ஆகவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, இந்த நாட்டு மக்களுக்கு அவர்களைப் பற்றி அடையாளம் காட்ட வேண்டும்.

அதுபோல சீர்மரபினரை மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்திருப்பதை மிகப் பெரிய அளவில் வரவேற்கிறேன். சீர்மரபினர் மட்டுமல்ல இன்னும் பல்வேறு பிரிவினரை சேர்த்திருக்கிறார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் மறவர்கள் அதிகமானவர்கள் வாழ்கிறார்கள். அவர்களை எல்லாம் சீர்மரபினர் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். அதுபோல உசிலம்பட்டியில் கள்ளர்கள் நிறையப்பேர் வாழ்கிறார்கள். அவர்களையும் சீர்மரபினர் பிரிவில் சேர்த்திருக்கிறார்கள். வெள்ளையர் ஆட்சிக் காலத்திலும், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் கள்ளர் சீரமைப்பு என்கிற ரெக்ளமேசன் ஸ்கீம் ஒன்றை, அமைப்பு ஒன்றினை ஏற்படுத்தினர். பின்னர் அது எடுக்கப்பட்டது. இன்றைக்கு மறுபடியும் கள்ளர் சீரமைப்பு என்கிற ஓர் அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல மறவர்களுக்காக சீரமைப்புக் குழு ஒன்று, ரெக்ளமேசன் ஸ்கீம் ஏற்படுத்தப்பட வேண்டும். காரணம் இராமநாதபுரம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. அங்கே வாழ்கிற மறவர் பெருங்குடி மக்கள் தொழில் வசதி எதுவும் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். வெள்ளையர் ஆட்சிக் காலத்தில் குற்றப் பரம்பரை என்கிற அடிப்படையில் அவர்களுக்கு எந்தவித வசதியும் செய்து தரப்படவில்லை. ஆகவே, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாழ்கிற சீர் மரபினருக்காக, அந்தப் பகுதியின் அபிவிருத்திக்காக, சீர்மரபினர் அபிவிருத்தி அமைப்பு என்கிற ஓர் குழுவை உருவாக்கி, அதற்கு டெப்டி கலெக்டர் போன்ற அதிகாரியைப் போட்டு மக்களின் அபிவிருத்திக்கு அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றையதினம் 20 சதவிகித இடங்கள் வேலை வாய்ப்பு, படிப்பு போன்றவற்றை மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதற்காக நான் இந்த அரசைப் பாராட்டுகிறேன். அதே சமயத்தில் அதில் பல இன்னல்கள் இருப்பதால் தயவு செய்து இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்த ஆவன செய்ய வேண்டும். அதற்குப் பொதுவில் இருக்கிற 50 சதவிகிதத்திலிருந்து 30 சதவிகிதத்தை எடுத்து மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்காக ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, 173.75 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இந்தத் திட்டத்தில் வழங்கப்பட்ட உணவு சத்துள்ள உணவாக இல்லை. சத்துணவு அமைப்பாளர்கள் சுரண்டுகின்ற நிலைமை இருக்கிறது. அதன்

[திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி] [1989 மார்ச் 28

காரணமாக மாணவர்களுக்கும் சிறார்களுக்கும் அந்தச் சத்துணவு உள்ளபடியே போய்ச் சேரவில்லை. ஆங்காங்கே இருக்கிற ஆளும் கட்சியினரின் துணையோடு சத்துணவு அமைப்பாளர்கள் பல லட்சக்கணக்கான ரூபாய் மோசடி செய்திருக்கிறார்கள். மாண்புமிகு சத்துணவு அமைச்சர் அவர்கள் ஸ்பெஷல் ஸ்குவாட்ஸ் என்று ஆய்வு செய்ய அதிகாரிகளை ஆங்காங்கே அனுப்ப ஏற்பாடு செய்து, ஏற்கெனவே கையாடல் செய்திருப்பவர்கள் மீது, மாணவர்களுக்கு, சிறுவர்களுக்கு பால்வாடி குழந்தைகளுக்கு சத்துணவு போய்ச் சேராமல் தடுத்து, சத்துணவை மோசடி செய்திருப்பவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுத்து வேலை நீக்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தவகையில் நடவடிக்கை எடுத்து, வேலை நீக்கம் செய்துள்ள காலியிடங்களில், புதிய முறையில் போடப்பட்டுள்ள அரசாணைப்படி தகுந்த ஆட்களை நியமிக்க வேண்டும்.

ஒரு காலத்திலே, அ.தி.மு.க. தேர்தல் காலத்தில் மேடைகளிலே ஒன்றைச் சொல்லி வந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகமோ, கலைஞர் அவர்களோ ஆட்சிக்கு வந்தால் சத்துணவுத் திட்டத்தை எடுத்துவிடுவார்கள் என்று சொல்லி வந்தார்கள். அப்போது மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அறிக்கையின் மூலம் மிகத் தெளிவாக ஒன்றை சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்தை நாங்கள் எடுக்க மாட்டோம். சிறார்களும் மாணவர்களும் சாப்பிடும் வகையில் முட்டையும் கலந்து சத்துள்ள உணவாக வழங்கப்படும் என்று சொன்னார்கள். அந்த வகையில் சொன்னதை நிறைவேற்றும் வண்ணம் இன்றைக்கு 174 கோடி ரூபாய் சத்துணவுத் திட்டத்திற்கு ஒதுக்கியிருப்பதை நான் பாராட்டுகிறேன். ஆனால் நாம் வழங்குவதை அப்படியே சத்துள்ள உணவாக அமைப்பாளர்கள் வழங்குகிறார்களா, உண்மையிலேயே சிறார்களுக்கும், மாணவர்களுக்கும் அது போய்ச்சேருகிறதா என்பதையும் நாம் கண்காணிக்க வேண்டும். ஏற்கெனவே ஆங்காங்கே இருக்கிற சத்துணவு அமைப்பாளர்கள் குழந்தைகளுக்கு சத்துணவை முறையாக வழங்காமல் அரிசி, பருப்பு போன்றவற்றை எல்லாம் வீட்டுக்கு எடுத்துக்கொண்டு போய் லட்சக்கணக்கில் சம்பாதித்திருக்கிறார்கள். அத்தகையவர்களை எல்லாம் கண்டுபிடித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் மீண்டும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களை ரத்துச் செய்வது பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சிறு விவசாயிகள், பெரிய விவசாயிகள் என்று சொல்லப்படுவதைப் பொறுத்தவரையில் என்னுடைய ஒரு வேண்டுகோள். எங்கள் பகுதியைப் பொறுத்தவரையில் சிறு விவசாயிகளும், பெரிய விவசாயிகளும் வாழ்க்கை நிலையில் ஒரே அளவில்



1989 மார்ச் 28] [திரு காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி]

தான் இருக்கிறார்கள். காரணம் கடந்த 4, 5 ஆண்டுகளாக வறட்சியின் காரணமாக, விவசாயம் பாழ் ஆகி, நெல் பயிர் எல்லாம் சாவியாகி விட்டபடியால் மாட்டுத்தீவனம் வாங்க கூட வக்கில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக 5 ஏக்கர் புஞ்சை நிலம் இருந்தாலே அவன் பெரிய விவசாயி ஆகிவிடுகிறான். ஆனால் எங்கள் பகுதியைப் பொறுத்த வரையில் வானம்பார்த்த பூமியாக 5 ஏக்கர் நிலம் இருக்கிற விவசாயி கூட தன்னுடைய வாழ்க்கையை நடத்த வருமானமின்றி கஷ்டப்படுகிறான். ஆகவே எங்கள் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு, வறட்சிப் பகுதியில் வாழ்கிற மக்களுக்கு, சிறிய விவசாயி, பெரிய விவசாயி என்கிற வித்தியாசம் பாராட்டாமல் அனைத்து விவசாயிகளும் கட்ட வேண்டிய கூட்டுறவுக் கடன்களை எல்லாம், குறுகிய காலக் கடன்களை எல்லாம் தயவுசெய்து ரத்துச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

144355

(முற்பகல் 11–20)

அதைப் போலவே மத்திய காலக் கடன்களுக்குள்ள வட்டியையும் ரத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து தொழில்களுக்கான சலுகை, தொழிலிலே [illegible]மான சலுகைகள் வழங்கப்பட்ட இருக்கின்றன. இன்றைக்கு நடுத்தரத் தொழில்கள், பெரிய தொழில்கள் சென்னையிலே உருவாகி யிருக்கின்றன. தஞ்சை மாவட்டத்தில் நரிமணம் பகுதியில் ஆயில் கார்ப்பரேஷன் இயற்கை வாயுவை எடுக்கும் திட்டத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இது மக்களுக்குப் பரவலாகப் போகக் கூடிய வகையில், சிறிய சிறிய தொழில்களை ஆங்காங்கே உருவாக்க வேண்டும். எங்களுடைய மாவட்டமாகிய இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறிய தொழிற் பேட்டைகள் அதிகமாக இல்லை. விரல்விட்டுச் சொல்லப்போனால், பரமக்குடியில் ஒரு சிறிய தொழிற்பேட்டை இருக்கிறது. அது ' சிட்கோ 'வின் கீழ் இருக்கிறது. எனவே ஒவ்வொரு தாலுக்காவினுடைய தலைநகரத்திலும் ஒரு சிறு தொழிற்பேட்டை இருக்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முதுகுளத்தூரை தலைநகராகக் கொண்டு ஒரு சிறு தொழிற்பேட்டையையும், அதைப்போல இராமநாதபுரம், திருவாடானை போன்ற இடங்களிலும் சிறு தொழிற்பேட்டைகளையும், ' சிட்கோ ' நிறுவனத்தின் மூலம் உருவாக்க வேண்டும். ' சிப்காட் ' தொழிற்பேட்டை மானாமதுரையில் ஒன்று இருக்கிறது. அது இரண்டு மாவட்டங்களுக்குச் சேர்ந்து இருக்கிறது. ஆகவே மாவட்டத்திற்கு ஒன்று என்று ' சிப்காட் ' தொழிற்பேட்டை இருக்க வேண்டும். அதைப்போல ஒவ்வொரு தாலுக்கா தலைநகரங்களிலும் சிறு தொழிற்பேட்டை உருவாக்க வேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள்.

D
V 211,31'N89
[illegible]

அடுத்து எங்களுடைய மாவட்டத்தில் நல்ல இயற்கை கனி வளங்கள் இருக்கின்றன. உதாரணமாக சிவகங்கையில் கிராபைட் மிகப் பெரிய அளவுக்கு பூமியில் உருவாகியிருக்கிறது. இதற்கு முன்பிருந்த அரசு அதை எடுப்பதை தடைப்படுத்தி விட்டார்கள். அதை யாரும் எடுத்து தொழில் செய்ய உரிமம் வழங்கப்படவில்லை. அரசாங்கமும் பப்ளிக் செக்டாரில் அந்தத் தொழிலை உருவாக்கவில்லை. இப்போது நம்முடைய அரசு அதைப் பரிசீலித்து பெரிய திட்டமாக சிவகங்கைப் பகுதியில் கிராபைட் தொழிற்சாலை உருவாக்க சுமார் 100 கோடி ரூபாய் திட்டத்தில் அந்தத் தொழிற்சாலையை உருவாக்கினால், அதன் மூலம் ஏராளமான அன்னியச் செலாவணியைப் பெற வாய்ப்பு இருக்கிறது. இதைப்போல இராமநாதபுரம் பகுதியில் ஆற்றங்கரைப் பகுதியில் மிகப். பெரிய அளவுக்கு சிப்பிகள், சுண்ணாம்புக்கல் போன்ற கனிவளங்கள் கிடைக்கின்றன 'டாமின்' ஸ்தாபனம் அதை முறையாகப் பயன் படுத்தவில்லை அவற்றை முறையாக எடுக்கவில்லை. என்னுடைய உரிமத்தை வழங்க வேண்டும். அந்தக் கனி வளத்தைக் பணிவான கருத்து, தனியாருக்கு அந்தக் கனிவளம் எடுக்கும் கொண்டு நடத்தப்படும் தொழில்களை உருவாக்க விரும்பும் அத்தனை பேருக்கும் உரிமம் வழங்கப்பட வேண்டும். அதை மூலப் பொருளாகக் கொண்டு சிறு சிறு தொழில்களை உருவாக்க வேண்டும். கால்சியம் கார்பனேட், வெள்ளை செம்பவுடர், ஹைட்ரேட்லைம் போன்ற தொழில்களை அடிப்படையாக உருவாக்கிகொள்ள வாய்ப்பு ஏற்படும்.

இன்றையதினம் ஒயிட் சிமென்ட் இந்தியாவிலேயே இரண்டு இடங்களில்தான் உற்பத்தியாவதாக நான் கேள்விப்படுகிறேன். ஒன்று ராஜஸ்தான். இன்னொன்று, கேரளாவில் உள்ள வேம்ப நாடு. சிப்பிச் சுண்ணாம்பை வைத்து ஒயிட் சிமென்ட் தயாரிக்கும் வாய்ப்பு எங்களுடைய இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. எனவே அந்த ஒயிட் சிமென்ட் தயாரிக்கும் பேக்டரியை, பப்ளிக் செக்டார் அல்லது பிரைவேட் செக்டாரில் ஆரம்பிக்க அனுமதித்து, பல்லாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பை உருவாக்குவதோடு, அந்தக் கனிவளத்தையும் உபயோகித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாலிநோக்கம் பகுதியில் பெரிய உப்புத் தொழிற்சாலை இருக்கிறது. சால்ட் கார்ப்பரேஷனுக்குச் சொந்தமான அந்த உப்புத் தொழிற்சாலை சரிவர செயல்படவில்லை. அங்கே தயாரிக்கிற உப்பை எடுத்து, வேறு இடங்களுக்கு அனுப்பி பை-பிராடக்ட்ஸ் தயாரிக்க திட்டமிட்டிருக்கிறார்கள். அதை வேதாரண்யத்திற்கு அனுப்பி சோடா ஆஷ், குளோரைட் தயாரிக்க திட்டமிட்டு இருக்கிறார்கள். அந்த வாரியம் அரசாங்கத்திற்குச் சொந்தமாக இருக்கிற காரணத்தால், வாலிநோக்கத்தில் கிடைக்





கும் உப்பை எடுத்து, அங்கே ஏற்கெனவே அரைகுறையாக இருக்கும் மக்னிஷ்யம் பிளான்டை முழுமை பெறச்செய்ய வேண்டும். அதைப் போலவே குளோரைட் தயாரிப்பது, குளோரின் சோடா ஆஷ் தயாரிப்பது போன்றவற்றை அரசாங்கமே செய்தால் நல்லது. அல்லது பிரைவேட் செக்டாருக்கு அனுமதி தந்து, அந்த உப்பை எடுத்து, அந்தத் தொழிலை. உருவாக்குவதற்கு பெரு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழில்களைப் பொறுத்தவரையில் இன்னும் ஒரு பாதக மான நிலைமையைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த நாட்டிலே ஏற்கெனவே பின்தங்கிய பகுதிகளாக பல மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. (மணி அடிக்கப்பெற்றது) இன்னும் என்னுடைய தொகுதியைப் பற்றிய பிரச்சினைகளுக்கு வரவில்லை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் சிறிது நேரத்தை நீட்டித்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கெனவே மத்திய அரசு நம்முடைய தமிழகத்திலே பல மாவட்டங்களை பின்தங்கிய பகுதிகளாக அறிவித்திருக்கிறது. இதை 3 பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார்கள். அவை 'ஏ', 'பி, மற்றும் 'சி' கேட்டகரிகளாகும். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் 'ஏ' கேட்டகிரி கிடையாது. அவை வடமாநிலங்களில் தான் இருக்கின்றன. அவற்றுக்கு 25 சதவிகிதம்.

வடமாநிலங்களில் வேண்டுமானால் 25 சதவிகிதம் உதவி பெறுகிற நிலைமை இருக்கலாம். ஒருவேளை பாண்டிச்சேரி மாநிலத்தில் இருக்கலாம். ஆனால் நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில் 'பி' கேட்டகிரி என்கிற அடிப்படையில் ஏறத்தாழ 15 மாவட்டங்கள்—140 தாலுக்காக்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த இடங்களிளெல்லாம் கடந்த 30-9-1988 தேதியிலிருந்து மத்திய சர்க்கார் வழங்கிய 15 சதவித மானியத் தொகையை நிறுத்திவிட்டார்கள். அதாவது மத்திய அரசால் வழங்கப்பட்ட அந்த மானியத் தொகை இப்போது எந்தத் தொழிலுக்கும் இல்லை. அது சிறு தொழில்களானாலும் சரி, நடுத்தரத் தொழில்களானாலும் சரி, பெரிய தொழில்களானாலும்சரி—தமிழ்நாட்டிலேயே மத்திய சர்க்காரின் மானியத் தொகை 15 சதவிகிதம் இல்லை. மாநில சர்க்காரில்தான் 10 சதவீதம் வழங்கப்படுகிறது. எங்கள் இராமநாதபுரம் மாவட்டம் முழுவதுமே பின்தங்கிய மாவட்டமாகும். அங்கே 'பி' கேட்டகிரி என்கிற அடிப்படையில் 15 சதவிகிதம் மத்திய சப்சிடியை மாநில அரசு மத்திய அரசை அணுகி வாங்கித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டம் முழுவதற்குமே 15 சதவிகிதம் மானியத் தொகை வாங்கிக் கொடுக்க முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போது தான் எங்கள் பகுதியில் தொழில் வளரும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து பல தொழில்களுக்கு டெர்ம் லோன் 'டிக்' மூலமாகவும் 'சிப்காட்' மூலமாகவும் வழங்கப்படுகிறது. கட்டிடம் கட்ட, இயந்திரங்கள் வாங்க வழங்கப்படுகிறது. ஆனால் இன்றையதினம் ஷெட்யூல்ட் வங்கிகளும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், 'ஒர்க்கிங் கேப்பிட்டல்' கொடுக்காததன் காரணமாக எங்கள் பகுதியில் பல தொழிற் சாலைகள் பாதிக்கப்பட்ட தொழிற் சாலைகளாக 'சிக் தொழிற்சாலைகளாக' மாறியிருக்கின்றன. அந்த நிலைமையைப் போக்க ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த நடைமுறை குறிப்பாக கருநாடகம், ஆந்திரம் போன்ற மற்ற மாநிலங்களில் செயல்படுத்தப்படுகிறது. அதாவது சிங்கிள் விண்டோ சிஸ்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். ஒருவர் எந்தத் தொழிலை நடத்துவதற்கு முன்வந்தாலும், அரசாங்கத்திலிருந்தே தொழில் சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரியை நியமித்து அவர் மூலமாக அனைத்து உரிமங்களையும், கடன் வசதிகளையும் பெற்றுத் தருவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தர வேண்டும். மனு தயாரிப்பதிலிருந்து ஒர்க்கிங் கேப்பிட்டல் பேங்குகள் மூலமாக வாங்குகிற வரை அந்த அதிகாரி உதவி செய்கிற நிலைமையை உருவாக்க வேண்டும். இதற்காகவே சிங்கிள் விண்டோ சிஸ்டம் ஏற்படுத்தப்பட வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஒன்றிரண்டு வேறுசில கருத்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதி நீண்ட நெடுங்காலமாகவே பின் தங்கிய பகுதியாக இருந்து வருகிறது. அதாவது என்னுடைய தொகுதியான முதுகுளத்தூர் தொகுதி என் வணக்கத்திற்குரிய தலைவர் திரு. முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் அரசியலில்ஈடுபட்ட காலத்திலேயிருந்து வெள்ளைக்காரன் ஆண்ட காலம்வரை அந்தத் தொகுதி மாற்றாந்தாய் மனப்பான்மையோடு மதிக்கப்பட்டு வந்தது. அதன் காரணமாக அந்தப் பகுதியிலே எந்த வளமும் ஏற்படவில்லை. அங்கே எந்தத் தொழிலும் இல்லை அதற்குப் பிறகு வந்த 12, 13 வருஷ அ.தி.மு.க. ஆட்சியிலும் எந்த முன்னேற்றகரமான பணியும் அங்கே செய்யப்படவில்லை. அங்கேதான் 'மலட்டாறு' ஓடுகிறது. தாய்மார்கள் மன்னிக்க வேண்டும். குழந்தை பெறாத தாய்மார்களைப் பார்த்து சொல்லுகிற வார்த்தை அது. அங்கே இருக்கிற ஆற்றில் போகிற தண்ணீர் கடலிலே போய் வீணாகச் சேர்ந்துவிடுகிறது. 1972–1973-ஆம் ஆண்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மலட்டாறு அணைக்கட்டுத் திட்டத்தை ஆய்வு செய்து அறிவித்தார்கள். அன்றையதினம் 3½ கோடி ரூபாயின் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படுவதாக அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதற்குப் பின்னால் அண்ணா தி.மு.க. ஆட்சியில் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். காலத்தில் அந்தத் திட்டம் 5 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டது. இவ்வாறு





தயாரிக்கப்பட்ட திட்டம் கிடப்பில் போடப்பட்டது. அந்தத் திட்டம் இப்போது மீண்டும் முதல்வர் அவர்கள் காலத்திலே நிறைவேற்றப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப் போலவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரகனூர் அணைக் கட்டுத் திட்டத்தின் திறப்பு விழா நடந்த போது 'கிருதமால்' திட்டத்தையும் அறிவித்தார்கள். அந்தத் திட்டம் அன்று முதல் இன்றுவரை கிடப்பிலேயே இருக்கிறது. அதைப் போலவே நாராயணக் கேணித் திட்டம், கூத்தங்கான் திட்டம், வைகை சீரமைப்புத் திட்டம் எல்லாம் அப்படியே இருக்கின்றன. ஆகவே தி.மு.க. ஆட்சியிலிருந்தபோது 1975 வரை இருந்து வந்த திட்டங்கள் அன்றிருந்த நிலையில் அப்படியே இருக்கின்ற நிலைமையைத் தான் பார்க்கிறோம். சங்கரதேவன் கால்வாய்த் திட்டம், ரகுநாத கால்வாய்த் திட்டம் போன்ற பல திட்டங்கள் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படாமலேயே இருக்கின்றன. அந்தத் திட்டங்களையெல்லாம் விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் சார்பில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

அடுத்து, ஐரோப்பிய நாட்டு உதவியோடு 'டேங்க் மாடனைசேஷன் ஸ்கீம்' என்று சொல்லுகிற டேங்குகளைப் புனருத்தாரணம் செய்கிற பணியைப்பற்றி வரவு-செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டத்திற்குச் சில விதிமுறைகள் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். 100 ஏக்கர் முதல் 1,500 ஏக்கர் வரையான ஆயக்கட்டுள்ள கண்மாய்கள் பொதுப்பணித் துறையின்கீழ் அதன் நிர்வாகத்தில் வருகின்றன. என்னுடைய பணிவான வேண்டுகோள் அதில் விலக்கு வைக்காமல், இலக்கு வைக்காமல், வித்தியாசம் காட்டாமல் பொதுப்பணித் துறையின் கீழே உள்ள அத்தனை கண்மாய்களையும் ஐரோப்பிய நாடுகள் திட்டத்தில் அவற்றையெல்லாம் இடம் பெறச் செய்து டேங்க் மாடனைசேஷன் ஸ்கீமின் மூலம் அவைகள் செப்பனிடப்பட வேண்டும். அந்தத் திட்டத்தில்தான் அதிகமான மதகுகள் கட்டுகிறார்கள். வரத்துக் கால்வாய்கள் நிறைய உருவாக்கப்படுகின்றன. டேங்க் மதகுகள், ரெகுலேட்டர்கள் கட்டப்படுகின்றன. அதிகமான செலவு செய்யவும் வாய்ப்பு இருக்கிறது. எனவே, இந்தக் காரணத்தால் 100 முதல் 1,500 ஏக்கர் உள்ள கண்மாய்கள் அனைத்தும் பொதுப்பணித் துறையின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு அவைகள் அனைத்தையும் ஐரோப்பிய நாடுகள் திட்டத்தின் கீழே செயல்பட கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-30.)

அடுத்து நெடுஞ்சாலைத் துறைக்கு வருகிறேன். என் தொகுதியில் என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.ஈ.ஜி.பி. போன்ற திட்டங்களில் பல ஒன்றியச் சாலைகள் பராமரிக்கப்படவேண்டும். காரணம் எங்கள் பகுதியில் ஏற்கெனவே செக்யூரிட்டி மெசர்ஸ் என்ற

திட்டத்தில் பல சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அவைகள் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. அவைகளைப் பராமரிப்பதற்கு ஒன்றியத்திலே போதுமான நிதிநிலைமை இல்லை ஊராட்சிகளிலும் நிதியில்லை. ஆகவே ஊராட்சி ஒன்றிய சாலைகள், ஊராட்சி சாலைகள், செக்யூரிட்டி மெசர்ஸ் என்ற திட்டத்திலே 1957ல் போடப்பட்ட சாலைகள் எல்லாம், என்.ஆர்.இ.பி., ஆர். எல்.ஈ.ஜி.பி. திட்டங்களின்கீழ் செயற்படுத்தப்பட வேண்டுமென்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், நான் குறிப்பிட்டுச் சொல்ல நேரம் போதவில்லை. பல சாலைகள் புதிதாக உருவாக்கவேண்டிய நிலைமையில் இருக்கின்றன. அந்த மாதிரி பல சாலைகளை, கிராம சாலைத் திட்டத்தில் போட வேண்டும். இதை நான் சொல்வதற்கு காரணம் இந்த வரவு-செலவுத் திட்டத்திலே இந்தத் தலைப்பிலே என் மாவட்ட திட்டம் அதிகமாக இல்லாத காரணத்தால் சொல்கிறேன். என் தொகுதியில் பல நெடுஞ்சாலைகளும், பாலங்களும் பழுதடைந்திருக்கின்றன. அந்த Part-II ஸ்கீம் எங்களுடைய மாவட்டத்திற்கு, வட்டத்திற்கு, தொகுதிக்கு அதிகமாக ஒதுக்கப்படவேண்டும்.

கமுதி குண்டாறு பாலம் எந்த நேரம் விழப்போகிறது என்று தெரியவில்லை. அது 1928ஆம் ஆண்டில் கட்டப்பட்டது. அது சேதுபதி மன்னர் காலத்திலே கட்டப்பட்ட பாலம். ஒரு தடவை அது வெள்ளத்திலே அடித்துப் போய்விட்டது. அதை மட்டும் சரி செய்திருக்கிறார்கள். பழுதடைந்திருக்கிற அந்த குண்டாறு பாலத்தை Part-II ஸ்கீமில் எடுத்து சரி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து விவசாயத் துறையில் பல கோடிகள் செலவழிக்கக் கூடிய நிலைமையை வரவு-செலவுத் திட்ட அறிக்கையில் காணுகிறேன். எங்கள் மாவட்டப் பகுதியில் இருக்கிற குளங்கள் எக்ஸ்-ஜமீன் ஏரியா,பல விவசாயிகள் கண்மாய்களை நம்பி இருக்கக் கூடியவர்கள் பகுதிகளில் எங்கள் பகுதியில் வறட்சி இருக்கின்ற காரணத்தால் அந்தக் கண்மாய்களின் உள் வாயில் ஆழ்குழாய் போர் போட்டு அதன் மூலமாக தண்ணீர் எடுப்பதற்கும் சமுதாயக் கிணறுகளை அமைப்பதற்கும் விவசாயத்துறையில் இருக்கிற அக்ரிகல்சுரல் என்ஜினியரிங் இலாகா நடவடிக்கைக எடுத்து அவைகளைப் பெற்றுத் தருவதற்கும் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, முதுகுளத்தூரில் நல்ல தொழில் கிடையாது. ஆகவே அங்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை சீர்மரபினர்களுக்கென்று ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே எங்கள் பகுதியில் ஆதிதிராவிட மக்களுக்கென்று ஒரு மில் இருக்கிறது. மற்றவர்களுக்கு அங்கு வேலை கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. அச்சங்குளம் கூட்டுறவு மில்,





குறிப்பாக அபிராமம் பக்கத்தில் இருப்பதில் நூறு சதவிகிதம் அங்கு ஆதிதிராவிட மக்களைத்தான் வேலைக்கு அமர்த்தி இருக்கிறார்கள். என்னுடைய பகுதியைப் பொறுத்தமட்டில், ஆதிதிராவிட மக்களும், சீர்மரபினரும் ஒரே வசதியோடு, ஒரே பொருளாதாரத்தில் இருக்கிறார்களே தவிர, வசதி உள்ளவர்களாக இல்லை. ஆகவே முதுகுளத்தூரில் சீர்மரபினர் பகுதியில் ஒரு நூற்பு ஆலை உருவாக்கித் தரவேண்டும். அதுபோலவே சீர்மரபினருக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும். ஆதிதிராவிட மக்களுக்கு இருக்கிற அத்தனை சலுகைகளுமே மிகப் பின்தங்கிய நிலையில் இருக்கக்கூடிய சீர்மரபினருக்கு கிடைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் தயவுசெய்து இந்தவரவு-செலவுத் திட்டம் முடிந்த உடனே ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆங்காங்கு நீர்ப்பாசன மாநாடுகளை நடத்தி அதிலே விவசாயத் துறை அமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்ட பொறியாளர்கள், தாட்கோ நிறுவனத்தில் இருப்பவர்களையெல்லாம் சேர்த்து நடத்தவேண்டும்; அதன் பின் போர்க்கால நடவடிக்கையாக குடிநீர்ப் பிரச்சினை எங்குபார்த்தாலும் வறட்சியாக இருக்கிற காரணத்தால், உடனடியாக தீர்த்து வைக்கவேண்டும். குறிப்பாக குடிநீர் வடிகால் வாரியம் ஏற்கெனவே இருந்த அரைகுறை வேலைகளை வேகமாகச் செய்து முடிக்கவேண்டும். இன்னொரு தகவலையும் அரசுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கு பார்த்தாலும் வறட்சி இருக்கும் நேரத்தில் எங்கள் பகுதியிலே குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய டெக்னாலஜி மிஷன் டிவிஷன் இராமநாதபுரத்தில் மாவட்டம் பரமக்குடியில் இருக்கிற டெக்னாலஜி மிஷன் ஆய்வில் முதுகுளத்தூருக்கும் பரமக்குடிக்கும் இடையே 1,662 அடிக்கு கீழே ஒரு மிகப் பெரிய ஆறு ஓடுவதாகவும், அந்த ஆற்றில் நல்ல தண்ணீர் இருப்பதாகவும் ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. எங்கள் பக்கம் போடுகிற துளைகள் பூராவும் குடிநீருக்காக 150 அல்லது 160 அல்லது 170 அடிக்கு மேலே போடுவதில்லை. தயவுசெய்து அரசாங்கம் முதுகுளத்தூருக்கும், பரமக்குடிக்கும் இடையே குடிநீர்வடிகால் வாரியத்தில் இருக்கிற டெக்னாலஜி மிஷன் மூலமாக ஆய்வுசெய்து கண்டுபிடிக்கப்பட்ட ஆற்று தண்ணீர் எடுத்து பல கிராமங்களுக்கு, நகரங்களுக்கு குடிநீர் வழங்கவேண்ம்.

திருவாடானை பகுதியில் 1,400 அடியிலே நல்ல தண்ணீர் கிடைத்திருக்கிறது. வறண்ட இராமநாதபுரத்தில் அங்கு உள்ள மண்ணிலே ஈரம் இல்லை. ஆனால் அங்கு வாழுகிற மக்கள் நெஞ்சிலே ஈரம் இருக்கிறது. அந்த மக்களிடத்திலே வசதியில்லை. அப்படிப்பட்ட பின்தங்கி இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்தை முன்னேற்றுவதற்கு

[திரு. காதர்பாட்சா என்கி வெள்ளைச்சாமி] [1989 மார்ச் 28

இந்த அரசாங்கம் அதிக கவனத்தை செலுத்த வேண்டுமென்றும் முதல்வர் கலைஞர் அவர்கள் உறுதியோடு அதை செய்வார்கள், என்றும் கருதி இந்த நிதிநிலை அறிக்கையில் பேச வாய்ப்பளித் தமைக்கு நன்றி தெரிவித்து முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதன்முறையாக நான் இந்த அவையில் பேச ஆரம்பிக்கிறேன். கோடிக்கணக்கான ஏழை எளிய மக்களின் உள்ள உணர்வுகளைச் சரியாகக் கணக்கில் எடுத்துப் பிரதிபலிக்கும்படியான இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்துப் பேசும் நல்லதொரு வாய்ப்பை எனக்கு அளித்த திண்டுக்கல் தொகுதி மக்களுக்கு நன்றியைக் கூறி, 'பட்டதெல்லாம் போதும் படமுடியாதினித் துயரம்'' என்ற தமிழ் மக்களின் உணர்விலிருந்து இந்த ஆட்சி ஏற்பட்டிருக்கிறது.

அந்த நல்ல எண்ணங்களின் உணர்வுகளையும், கிராமப்புற மக்களின் தேவைகளையும் சரியாக உணர்ந்து, கணக்கிலெடுத்து செம்மை செய்வதற்கு இந்தத் திட்டம், இந்த வரவு-செலவு பட்ஜெட் சரியான அணுகுமுறையாக இருக்கும் என்ற முறையில் நான் வரவேற்கின்றேன்.

ஆரம்பத்திலேயே இந்தத் திட்டத்தை அறிவிக்கின்ற இந்தப் பேரவையில் ஏற்பட்டுள்ள இடுக்கண்களை, தடைகளை நாம் அறிவோம்.

ஆனால், இந்தத் திட்டம் நாளை மறுதினம் தமிழக அரசு நிர்வாகத்தின் கீழே ஒப்படைக்கப்பட இருக்கின்றது; அந்த நிர்வாகத்தினுடைய நிலையை நான் சொல்லத் தேவையில்லை. துருப்பிடித்து, துப்பு கெட்டு, சின்னாபின்னமாக ஆக்கப்பட்டிருக்கின்ற நிர்வாக நிலை இன்றைக்கு இருப்பதை நாம் நன்கு அறிவோம்.

ஒரு சிறந்த கொள்கை மட்டும் இருந்தால் போதாது. அந்தச் சிறப்பான கொள்கையையும், திட்டத்தையும் இந்தத் தமிழ் மாநிலத்தில் நிறைவேற்றுவதற்குச் சரியான ஒரு நடைமுறை இருக்க வேண்டும். நல்ல கொள்கையும், நல்ல நடைமுறையும் இருப்பதின் மூலமாகத்தான் இந்தத் திட்டத்தை உள்ளபடியே சேர வேண்டிய மக்களுக்குச் சேர வேண்டிய நேரத்தில், கிடைக்க வேண்டிய வசதிகள் அனைத்தும் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். இதைச் சரியாக உணர்ந்ததின் காரணமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது எளிய தமிழ் நடையில் அழகாகச் சுட்டிக்காட்டுகிறார். வட்ட ஆட்சி நிர்வாகத்திலிருந்து மாவட்ட ஆட்சி நிர்வாகம் வரையிலும் சீர்திருத்தங்கள் செய்யப்படும் என்று நான் உணர்கிறேன். இந்த நிர்வாகத்தில் ஒரு மிகப்பெரிய மாற்றம் இருக்க வேண்டும்.



1989 மார்ச் 28] [திரு. எஸ். ஏ. தங்கராஜன்]

இந்தப் புதிய ஆட்சி முறையை, இந்தப் புதிய அரசு நிர்வாகம் அணுகும்படியான நடைமுறையை, அதன் சிந்தனையை, செயல்படும் திறனை, இந்த நிர்வாக இயந்திரங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் நமது நோக்கம் நிறைவேறுவதற்குப் பெரும் தடையாக இருக்கும். எனவே, நிர்வாக அமைப்பு ஆட்சியினுடைய கொள்கைக்கு ஏற்ப மாறவில்லை என்றால், கட்டாயமாக மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் இந்த அரசுக்கு ஏற்படும்; தமிழ் மக்கள் மிகப் பெரிய ஆதரவின் மூலம் ஆட்சியை மாற்றியவர்கள், இந்த அரசின் நிர்வாகத்தை மாற்றுவதற்கு மக்கள் துணை கொண்டு, தீவிரமான முயற்சியின் மூலம்—நிர்வாக அமைப்பை மாற்ற வேண்டும். சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பைப்பற்றி இந்த அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. அதில் நான் இங்கு வற்புறுத்த வேண்டியது கூட்டுறவு நிறுவன ஊழியர்கள்-பல ஆயிரக்கணக்கான ஊழியர்கள் நிரந்தரமில்லாமல் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் இல்லாமல் இருக்கின்றார்கள். அந்த நிறுவனத்தினுடைய நியாய விலைக் கடைகளினுடைய நிர்வாக அமைப்பைப் பற்றி இங்கே பேரவையில் பல மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியிருக்கின்றார்கள். தமிழ் மக்களின் மத்தியிலே மிகப் பெரிய கொடுமைகள் இந்த நியாய விலைக் கடைகளின் மூலம் நடத்தப்படுகின்றன. அது தடுக்கப்பட வேண்டும். நாம் சொன்னால் கொள்கை மட்டும் பேசினால் போதாது. நடைமுறைப்படுத்த இந்த ஊழியர்களை நிரந்தரம், செய்து நியாயமான ஊதியம் வழங்குவதன் மூலமாகத்தான் இந்த சமூகவிரோதச் செயலை தடுத்து நிறுத்தத் முடியும்.

(முற்பகல் 11-40)

அதைப்போலவே, தமிழ்நாடு அரசாங்கத்திலே சர்வே பிரிவிலே பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள் நிரந்தரமற்ற முறையில் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நாள் கூலி, மொத்த சம்பளம், மாத சம்பளம் என்று பல்வேறு பிரிவுகளாக சம்பளம் கொடுக்கப்படுகிறது. இவர்கள் எல்லாம் அரசாங்க ஊழியர்கள். இவர்களை நிரந்தரப்படுத்தி மாத சம்பள நிர்ணயம் செய்து வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து குடிநீர் வடிகால் வாரியம், பொதுப் பணித்துறை, மின்சார வாரியம் போன்றவற்றில் கூட பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள், கடுமையான உழைப்பாளர்கள், அந்தக் கூலிகளாக, நாள் கூலிகளாக, குறைந்தபட்ச கூலி நிர்ணயம் இல்லாமல்

[திரு. எஸ். ஏ. தங்கராஜன்] [1989 மார்ச் 28

வேலை செய்து வரும்படியான நிலை நீடிக்கிறது. இவர்கள் அத்தனைபேரும் கடுமையான உழைப்பாளர்கள். நிறுவனங்களைச் சார்ந்த அதிகாரிகள் அத்தனைபேரும் நிரந்தரமானவர்கள். இவர்களை மேற்பார்வையிடுகிற ஊழியர்கள் நிரந்தரமானவர்கள். நேரிடையாக உடல் உழைப்பைத் தருகிற இந்த ஊழியர்களை மட்டும் நாள் கூலிகளாக, ஒப்பந்த கூலிகளாக வேலை வாங்கப்படுகிற இம்முறை தொடர்ந்து நீடிக்கிறது. ஆகவே, நான் மேலே சொன்ன அரசு நிறுவனங்களில் வேலை செய்கிற 1½ லட்சம் ஊழியர்களை தற்காலிக ஊழியர்களாக வைத்திருப்பது எந்த வகையிலும் நியாயம் ஆகாது. அவர்களை நிரந்தரமாக்கி, நியாயமான சம்பளம் வழங்குவதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். அவர்களுடைய ஆர்வமும், சிந்தனையும், ஆதரவும் காரணமாகத் தான் ஆட்சி மாறியிருக்கிறது என்பதால் நான் அதிகம் வற்புறுத்த தேவையில்லை.

தொழில் வளர்ச்சிக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு ஆலோசனைகளை இங்கே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவற்றை வரவேற்பதோடு, தொழில் வளர்ச்சிக்கான மூன்றிரண்டு விஷயங்களை மட்டும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர ஆசைப்படுகிறேன். முதல் ஐந்தாண்டுத் திட்ட கமிஷன் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டபோது தென்னகத்தில் குறிப்பாக திண்டுக்கல்லில் தோல் பதனிடும் தொழில், தோல் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழில் ஆரம்பிப்பது என்று முதல் திட்ட கமிஷன் திட்டம் தீட்டியது. அதற்கு 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. திண்டுக்கல் நகரைத்தைச் சுற்றி அதற்கான தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்காக நிலம் சர்வே செய்யப்பட்டது. அதற்குப் பின்னால், மேற்கொண்டு நடவடிக்கை இல்லாமல் போய்விட்டது. இந்த 'லெதர் காம்ப்ளக்ஸ்' என்னும்படியான தோல் ஆய்வுக் கூடம், தொழிற்சாலை முழுமையாக நடைபெறாமல் ஆரம்பப் பணியிலேயே நின்றிருக்கிறது. இருநூறு கோடி ரூபாய் முதலீட்டிலே மத்திய அரசு ஆரம்பிக்கிற தொழில், கிட்டத்தட்ட 2,000 பேர் வேலை செய்வதற்கு வாய்ப்புள்ளது இந்தத் தொழில். ஆகவே தமிழக அரசு இந்தத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்றையதினம் இந்த சபையிலே மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டதைப் போல, வேடசந்தூர் தொகுதியில் சிமெண்ட் ஆலையை தமிழக அரசு மேற்கொள்வது என்று கடந்த கால அரசு திட்டமிட்டது, அறிவித்தது. அந்த அறிவிப்பு ஏட்டளவில் நின்று விட்டது. எனவே, கடந்த தமிழக அரசின் முடிவின்படி சிமெண்ட் ஆலையை மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. எஸ். ஏ. தங்கராஜன்]

அடுத்து, வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கான புஷ்பங்களும், பழவகை 'ஜாம்' தயாரிப்பதற்கான பழங்களும் ஏராளமாக உற்பத்தியாகின்ற மாவட்டமாக எங்கள் மாவட்டம் இருக்கிற காரணத்தால், இத்தகைய தொழில்களை மத்திய அரசின் உதவியோடு மாநில அரசு நடத்துவதற்குத் திட்டமிட வேண்டுமென்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சிக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக கரூர்-தூத்துக்குடி அகல ரெயில் பாதை ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது.

நாற்பது கோடி ரூபாய் முதலீடு செய்யவேண்டியதற்கு இந்த ஆண்டு 3 கோடி ரூபாய்தான் அனுமதித்திருக்கின்றது மத்திய அரசு. ஆனால் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழகத்திற்கு வந்தபோது, இந்த அகல ரயில் பாதையை விஸ்தரிப்பதற்கான விவரங்களை அதிகமாகப் பேசினார்கள். அந்தப் பேச்சுக்கள் தேர்தல் பேச்சாக இருந்துவிட்டதே அல்லாமல், வேறல்ல. மத்திய அரசினுடைய புதிய பட்ஜெட்டில், இந்த அகல ரயில் பாதையை விஸ்தரிப்பதற்கான போதிய நிதி ஒதுக்கப்படாமல் இருப்பதை இந்த மாநில அவையிலே தெரிவிப்பதோடு, இது குறித்து மாநில அரசு வற்புறுத்தி, வாதாடி, போராடி, இந்த அகல ரயில் பாதையை காலத்தில் நிறைவேற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த அகல ரயில் பாதையை நிர்மாணிப்பதன் மூலமாக தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்சி அகமும் முகமும் மலர்வதற்கு அடிப்படையாக அமையும் என்பதை நான் வற்புறுத்தத் தேவையில்லை.

மேலும் எங்கள் மாவட்டத்தினுடைய பெயரை இந்த அவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றியிருக்கிறார்கள். கடந்த ஆட்சியாளர்கள் மாவட்டத்தின் பெயரை போர்டு விளம்பரப் பலகையோடு நிறுத்திக் கொண்டார்கள். இன்றைய புதிய தமிழக அரசு இந்தப் பெயர் மாற்றத்தோடு நிற்காமல், அந்த மாவட்டத்தினுடைய அமைப்புகளிலும், வளர்ச்சியிலும் ஆக்கப்பூர்வமான தீவிரம் காட்டுவார்கள் என்று நான் நம்புகிறேன். காரணம் இந்த அண்ணா மாவட்டத்தினுடைய தலைநகரான திண்டுக்கல் நகரம் வளர்ச்சி இல்லாமல் குன்றியிருக்கிறது. அதற்கு குடிநீர்த் திட்டம் ஒன்று தீட்டப்பட்டது. இன்றைக்குக்கூட திண்டுக்கல் நகரத்தில் 3 நாளைக்கு ஒரு முறைதான் தண்ணீர் கிடைக்கிறது. அதுவும் ஒருமணி நேரம். அணையில் தண்ணீர் இருக்கிறது. தண்ணீரை வினியோகிப்பதற்கான மின்சாரத் தட்டுப்பாட்டினால் அந்த மக்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்காமல் இருக்கிறது. ஆகவே அந்த நகராட்சி கேட்டுக்கொண்டபடி மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ஜெனரேட்டர் வாங்குவதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எஸ். ஏ. தங்கராஜன்] [1989 மார்ச் 28

அடுத்து பேரணைத் திட்டம் என்று ஒரு திட்டம் எங்களுடைய மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டது. நீண்டகாலமாக இந்தத் திட்டம் ஆமை வேகத்தில் நகர்ந்து கொண்டிருக்கிறது. 3½ கோடி ரூபாய்க்கு போடப்பட்ட இந்தத் திட்டம் கால தாமதத்தினால் 9 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது. அன்றைய ஆட்சியாளர்கள் பறித்த குழியை இன்றைய அரசு மேடுபடுத்திக் கொண்டு இருக்கிறது. விரைவில் இந்த அரசு ஏப்ரல் மாதத்திற்குள்ளாக இந்தப் பேரணைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் 200 ஆண்டுக் காலமாக நடைபெற்று வரும்படியான தோல் பதனிடும் தொழிற்சாலையின் கழிவு நீர் எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் ஓடிக் கொண்டு இருப்பதால் சாகுபடி நிலங்கள் எல்லாம் பாழாகிவிட்டன. குடிநீர்க் கிணறுகளில் உள்ள தண்ணீர் எல்லாம் விஷமாகிவிட்டது. ஆகவே ஒரு நாகரிக அரசு குறைந்த பட்சம் செய்ய வேண்டிய கடமையைக் கூட கடந்த கால அரசு செய்யவில்லை என்பதை இந்தப் பேரவையில் நான் நினைவுபடுத்துகிறேன். திண்டுக்கல் நகரத்தைச் சுற்றி இருக்கும்படியான சாகுபடி நிலங்கள் கிட்டத்தட்ட 5 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பாழாகிவிட்டன. துண்டு துக்காணி நிலங்களை நம்பி வாழும்படியான ஏழை எளிய விவசாயிகள் அந்த நிலத்தினுடைய வருமானத்தை இழந்து திண்டாடித் தெருவில் நிற்கிறார்கள். நான் இந்த அரசை வேண்டிக் கொள்வேன். அந்த விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்கி அந்தக் கழிவு நீரைக் கட்டுப்படுத்தி கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையை துரிதப்படுத்திட வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். ஆலை முதலாளிகளும் அரசாங்கமும் இதில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். சுத்திகரிப்பு ஆலையைக் கட்டுவதற்கு தொழிற்சாலை முதலாளிகள் 30 இலட்சம் ரூபாய் கட்ட வேண்டும் என்று திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. இது வரையில் 20 லட்சம் ரூபாயை அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். எனவே அரசு இதைத் துரிதப்படுத்தி கழிவு நீர் சுத்திகரிப்பு ஆலையைக் கட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் அரசினர் நடுநிலைப் பள்ளி ஒன்று இருக்கிறது. போதிய கட்டிட வசதி, விரிவான விளையாட்டு மைதானம் போதிய அளவிற்கு இருக்கிற காரணத்தால் அந்த மக்களின் தேவையை, ஏழை எளிய மக்களின் வேண்டுகோளை, ஆசிரியர்களின் வேண்டுகோளை ஏற்று, அந்த நடு நிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தரவேண்டும் என்று இந்த அவையில் நான் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. எஸ். ஏ. தங்கராஜன்]

மாவட்ட மருத்துவமனையாக இருக்கின்ற திண்டுக்கல் நகரத்தினுடைய அரசு மருத்துவமனை நீண்ட காலங்களுக்கு முன்னால் கட்டப்பட்டது. அது ஒரு சிறிய அளவிலேதான் இருக்கிறது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நகரத்தை நோக்கி வருகின்றார்கள். அந்த மருத்துவமனையைச் சுற்றி இருக்கும்படியான நிலங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றை நிலச் சொந்தக்காரர்களே அரசுக்கு, மருத்துவமனைக்காகக் கொடுப்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். அதையும் இந்த அவையில் நினைவுபடுத்தி அந்த நிலங்களை ஆர்ஜிதம் செய்து, மருத்துவமனையை மாவட்டத் தலைநகர மருத்துவமனையாக ஆக்குவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11–50).

கடைசியாக, வறட்சி என்ற கோர பிடியில் எங்கள் அண்ணா மாவட்டமும் சிக்கித் தவிக்கின்றது. 'டீ.டீ.சி. யின்' கூட்டத்திலே தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே தமிழக அரசு அண்ணா மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, வறட்சிப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறி, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நீங்கள் பேச வாய்ப்பு தந்தமைக்காக முதலில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போன்று இங்கே பேசுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த, அதுவும் மூன்றாம் முறையாக சட்டமன்றத்தில் நுழைவதற்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் முதற்கண் வணக்கத்தை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1989–90 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது இங்கே சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். எல்லா தரப்பட்ட மக்களுக்கும், ஏழைஎளிய மக்களுக்கும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், அதேபோன்று தொழிலாளர் பெருமக்களுக்கும், வணிகப் பெருமக்களுக்கும், அவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற அளவிலே இந்த நிதிநிலை அறிக்கையை வாசித்தாலும், அன்றைக்கு வாசித்த தமிழினத் தலைவர், முதலமைச்சர், டாக்டர்கலைஞர் அவர்களை நாட்டிற்குத் தேவைப்படுகின்ற நல்லதிட்டங்களை வாசிப்பதைத் தடுத்து நிறுத்தி, இந்த நாட்டு மக்களுக்குத் தெரிவிக்

காமல் இருக்க வேண்டுமென்பதற்காக இங்கே ஒரு போராட்டம் நடந்தாலும், இன்று நாட்டு மக்கள் பாராட்டுகின்ற அளவிலே இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த நாட்டு மக்களுக்காக பல நல்ல திட்டங்களைத் தந்திருக்கிறார்கள்.

கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டு வார காலத்திலே ஆளுநர் உரையிலே, தேர்தல் நேரத்திலே தந்த வாக்குறுதிகளை, இங்கே மேல் சபையைக் கொண்டு வருகிறோம் என்ற வாக்குறுதியையும், மாநகராட்சிகளுக்குத் தேர்தல் நடத்துவோம் என்ற வாக்குறுதியையும், அதேபோன்று ஊராட்சிமன்ற, நகராட்சிமன்ற தலைவர்கள், உறுப்பினர்களின் பதவிக் காலத்தை நீட்டித்து, 5 ஆண்டு காலமாக ஆக்கி அவர்களுக்கு அதிகாரத்தைத் தந்தார்கள்.

அதேபோன்று மகளிருக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு கிடைக்க வேண்டுமென்று அதற்காக வயது வரம்பைக் கூட 28-லிருந்து 30-ஆக உயர்த்தினார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற இரண்டு வார காலத்திலே இந்த நல்ல காரியங்கள் நடைபெற்றாலும், இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற திட்டங்கள் இந்த நாட்டிற்கு உதவுகின்ற நல்ல திட்டங்களாக மிக ஏழைப் பெண்மணிகளைக் காப்பாற்றுகின்ற திட்டங்களாக எட்டாம் வகுப்பு வரை படித்த அதற்கு மேலும் படித்த ஏழைப் பெண்களின் திருமணச் செலவிற்காக ரூ. 5,000 வழங்கப்படும் என்பதையும், அதே நேரத்தில் குடும்பத்திலே இருக்கின்ற தலைவன் திடீரென்று இறந்துவிட்டால் அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்காக ரூ. 2,000 என்றும் அதே போன்றுதான் முதியோர்களுக்கு ஏற்கெனவே ரூ. 35 ஆக இருந்த அந்த முதியோருடைய ஓய்வூதியத்தை இப்போது ரூ 50 ஆக உயர்த்தி அதற்குத் தட்டுத் தடை இல்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காக அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

அதேபோல குடிநீர்த் திட்டத்திற்காக 5,000 ஆழ் குழாய்களை அமைப்பதற்காக இங்கே திட்டம் அறிவிக்கப்பட்டாலும் இங்கே வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அதை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும் என்று மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே தீர்மானத்தைப் போட்டு இங்கே அனுப்பி வைக்கிறோம். அந்த மாவட்டம் வறட்சி மாவட்டமாக இருக்கின்ற காரணத்தால் இது போன்ற ஆழ் துளைக் கிணறுகளைத் தோண்டுகின்ற நேரத்தில் அந்தப் பகுதிக்கு அதிக





மான ஆழ் துளைக் கிணறுகளைத் தோண்டுவதற்கான வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே போலத்தான் இங்கே தொழிற்பேட்டை மூன்று ஆரம்பிப்பதாகக் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏற்கனவே கழகத் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில் 1974 ஆம் ஆண்டு பொன்னேரி அருகே ஒரு தொழிற்பேட்டையை ஆரம்பிக்க வேண்டும் என்று அப்போது இருந்த மறைந்த சி. கே. சி. அவர்கள் அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். அதற்காக ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டன. அதற்குப் பின்னாலே இரண்டு முறை நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் பலமுறை சட்டமன்றத்திலே இதை எடுத்துச் சொன்னாலும் அங்கே எதிர்க்கட்சி என்ற முறையிலே அது புறக்கணிக்கப்பட்டு, அந்தத் திட்டம் நிறைவேறாத வகையிலே நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு இங்கே முதலமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அதேபோலத்தான் எனது தொகுதியிலே இருக்கின்ற வறட்சிப் பகுதியான திருப்பத்தூர் தொகுதியிலே நிலத்தடி நீரை நம்பி இருக்கின்ற விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த விவசாயிகளை வாழவைக்க வேண்டும். அந்த விவசாயிகள் வளர வேண்டும் என்பதற்காகக் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கின்ற நேரத்தில் 1974 ஆம் ஆண்டு ஆண்டியப்பனூர் அருகே ஒரு அணை கட்ட வேண்டும் என்ற ஒரு திட்டத்தைத் தீட்டினார்கள். இங்கே எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு லத்தீப் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக அந்தப் பகுதியிலே இருந்தபோது அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தார்கள், அதற்குப் பின்னாலே, ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பலமுறை வாதாடியும் பயன் கிடைக்காமல் இப்போது பொதுப்பணித் துறையிலே இருக்கின்ற மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக அதை எடுத்துக் கொள்வதாக அறிவித்து, உடனடியாக அணையைக் கட்டுவதற்காகப் பார்வையிட்டிருக்கிறார்கள், அதற்கு அவருக்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே உடனடியாக அணையைக் கட்டுவதற்கான ஏற்பாடுகளை நான் செய்து தருகிறேன் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறார்கள்.

அதேபோலத்தான் இங்கே ஜோலார்பேட்டை ஊராட்சி ஒன்றியம் போன்று, திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியம் ஆசிர் நகர் என்னும் இடத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த ஊராட்சி

[திரு. ப. சுந்தரம்] [1989 மார்ச் 28

ஒன்றியத்திற்குக் கட்டிடம் இல்லாமல், ஒரு கல்யாண மண்டபத்
திலே, அந்த ஊராட்சி ஒன்றியம் நடக்கின்ற நிலைமை இருக்
கிறது. அந்த நிலைமையைப் போக்கவேண்டும் என்று கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(நண்பகல் 12—00)

அதேபோல், நீண்டகாலமாக திருப்பத்தூரிலே அரிஜன
வட்டாட்சியர் அலுவலகம் செயலாற்றிக் கொண்டிருந்தது. சென்ற
ஆட்சிக் காலத்திலே செங்கத்திலே கொண்டுபோய் அந்த
அலுவலகத்தை வைக்கின்ற நிலைமை ஏற்பட்டு, அந்தப் பகுதியிலே
இருக்கின்ற மலைவாழ் மக்கள், ஜவ்வாது மலையிலே, ஏலகிரி
மலையிலே இருக்கின்றவர்கள் அங்கே போகவேண்டுமானால்,
நான்கு பஸ்கள் ஏறிப் போகவேண்டியிருக்கிற காரணத்தால்
மீண்டும், திருப்பத்தூர் தாலுக்காவாக இருக்கிற காரணத்தால்,
அந்த அலுவலகத்தை மாற்றி திருப்பத்தூரிலேயே வைக்க
வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்
கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல்தான், திருப்பத்தூர் பகுதியிலே, ஜவ்வாது
மலை என்றும், ஏலகிரி மலை என்றும் இரண்டு
மலைகள் இருக்கின்றன. அந்த ஏலகிரி மலையிலே நியாய
விலைக் கடையிலே கொடுக்கப்படுகின்ற அரிசியின் விலை ஒரு
ரூபாய் நாற்பது பைசாவாக, மலைவாசி மக்களுக்காகக் கொடுக்
கப்படுகின்றது. அதேபோல், கோதுமை ஒரு ரூபாய் எழுபது
பைசாவிற்கு மலைவாழ் மக்களுக்காகக் கொடுக்கப்பட்டாலும்
அது நியாயமாகப் போய்ச் சேர்கிறதா என்றால் நிச்சயமாக
நியாயமாகப் போய்ச் சேர்வது இல்லை என்பதையும், அதே
நேரத்தில் என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற நியாய விலைக்
கடைகளிலே, கிராமத்திலே இருக்கின்ற நியாய விலைக் கடை
களிலே 7 கிலோ அரிசியும், நகரத்திலே இருக்கின்ற கடைகளிலே
9 கிலோ அரிசியும் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். நேற்று
இங்கு பேசிய மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் 12 கிலோ
போடுவதற்கு உத்தரவு பிறப்பித்து இருப்பதாக அறிவித்தார்
கள். இதுபோன்ற நிலைமைகளை நீங்கள் எண்ணிப்பார்த்து
அதிலே இருக்கின்ற குறைகளைப் போக்கி 12 கிலோ அரிசி
அந்தப் பகுதி மக்களுக்கு வழங்கவேண்டும் என்று மாண்புமிகு
அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேபோல், ஜவ்வாது மலையிலே இருக்கின்றவர்கள், அந்
தப் பகுதியிலே பேருந்துச் சாலை இல்லாத காரணத்தால் ஏறக்
குறைய 30 கிலோ மீட்டர் தூரம் நடந்து செல்கின்ற கால
கட்டத்தில் அந்த மலைவாசி மக்கள் இருக்கிறார்கள். அதைப்
போக்க வேண்டும் என்று இங்கே வனத்துறை அமைச்சர் அவர்
களைக் கேட்கின்ற நேரத்தில் சாலை அமைக்க வேண்டும் என்று
கேட்டுக்கொண்டார்கள். அதற்குப் பேருந்துவிட வேண்டும் என்று
இங்கே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.



1989 மார்ச் 28] [திரு. ப. சுந்தரம்]

அதேபோல், திருப்பத்தூரிலே இருக்கின்ற ஏழை எளிய பெண்
கள், மேல்நிலைப் பள்ளியிலே படிப்பை முடித்துவிட்டு,
கல்லூரிக்குப் போக வேண்டுமானால், சேலத்திற்கோ,
வேலூருக்கோ, வாலாஜாவுக்கோ செல்ல வேண்டும். நீண்டநாள்
கோரிக்கையான அந்தக் கோரிக்கையை ஏற்று, பெண்கள் கல்லூரி
ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கிற நேரத்தில்,
மறைந்த சி.கே.சி. அவர்கள், '' கலைஞர் கலைக் கல்லூரி ''
என்ற ஒரு குழுவை ஏற்படுத்தி அதற்குண்டான திட்டங்கள்
எல்லாம் போட்டு, அது செயல்படுவதற்கான திட்டங்களைப்
போட்டு அதற்குப் பின்னாலே ஆட்சி கலைக்கப்பட்டதனால் அது
நிறுத்திவைக்கப்பட்டது. அதே போன்று கல்லூரிகளை ஆரம்
பித்து, அந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏழை எளிய மக்களைக்
காப்பாற்ற வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கின்றேன்.

அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலைகள் சரியான சாலை
களாக இல்லை. என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற ஆலங்
காயத்திலேயிருந்து திருப்பத்தூருக்கு வருகிற சாலைகள் சரி
யாக இல்லாத காரணத்தால், அங்கே நிறையப் பேருந்துகள்
செல்கின்ற காரணத்தால் உடனடியாக அவற்றை மாற்றியமைக்க
வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்
கின்றேன்.

திருப்பத்தூரிலே இருக்கின்ற மாவட்டக் கல்வி அலுவலகம்,
டி.சி.டி.ஓ. அலுவலகம் போன்றவைகள் நீண்ட நாட்களாக
வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன. மாவட்டக் கல்வி
அலுவலகத்தைப் பொறுத்தவரையில் அங்கே அந்த அலுவல
கத்தைக் கட்டுவதற்கான இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்த
இடத்திலே மாவட்டக் கல்வி அலுவலகத்தைக் கட்டி முடிக்க
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்
கின்றேன்.

திருப்பத்தூர் நகரத்திலே, ஏற்கெனவே பாலாற்றிலேயிருந்து
குடிதண்ணீர் வந்தாலும், பல பகுதிகளுக்கும் அந்தத் தண்ணீர்
செல்வதில்லை. இருந்தாலும், அந்தப் பகுதியிலே இருக்கின்ற,
வாழுகின்ற மக்கள், குடிக்கின்ற தண்ணீர் வராமலே,
அதற்கான கட்டணத்தைக் கட்ட வேண்டிய நிலை ஏற்படுகிறது.
அந்த நிலையையெல்லாம் போக்கித் தர வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல்,
என்னுடைய தொகுதியிலே நிறைய இடங்களிலே பட்டா வழங்
கப்படாமல் இருக்கின்றது. நீண்ட நாள் கோரிக்கையாக அது
இருக்கின்றது.

[திரு. ப. சுந்தரம்] [1989 மார்ச் 28

திருப்பத்தூர் நகரத்தில் இருக்கின்ற அண்ணா நகர், கலைஞர் நகர், பெரியார் நகர் போன்ற இடங்களிலும் அதே போல் வேலன் நகர், லட்சுமி நகர் போன்ற பல இடங்களிலிருந்து நீண்ட ஆண்டுகளாகக் கோரிக்கைகள் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது அதை இந்தச் சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லுகின்ற நேரத்தில் அதை நிறைவேற்றித் தருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏழை எளிய மக்கள் 20 ஆண்டுகளாக அந்த இடத்தில் குடியிருக்கிறார்கள். பாமர மக்கள், தொழிலாளர் மக்கள், அரிசன மக்கள் போன்றவர்கள் அங்கே குடியிருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாகப் பட்டா கொடுத்து அந்த மக்களை வாழ வைக்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், திருப்பத்தூர் நகராட்சிக்கு வருமானம் இல்லாத காரணத்தால் நகராட்சியால் ஒன்றும் செய்ய முடியாமல் தடைப்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த நகராட்சிக்கு இந்த அரசு மானியமாகத் தொகை கொடுத்து திருப்பத்தூர் நகராட்சி வளர்ச்சி அடைவதற்கு வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், நல்ல திட்டங்களைத் தீட்டுகின்ற, நாட்டு மக்களுக்கு உதவுகின்ற திட்டங்களைத் தீட்டுகின்ற, தேர்தல் காலத்தில் கொடுத்த எல்லா வாக்குறுதிகளையும் நிறைவேற்றுகின்ற ஒரே ஒரு தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்தான் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக ஆக்கப்பட்டு அவர் அளித்து இருக்கின்ற நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**திரு. எம். முகமது சித்திக்:** மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, நாட்டின் நலிவுகள் நீங்கி பொலிவுகள் ஏற்படவும், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டும் என்ற அண்ணாவின் விருப்பம் நிறைவேறும் வகையிலும் சமூக நீதி அடிப்படையில் கொண்டு வந்த இந்த நிதிநிலை அறிக்கையை நான் முழு மனதுடன் வரவேற்று எனது தொகுதிப் பிரச்சினைகள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.



1989 மார்ச் 28] [திரு. எம். முகமது சித்திக்]

நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் இயக்கத்தின் வேண்டுகோளை ஏற்று தாமாகவே முன் வந்து ஆட்சிப் பொறுப்புஏற்று இரண்டு மாதங்களுக்குள்ளாகவே திண்டுக்கல்லைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்குக் காயிதே மில்லத் மாவட்டம் என அரசு அறிவித்ததற்கும் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு நான் சார்ந்துள்ள இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாகவும், இஸ்லாமிய சமுதாயத்தின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அரசு ஏழைகளுக்கு இலவசமாக அரிசி, வேட்டி இவைகள் பொங்கல் காலங்களில் வழங்கப்படும் என்று அறிவித்து இருக்கிறது. இந்தத் திட்டத்தை நாங்கள் முழு மனதோடு வரவேற்கிறோம். பொங்கல், தீபாவளி காலங்களில் வழங்கப்படுவதைப் போல எல்லா சமுதாய மக்களுடைய பண்டிகைக் காலங்களிலும் வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள அனைத்து இன மக்களுக்கும் வழங்கவேண்டுமாய் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அதிகமான மழை நீர் போதிய நீர்த்தேக்கம் இல்லாமல் கடலில் சென்று பாழ் அடைகின்றன. அப்படிப்பட்ட மழை நீரை நாம் நீர்த்தேக்கங்களைக் கட்டி தேக்கி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குப் பாசனம் அளிக்கின்ற காவேரி அணையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் மேட்டூர் அணை கட்டப்பட்டது. கரிகாலன் காலத்தில் கல்லணை கட்டப்பட்டது. ஆனால் அதற்குப் பின்னால் நீர்த்தேக்க அணை காவேரியில் இல்லை. விவசாயத்திற்குப் பல ஆயிரக்கணக்கான நிலங்கள் மட்டும் விரிவாக்கப்பட்டிருக்கிறது. இதனால் நீர்த் தட்டுப்பாடு அதிகரித்து பலத்த பாதிப்பு ஏற்பட்டு வருகிறது. ஆகவே, கல்லணை மேட்டூர் அணை போன்று 120 அடி நீர்த்தேக்க அணையாக உடனடியாகத் திட்டமிட்டு அமைக்கப் படுமானால் மழை நீரைச் சேமித்து போதுமான தண்ணீர் விவசாயிகளுக்குப் பயன்படும் வகையில் அமையும் என்பதை என்னுடைய கருத்தாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல எனது தொகுதியில் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் செல்லக்கூடிய சாலையில் மங்கைநல்லூரிலிருந்து தரங்கம்பாடி செல்லுகின்ற சாலை ஒன்று இருக்கிறது. தரங்கம்பாடி செல்லுகின்ற சாலை வீரசோழன் ஆற்றின் கரையில் செல்கிறது. எனவே, தொகுதியில் உள்ள ஒரு பகுதி மக்கள் மயிலாடுதுறை செல்வதற்கு இது ஒரு முக்கியமான சாலையாக இருக்கிறது.

[திரு. எம். முகமது சித்திக்] [1989 மார்ச் 28

மங்கைநல்லூரிலிருந்து தரங்கம்பாடிக்கு இடையில் நூற்றுக்கு மேற்பட்ட உட்கிராமங்கள் இருக்கின்றன. இந்தச் சாலை வழியாகத் தற்போது ஒரு நாளைக்கு 50, 60 முறை பயணிகள் பேருந்தும், கார், டிராக்டர் போன்ற மற்ற வாகனங்களும் அதிகமாகச் செல்கின்றன. அந்தப் பகுதியில் ஏராளமான ஏக்கர்களில் கரும்பு சாகுபடி செய்கிறார்கள். அதையெல்லாம் அங்கே இருக்கின்ற வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலைக்கு நூற்றுக்கணக்கான லாரிகளில், டிராக்டர்களில் இந்த சாலையின் வழியாகத்தான் எடுத்துச் செல்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

மேற்கண்ட அந்தச் சாலை வீரசோழன் ஆற்றின் கரையாக இருப்பதால் மழைக் காலங்களிலும், மற்ற நாட்களிலும் பயணிகள் பேருந்தும், டிராக்டர், லாரிகளும் ஆற்றில் இறங்கியும் கவிழ்ந்தும் விடுகின்றன. இதனால் பல உயிர்ச் சேதங்களும் உயிருக்கு ஆபத்தும் ஏற்படுகின்றன. இந்தச் சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றியும் இந்தச் சாலையை அகலப்படுத்தியும் ஆற்றின் கரையில் சருக்குகள் கட்டியும் இந்தச் சாலையை மேம்பாடு செய்து கொடுத்தால் பொது மக்களுக்கும், அங்கே வாழ்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நெல் சாகுபடியில் புகையான் என்னும் பூச்சி தாக்கி ஏராளமான நெற்பயிர்கள் விளைச்சல் இல்லாமல் சேதம் அடைந்துவிட்டது. இந்த புகையான்எனப்டும் கொடியபு நோய் பாதிப்பு தொடர்ந்து இரண்டு மூறு வருடங்களாகய ஏற்பட்டு வருகின்றன. இந்தக் கொடிய நோய் விவசாயிகளுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயை ஒழிப்பதற்கு தற்போதுள்ள எந்தவொரு பூச்சிக்கொல்லி மருந்தும் அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதற்கு வேளாண்மைத்துறையின் மூலமாக உயரிய சிறந்த ஒரு மருந்தினை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமெனவும், மேலும் புகையானால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது விவசாயிகள் கோடையில் பருத்தி சாகுபடிசெய்து வருகிறார்கள். பருத்தி குறைவாக விளைகின்ற காலங்களில் குவிண்டால் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து இருநூறு வரை வியாபாரிகள் போட்டி போட்டுக்கொண்டு வாங்குகிறார்கள். ஆனால் அதிகமாக விளைகின்ற காலங்களில் குவிண்டால் ஒன்றுக்கு 300 ரூபாய் 350 ரூபாய்க்கு மேல் வியாபாரிகள் விலை கொடுக்க மறுக்கிறார்கள். பெரும் சிரமத்திற்கு இடையில் சாகுபடி செய்த பருத்தியை விவசாயிகள் நஷ்டத்திற்கு விற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே அரசு பருத்திக்கு



1989 மார்ச் 28] [திரு. எம். முகமது சித்திக்]

நியாயமான நிரந்தர விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமெனவும், அரசே கொள்முதல் செய்ய வேண்டுமெனவும் குவிண்டாலுக்கு ஆயிரம் ரூபாய்க்குக் குறையாமல் விலை நிர்ணயம் செய்யவேண்டுமெனவும் இந்த அரசை நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் உள்ள தரங்கம்பாடியில் டென்மார்க் ஆட்சிக் காலத்தில் துறைமுகமாக இருந்துவந்த துறைமுகம் இன்றைக்கு பாழடைந்த நிலையில் காட்சி அளிக்கின்றது. எனது பகுதியில் தரங்கம்பாடியிலும் சுமார் 20, 25 கிலோ மீட்டர் சுற்றளவில் பல இடங்களில் பெட்ரோல் கனிமப் பொருள்களும் நிலக்கரியும் கிடைக்கின்றன. அதிகமான அளவில் கிடைக்கின்றன. பெட்ரோல் சென்னைக்கும் மற்ற இடங்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. தரங்கம்பாடியில் இருக்கின்ற பழங்காலத்து துறைமுகத்தைப் புதிதாக மாற்றி அமைத்து புதிய துறைமுகமாக பொருள் போக்குவரத்து கடல் வழி துறைமுகமாக ஆக்கவேண்டுமென நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன். கடல்வழித் துறைமுகத்தை அங்கே ஏற்படுத்தினால் நெடுஞ்சாலையிலே ஏற்படுகின்ற நெருக்கடியையும் லாரி மற்ற வாகனங்களுடைய இடைஞ்சலைக் குறைப்பதற்கும் வசதியாக இருக்கும் என்று தாழ்மையுடன் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசு கொடுக்கின்ற பென்சன் தொகையைப் போன்று இப்போது இருக்கக் கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ் மொழி காப்பதற்காகப் பல்வேறு கால கட்டங்களில், போராட்டங்களில் ஈடுபட்ட வீரர்களை மதித்து கொடுக்கப்பட்ட பென்சன் தொகை இடைக் காலத்தில் நிறுத்தப்பட்டு இருப்பதாக அறிகிறேன். ஆகவே மீண்டும் அந்த மொழிப்போர் வீரர்களுக்கு மதிப்பும் மரியாதையும் சமுதாயத்தில் அந்தஸ்தும் கொடுக்கின்ற வகையில் அவர்களுக்கு மத்திய அரசு கொடுக்கின்ற தொகைக்கு இணையாக மொழிப்போர் தியாகிகளுக்குப் பென்சன் வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டு விவசாயத் தொழிலாளர்கள் வேலையற்ற நிலைமையிலே இருக்கிறார்கள். அங்கே தொழிற்சாலை என்பது ஒன்றுகூட இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அந்தச் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தொழிற்சாலைகளை ஏற்படுத்தி அங்கே வாழுகின்ற விவசாயத் தொழிலாளர்களுக்கு மாற்று வேலை கொடுக்க வேண்டுமெனவும் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. எம் முகமது சித்திக்] [1989 மார்ச் 28

சோழன் போக்குவரத்துக் கழகத்தில் ஏராளமானவர்கள் சிறு தவறுகளுக்காகப் பணி நீக்கம்செய்யப்பட்டு அவர்கள் நடுவீதியிலே நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். நிர்வாகம் அவர்களைப் பணி நீக்கம் செய்யாமல் தண்டனை எதுவானாலும் கொடுக்க வேண்டுமென நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது பகுதியில் விவசாயிகள் கடலோரப் பகுதியில் சாகுபடி செய்யமுடியாத சூழ்நிலை இருக்கிறது. கடல் நீர் உள்ளே புகுந்து விவசாயம் செய்யமுடியாமல் ஏராளமான சாகுபடி நிலங்கள் பாழாகின்றன. அப்படிப்பட்ட நிலங்களுக்குத் தடுப்புச் சுவர்களையும், பெரிய கரைகளையும் கட்டி கடல்நீர் உள்ளே புகாமல் விவசாய நிலங்களைப் பாதுகாத்துத் தரும்படியும் பணிவன்புடன் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் மேல்நிலைப் பள்ளிகள் ஒன்றிரண்டுதான் இருக்கின்றன. மற்றப் பகுதிகளில் மேல்நிலைப்பள்ளிகள் இல்லாததால் மாணவர்களும் மாணவிகளும் 30 கிலோ மீட்டருக்கும் அதிகமான தொலைவு சென்று மேல்நிலைப் படிப்பு படிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

பேருந்து வசதி சரியாக இல்லாத காரணத்தால் பஸ்களிலே செல்லக்கூடிய மக்கள் அதிகமான நெருக்கடி காரணமாக அவதிப் படுகிறார்கள். குறிப்பாக மாணவர்களும் மாணவிகளும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மாணவிகளுடைய பெற்றோர்கள் தொலை தூரத்திற்கு அவர்களை அனுப்புவதற்குப் பேருந்து வசதி இல்லாத காரணத்தால் மிகவும் அஞ்சுகிறார்கள். ஆகவே மாணவிகள் செல்வதற்கு என்று தனியாகப் பேருந்து வசதி ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய தொகுதியில் போதுமான அளவுக்கு மேல் நிலைப் பள்ளிகள் இல்லாத காரணத்தால் அங்கே அதிகமான மேல்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக செம்பனார் கோயில், திருக்காளக் கோயில் ஆகிய இடங்களில் புதியதாக மேல்நிலைப் பள்ளிகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, 1989–90 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. மா. மணிமாறன்]

இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்க்கிறபோது 4,134.23 கோடி ரூபாய் வருவாயில் 149 கோடி ரூபாய் பற்றாக் குறை நிலை உள்ளது. இந்த பட்ஜெட்டைப் பற்றி விவாதிக்கிறபோது சிலபேர் சில கோணங்களில் ஆராயக்கூடும். சிலபேர் இந்த நிதிநிலை அறிக்கை ஒரு பற்றாக்குறை பட்ஜெட்என்று விமர்சிக்கக் கூடும். என்னைப் பொறுத்தவரையில் இது பற்றாக்குறையா இல்லையா என்று பார்க்கும் போது பற்றாக்குறை இல்லை என்றே நான் கூறுவேன். காரணம் இதற்கு முந்தைய ஆண்டு பட்ஜெட்டில் 308 கோடி ரூபாய் பற்றாக்குறை வைத்திருக் கிறார்கள். அந்த 308 கோடி ரூபாய் பற்றாக்குறையை ஈடு செய்த பின்னால்தான் இந்த 149 கோடி ரூபாய் இப்போது பற்றாக்குறை என்று காட்டப்பட்டிருக்கிறது. அதிலே கூட, இந்த மாநிலத்தில் கவர்னர் ஆட்சி நடந்த பின்னால் இந்த ஆட்சி உருவாக்கப்பட்டிருக்கிறது. கவர்னர் ஆட்சிக்குப் பின்னர் வந்த ஆட்சி என்பதால் இந்தப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொல்ல ஒரு வாய்ப்பு இருக்கிறது.

இதற்கு முன்னாலே 1975–76 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்திருக்கிறது. அப்போது ஆட்சி கலைக்கப்பட்டு, கவர்னர் ஆட்சி வந்தது. வந்த வுடனே எப்படி விமர்சித்தார்கள்? திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கஜானாவைக் காலி செய்துவிட்டார்கள் என்று கடுமையாக விமர்சித்தார்கள். அப்போது 1975–76-ல் நிதி நிலை அறிக்கையில் 5.4 கோடி ரூபாய் உபரிதான் காட்டப் பட்டிருந்தது. அதற்குப் பின்னாலே 1976–77 கவர்னர் ஆட்சி யில் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்டிலே கூட 61 இலட்சம் ரூபாய் உபரி காட்டப்பட்டதே தவிர பற்றாக்குறை இல்லை. திராவிட முன்னேற்றக் கழகம் கஜானாவை காலிசெய்துவிட்டது என்ற விமர்சனத்திற்குப் பின்னால் கவர்னர் ஆட்சியில் எவ்வளவோ முயற்சித்தும் பற்றாக்குறை காட்ட முடியாமல் 61 இலட்சம் ரூபாய் உபரி பட்ஜெட்தான் காட்ட முடிந்தது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி கவர்னர் ஆட்சிக்கு முன்னால் அமைந்திருந்தபோது பல பட்ஜெட்டுகளை டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். எங்கள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது பணத்தை சரியாகப் பயன்படுத்தி, எந்த எந்த திட்டத் திற்கு எப்படி எப்படி பணத்தைச் செலவிடலாம் என்று எண்ணிப் பார்த்து திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திய காரணத்தால், மக்களுக்குத் தேவையான திட்டங்களை தேவையான அளவுக்கு தீட்டிச் செயல்படுத்திய காரணத்தால் 1975–76 ஆம் ஆண்டில் 5.4 கோடி ரூபாய் உபரியானது. இப்போது செயற்கையான குற்றச்சாட்டுக்களைச் சொல்பவர்கள்தான் அன்றைக்கு ஆட்சி யைக் கலைத்தவுடன் செயற்கையான குற்றச்சாட்டுகளைச் சொல்லி கடுமையாக விமர்சித்தார்கள். எப்படியெல்லாம் குற்றச்

[திரு. மா. மணிமாறன்] [1989 மார்ச் 28

சாட்டுக்களைச் செயற்கையாகச் சொன்னபோதிலும், கஜானாவைக் காலிசெய்துவிட்டார்கள் என்று சொன்னபோதிலும் அப்போதைய கவர்னர் ஆட்சியில் பற்றாக்குறை பட்ஜெட்டைப் போட முடியவில்லை. மாறாக 61 இலட்சம ரூபாய்க்கான உபரி பட்ஜெட்டைத்தான் அவர்களால் போடமுடிந்தது.

கவர்னர் ஆட்சியிலே 1988-89-ல் 308கோடி ரூபாய்க்குப் பற்றாக் குறை வைத்தார்கள். அதே நேரத்தில் இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் வைத்திருக்கிற நிதிநிலை அறிக்கையையும் பார்க்கிறோம். அந்த 308 கோடி ரூபாய் பற்றாக்குறையைச் சரிக்கட்டி, பல சமூக நலத் திட்டங்களை அளித்து, 149 கோடி ரூபாய்க்குப் பற்றாக்குறை என்கின்ற அளவில், அதையும் சரிக்கட்டி விடலாம் என்கின்ற அளவுக்கு ஒரு சிறந்த பட்ஜெட்டைத் தந்திருக்கிறார்கள்.

இன்னொன்றையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கவர்னர் ஆட்சியிலே விளம்பரங்கள் பல தரப்பட்டன. கவர்னர், ஆட்சியைப் பார்த்து மக்கள் ஓட்டுப்போட வேண்டும். அதற்காக என்ன என்ன திட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு ரூபாய் செலவிடப்படும் என்று விளம்பரப்படுத்தினார்கள். எதிர்காலத்தில் மக்கள் கவர்னர் ஆட்சியைப் பார்த்து, வாக்களித்து காங்கிரஸ் ஆட்சியை உருவாக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் கூட கேட்டுக்கொண்டார்கள். காங்கிரஸ் ஆட்சியைக்கொண்டு வந்துவிட வேண்டுமென்று பலமுறை தமிழ்நாட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார்கள். அப்படிச் சுற்றி வருகிற போது அவர்கள் சொன்ன சொற்கள், இந்த நாட்டிலே பொருளாதார ஏற்றத்தை உருவாக்கவேண்டும். அதற்காக, திட்டப் பணிகளுக்காக 1,457 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று விளம்பரம் செய்தார்கள். நாமும் ஏதோ இருக்கிறது என்று பார்த்தோம். தமிழ்நாட்டிற்குப் பெரிய பெரிய திட்டங்கள் வரப்போகின்றன; 1,457 கோடி ரூபாய் திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன; பரவாயில்லை; ஏதோ முன்னேற்றம் இருக்கும் என்று எண்ணினோம்.

அதற்குப்பின்னாலே, இன்றைக்குத் தமிழக ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருக்கிற டாக்டர் கலைஞா அவர்கள் வந்த பின்னாலே இந்த ஆண்டுத் திட்டச் செலவுபற்றி மத்திய அரசுடன் வாதாடும் போது கிடைத்த தகவல்களைப் பார்த்தால், அவற்றின் உண்மையைப் பார்த்தால், எந்த அளவுக்குத் தமிழ்நாட்டைக் காவு கொடுத்திருக்கிறார்கள் என்பது தெரியும். அந்த அளவுக்கு தமிழ்நாட்டை காவு கொடுத்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கும்போது தமிழ்நாட்டு மக்கள், கட்சிக்கு அப்பாற்பட்டு இருப்பவர்கள், அரசியல் காழ்ப்பு உணர்ச்சி இல்லாதவர்கள், அரசியல் விரோதம் காட்டாதவர்கள், நடந்தவை நாட்டின் முன்னேற்றத்தை நிச்சயமாக உருவாக்க முடியாது என்ற முடிவுக்கு வருவார்கள்.



1989 மார்ச் 28] [திரு. மா. மணிமாறன்]

அன்றைக்கு 1988-89-க்கு 1,302 கோடி ரூபாய்க்குத் திட்டங்களைக் கோரியிருந்தார்கள். அப்போது நிதியாதாரங்கள் தருவதாக அறிவித்திருந்தார்கள். ஆனால் அறிவித்ததற்குப் பின்னாலே கிடைத்தது 1,202 கோடி ரூபாய்தான். இதற்கெல்லாம் காரணம் நிதியாதாரங்கள் காட்டாத குறைபாடுதான். போதிய நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கு அன்றைக்கு இருந்த ஆட்சியாளர்களுக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமல் விட்டுவிட்டார்களோ அல்லது உரிய வகையில் அறிவிப்பதற்கு அருகதையற்றவர்களாக அவர்கள் இருந்தார்களோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் தமிழகத் திட்ட வளர்ச்சி பாதிக்கப்பட்டது, பாழ்பட்டது. அதன் காரணமாக ஏறத்தாழ 409 திட்டங்கள் பாழ்படுத்தப் பட்டிருக்கின்றன.

(பிற்பகல் 12.20)

நாங்கள் ஒன்றை எண்ணிப் பார்க்கிறோம். முன்னால் இருந்த அரசினர் சில சலுகைகளை அறிவித்தார்கள். அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். விவசாயக் கடன் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள், தக்காவிக் கடன்களையும் தள்ளுபடி செய்வதன் வாயிலாக திட்டச் செலவிற்குக் கிடைக்கிற நிதியாதாரங்களிலே இழப்பு ஏற்படும். மத்திய அரசிலே இருந்து நிதி பெறுவதற்குப் பாதகமாக இருக்கும், எனவே விளம்பரத்திற்காக வேண்டுமானால் இது சரியாக இருக்குமே தவிர தமிழகத்திற்குப் பாதகமான நிலைதான் உருவாகும் என்று மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது எடுத்துச் சொன்னார்கள். ஆனால், அன்றைக்கு யாரும் கேட்காத காரணத்தால்தான் இன்றைக்கு 409 திட்டங்கள் பாதிக்கப்படுகிற அளவிற்குத் தமிழகத்தில் நிலைமை உருவாகி இருக்கிறது. இப்போது எண்ணிப்பார்க்கிற நிலைமையில் கடந்த கால ஆட்சியில் மட்டுமல்லாது, மத்திய அரசினால்கூட நமது பல திட்டங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றை மாதிரிக்குச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத் திட்டங்கள் குறித்து தமிழக முதல்வர் அவர்கள் விவாதிக்கச் செல்கிற நேரத்தில் பொதுப்பணித் துறையிலே இருக்கின்ற ஒரு திட்டத்தைப் பற்றி விவாதித்து இருக்கிறார்கள். அப்போது காவிரியின் கடைமடைப் பகுதி குறித்து விவாதித்து அதற்கான திட்டங்களை உடனடியாகத் தீட்ட வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அந்தத் திட்டங்களை எல்லாம் பார்க்கிற நேரத்தில் மெத்த வேதனைப்படுகின்ற அளவில்தான் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள்.

ஏறத்தாழ 120 கோடி ரூபாய் அளவில் தமிழகத்தினுடைய பொதுப்பணித் துறையினைச் சேர்ந்தவர்கள் திட்டங்களைத் தீட்டி ஒப்புதலுக்காக உலக வங்கிக்கு அனுப்பினார்கள். அவ்வாறு 120 கோடி ரூபாய் அளவுக்கு அனுப்பப்பட்ட திட்டத்தை மத்திய அரசு ஆராய்ந்து, 79 கோடி ரூபாய் அளவுக்குத்தான் இந்தத் திட்டத்தைத் தீட்டி அனுப்ப வேண்டுமென்று சொன்னது. அவ்வாறு சொல்லி திருப்பி அனுப்பப்பட்டதற்குப் பிறகு, 79 கோடி ரூபாய் அளவுக்குத் தயாரித்து திட்டத்தை அனுப்பினார்கள். இப்படி பேப்பர் ஏறத்தாழ நான்கைந்து ஆண்டுகளுக்குசென்னைக்கும், டெல்லிக்கும் போய் வந்துகொண்டிருந்திருக்கிறது. 79 கோடி ரூபாய் அளவிற்குத் திட்டத்தைத் தயாரித்து அனுப்பியவுடன் உலக வங்கியில் இருக்கக்கூடியவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அதாவது ஐந்து நட்சத்திர ஓட்டலிலே இருந்துகொண்டு 50 பைசா டீ வாங்குவதற்காக வெளியே அனுப்புவதுபோல் ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. 400 கோடி ரூபாய்க்கும் மேலாகத் திட்டங்களைத் தயாரித்து அனுப்புங்கள், இப்படி துண்டு, துண்டாக அனுப்பினால் எங்களுக்கும் வேலைப்பளு, உங்களுக்கும் வேலைப்பளு என்று உலக வங்கியினர் அறிவித்தார்கள். ஆனால் இன்றைக்கும் கூட 400 கோடி அளவுக்கு அந்தத் திட்டங்களைத் தயாரிக்காமல், அவ்வாறு தயாரித்து அனுப்பி வைக்காமல் 79 கோடி ரூபாய் அளவிலேயே அந்தத் திட்டங்களை மேஜையிலே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி மைய அரசின் பொதுப் பணித் துறையில் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இது ஒரு நிலைமை.

இன்னொரு நிலைமையைச் சொல்ல விரும்புகிறேன். ஆயிரக் கணக்கான கோடி ரூபாயை நாமெல்லாம் செலவு செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் காவிரி கடைமடைப் பகுதியைப் பொறுத்தவரையில் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் தனியாக இதற்கென்று ஒரு செல்லைப் போட்டு ஆராய்ந்து 49 கோடி ரூபாய்க்குத்தான் அன்றைக்குத் திட்டங்களைத் தயாரித்தார்கள். எனவே, அப்படி வெறும் 49 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் இன்றைக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை எட்டிப்பிடித்து இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? 49 கோடி ரூபாயில் காவிரி திட்டத்தையும், பெரியாறு திட்டத்தையும் சேர்த்துத் தயாரித்து உலக வங்கிக்கு அனுப்பினார்கள். அப்படி அனுப்பப்பட்ட திட்டங்களிலே பெரியாறு திட்டத்தை மட்டும் அங்கீகரித்துவிட்டு காவிரித் திட்டம் நிராகரிக்கப்பட்ட காரணத்தால் வெறும் 49 கோடி ரூபாயில் நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம் இன்றைக்கு இந்த அளவுக்கு வந்திருக்கிறது. இந்த நிலைமைக்குக் காரணம் அரசியல் காழ்ப்புணர்ச்சியே தவிர வேறு ஒன்றும் இல்லை. மைய அரசு பெரியாறு திட்டத்திற்கு அங்கீகாரம் தந்தார்கள்; ஆனால் காவிரித் திட்டத்திற்கு அங்கீகாரம் தரவில்லை. காவிரித் திட்டத்தைப் பொறுத்த வரையில் மைசூரைக் காரணமாகக் காட்டிக்கொண்டு இருக்க முடியுமே தவிர அது உண்மையான வாதமல்ல, இன்றைக்கு மைசூரைப்





பொறுத்தவரையில் நமக்கெல்லாம் தெரியும். நாம் தண்ணீர் குறைவாகத்தான் பெற்று சாகுபடி செய்து வருகிறோம். அப்படிக் குறைவாகப் பெற்று வருகிற இந்தக் கால கட்டத்தில் ஒப்புதல் அளிக்க ஏன் டெல்லி தயங்குகிறது என்பது நமக்குத் தெரியவில்லை. இன்றைக்கு நாமெல்லாம் அரசியலுக்கு அப்பாற்பட்டு, தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளின் நலனிலே அக்கறை கொண்டிருக்கிறோம் என்று சொன்னால் அதாவது யார் யாருக்கு டெல்லி மீது அக்கறை இருக்கிறதோ, யார் யார் டெல்லியிலிருந்து இங்கே வரவேண்டுமென்று கருதுகிறார்களோ அத்தனை பேரும் அக்கறை எடுத்து, இதற்குரிய காரணம் என்ன என்பதை உணராமல் இருப்பது அரசியல் காழ்ப்புணர்ச்சியே தவிர மக்களின் மீது இருக்கின்ற அக்கறையாலோ அல்லது மக்கள் வாழ வேண்டும், வளர வேண்டும் என்ற எண்ணத்தாலோ அல்ல. வெறும் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகத்தான் இந்தத் திட்டங்கள் எல்லாம் இன்றைக்குக் கிடப்பிலே போடப்பட்டிருக்கின்றன. இதையும் மெத்த வருத்தத்தோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் சொல்ல விரும்புகிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில் மிகச் சிறப்பாக ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். கிராமப்புறச் சாலைகளுக்காக நூறு கோடி ரூபாய்க்கு மேலாக ஒதுக்கி இருக்கிறார்கள். நமது முதல்வர் அவர்கள் முன்பு ஆட்சியில் இருந்தபோது கிராமப்புறச் சாலைகள் சீர்பெறவேண்டும் என்பதற்காகத் தனித் துறையை உருவாக்கி பணங்களை எல்லாம் ஒதுக்கினார்கள். அப்படி ஒதுக்கி அனைத்தும் முறையாக நடந்தது. கடந்த காலத்தில் கிராமப்புற நெடுஞ்சாலை பணி என்ன ஆகியிருக்கிறது என்று சொன்னால் அது வேதனைப்படக்கூடியதாகத்தான் இருக்கிறது. கடந்த ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 60 கோடியை கிராமப்புற நெடுஞ்சாலைத் துறைக்காக ஒதுக்கினார்கள். ஒதுக்கப்பட்டதே தவிர இன்றைக்கு வரை செலவு செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இன்றுவரை 35 கோடி ரூபாய்தான் செலவு செய்திருக்கின்றார்கள். ஆண்டுத் திட்டம் முடிய இருக்கிறது. 60 கோடி ரூபாயிலே ஏறத்தாழ 50, 52 விழுக்காடுதான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் கிராமப்புறத் திட்டம் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறோம். அந்தக் குறையைப் போக்கத்தான் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாகக் கிராமப்புற மக்கள் சாலைகளைப் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு இன்றைக்குத் திட்டங்களைச் சிறப்பாக அறிவித்திருக்கின்றார்கள். ரூ. 100 கோடிக்கும் மேலாக அனுமதித்திருக்கின்றார்கள். அதற்காக கிராமப்புற மக்கள் கட்டாயமாக மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்திருக்கின்றார்கள். பல ஆண்டுக்காலமாக கிராமப்புற சாலைகளை எண்ணிப்

பார்க்க முடியாமல் இருந்த டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலே தான் கிராமப்புறச் சாலைகள் சீர் பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் அதை நான் வரவேற்கவும் பாராட்டவும் கடமைப்பட்டிருக்கிறேன்,

இப்படிப்பட்ட பல குறைகளை நீங்கள் பார்க்கின்றீர்கள். கடந்த காலத்தில் ஏற்பட்ட நிலைகளை எல்லாம் உங்களுக்கு மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்ட வனாக இருக்கிறேன். கடந்த காலத்தில் பல திட்டங்களை அறிவித்தார்கள். நான் முன்னாலே சொன்னதுபோல, இதை மாதிரி அரசாங்கமாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றெல் லாம் அறிவித்தார்கள். மாதிரி அரசாங்கமாக 1988–89 இருக்கவேண்டுமென்று சொன்னவர்களிடத்திலே ஏற்பட்ட நிலையை உங்களிடத்திலே சொல்வது என்னுடைய தலையாய கடமை என்று கருதுகிறேன்.

ஆதி திராவிடர்களுக்காக வீடு கட்டுவற்கு என்று 1988–89-ல் கவர்னர் அவர்கள் ரூ. 8 கோடி ஒதுக்கினார்கள். மிக அவசர அவசரமாக ஒதுக்கினார்கள். இதற்கு முன்னாலேயே ஒரு திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்திலே ஒதுக்கியிருக் கிறார்கள் என்று சொன்னால் பணமே வரவில்லை. வரவு வைக்கப் படவில்லை. ஆனால் மிக வேகமாக ஆதி திராவிடர்களுக்கு 8 கோடி ரூபாயில் வீடு கட்டிக்கொடுக்கவேண்டும் என்றுவேகமாக வந்தார்கள். அப்படி சொல்லி ரூ. 8 கோடி ஒதுக்கினார்கள். ஒதுக்கிய பணம் முறையாக அந்த துறைக்கு அளிக்கப்பட்டிருக் கிறதா என்று சொன்னால், செலவு செய்யப்பட்டிருக்கிறதா என்று சொன்னால்—மெத்த வேதனையோடு சொல்கிறேன். அந்த 8 கோடி ரூபாய் ஒதுக்குதல் இருக்கிறது, ஆனால் பணம் அத்துறைக்கு இதுவரை ஒப்படைக்கப்படவில்லை. இதை நான் கேட்பதற்குக் காரணம் ஆதிதிராவிட மக்கள் அப்பாவிகளாக இருப்பதுதான். 8 கோடி ரூபாய் என்று விளம்பரம் செய்த அரசு ஏன் அந்த பணத்தை செலவு செய்யவில்லை என்ற கேள்வியை நான் தொடுப்பது நியாயம் என்று கருதுகிறேன்.

இன்னொன்றை நான் சொல்லலாம் என்று கருதுகிறேன். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கொள்முதல் செய்ய உதவியாக 15 லட்சம் ரூபாய் 1988–89லே அளித் தார்கள். அப்படி அறிவிக்கப்பட்டிருக்கிறது. பட்ஜெட்டிலே வகை செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் குறித்த காலத்தில் ஒப்படைப்பு செய்து இருக்கிறார்களா என்று சொன்னால், சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே ஒப்படைக்கப்படவில்லை. ஆனால் அறிவிக்காமலேயே கடந்த காலத்திலே, 1988–89லே பல துறைகளை உருவாக்கி இருக்கின்றார்கள்,



உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். ஊரக நிலமற் றோர் வேலைவாய்ப்புத் திட்டம் என்று ஒரு திட்டம். அந்தத் திட்டம் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற நேரத்தில், அதற்கு பட்ஜெட்டிலே புரொவிஷனே கொடுக்காமல், திடீரென்று கண்காணிப்புக்காக என்று ஒரு துறையை தலைமைச் செயல கத்தில் உருவாக்கி, அதற்காக ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய் செலவு செய்து ருக்கின்றார்கள். கண்காணிப்புக்காக அந்தத் துறை இருக்கிறதே தவிர வேறில்லை. ஆர்.எல்.ஈ.ஜி.பி.யில் 1987–88-வது ஆண்டில் எடுக்கப்பட்ட சாலைகள் பட்டியல் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு, இன்றைக்கு வரை மத்திய அரசு தமிழகத்திற்கு ஒப்புதல் அளிக்காமல் இன்றைக்கும் டெல்லியிலேயே தேங்கிக் கிடக்கிறது. ஆனால் கடந்த காலத்தில் ரூ. 4 லட்சம் கண்காணிப்புக்காக ஒதுக்கப்பட்டதே தவிர டெல்லியிலே இருந்து வரவேண்டிய திட்டங்களை இன்றைக்கு வரை பெற்றுத் தரமுடியவில்லை என்பதை மெத்த வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, திடீரென்று ஒரு திட்டம் அறிவிக்கிறார்கள். ஆதிதிராவிடர்கள், ஷெட்யூல்ட் டிரைப் போன்றவர்கள் கண்காட்சியைப் பார்த்துத்தான் தங்களை திருத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக—பட்ஜெட்டிலே புரொவிஷன் இல்லை—அதற்காக பல லட்சம் ரூபாய்களை ஒதுக்கி அதற்கு என்று திறப்பு விழா நடக்கிறது. எது எது மக்களுக்கு பலன் தரக்கூடிய திட்டமோ அந்தத் திட்டத்தைத் தயாரித்து செயல்பட முடியாமல் விளம்பரத்திற்காக செலவு செய்து இருக்கின்றார்கள். 1988–89க்கு முன்னாலே கூடுத லாக செலவு செய்ததைக்கூட சொல்லவேண்டும். எதிலே செலவு செய்து இருக்கின்றார்கள் என்று சொன்னால், ஆதிதிராவிடர் மக்களுக்கு ஒதுக்கிய பணத்தில், விளம்பரத்திற்காக வீடு கட்டுவதற்காக ஒதுக்கிய பணத்தில், 2 லட்சம் ரூபாய் கூடுதலாக விளம்பரத்திற்காக செலவு செய்யப் பட்டிருக்கிறது. விளம்பரத்திற்கு செலவு செய்த வேகம் அவர் களுடைய வீடு கட்டுவதற்காகவும், அவர்களுடைய முன்னேற் றத்திற்காகவும் செலவு செய்யப்படவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இன்றைக்கு தமிழக முதல மைச்சர் அவர்கள் ரூ. 45 கோடி கான்கிரீட் வீடு கட்டுவதற்காக, அனுமதித்திருக்கின்றார்கள். அது ஒரு பாராட்ட வேண்டிய திட்டம். ஏனென்று சொன்னால், பிள்ளையைப் பெற்றவர் களுக்குத் தான் அதனுடைய நிலைமை தெரியும் என்பது போல டாக்டர் கலைஞர் முதல்வராக இருக்கின்ற நேரத்தில் தான் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டும் திட்டத்தை உருவாக்கி னார்கள். அப்படி உருவாக்குகிற நேரத்தில், ஏறத்தாழ திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி, திட்டம் தொடங்குகின்ற நேரத்தில் ரூ. 537 கோடி வரவு-செலவு இருந்தது. அந்த

[திரு. மா. மணிமாறன்] [1989 மார்ச் 28

537 கோடி ரூபாய் இருக்கிற நேரத்தில் கான்கிரீட் வீடு கட்டுவதற்காக 14 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். அந்த விகிதப்படி இது வரையில் ஒதுக்கியிருந்தால், ஏறத்தாழ, கவர்னர் ஆட்சியும் சேர்த்து ஒதுக்கியிருந்தால், ரூ. 640 கோடி அளவு வரை வந்திருக்கவேண்டும். இது வரை, 1988–89 வரை, ஒதுக்கிய பணம் 17 கோடி ரூபாய் தான். இதைக் கழித்தால் 623 கோடி ரூபாய்க்கு மேலாக தொடர்ந்து டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இல்லாத காரணத்தினால் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ரூ. 623 கோடி அளவுக்கு வீடு கட்டுவதில் மட்டும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த 600 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்திருந்தால்—கிட்டத்தட்ட தமிழகத்திலே 75 விழுக்காடு அளவுக்கு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவர்கள் வீடற்ற, நிலையற்றவர்களாக இருப்பார்கள்—அந்த குறையைப் போக்கியிருக்கமுடியும்.

டாக்டர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நேரத்தில் கேட்டார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்காக வகை செய்யப்பட்ட வீடு கட்டும் திட்டம் கைவிடப்பட்டதா என்றெல்லாம் கேட்டார்கள். அதற்கு நல்ல பதில் கிடைத்தது. 'தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு வீடா? அவர்களுக்கு மட்டும் வீடு கட்டிக்கொடுத்தால், இன்றைக்கு இருக்கின்றவர்கள் சும்மா இருக்கமாட்டார்கள். எல்லோரும் புரட்சி செய்வார்கள். அவர்கள் வீட்டைப் பற்றிக் கேட்கவில்லை. அவர்கள் கேட்பதெல்லாம் மனைதான் கேட்கிறார்கள்.' என்ற பதிலைத்தான் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு அன்று பதிலாக அளித்தார்கள்.

இப்படி ஏழையெளியவர்களாக இருந்தாலும், தாழ்த்தப்பட்டவர்களாக இருந்தாலும். டாக்டர் கலைஞர் அவர்கள், அவர்களுக்காக செய்த உதவியை பின்னர் என்றைக்குமே மறுத்து வந்திருக்கிறார்கள். மீண்டும் மறுமலர்ச்சியாக இன்றைக்குத்தான் கலைஞர் அவர்கள் ஏறத்தாழ ரூ. 49 கோடி கான்கிரீட் வீடு கட்டும் திட்டத்திற்கு பணம் ஒதுக்கியிருக்கின்றார்கள், ஒரு ஆண்டில் 45 ஆயிரம் வீடுகள் கட்டுகின்ற நிலையை உருவாக்கியிருக்கிறார்கள்.

அதிலேயும் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றைக்கு நிதி ஆதாரத்தைப் பெருக்கியிருக்கின்றார்கள். எந்தெந்த தலைப்பிலே பணங்களை அதிகமாகச் செலவு செய்யவேண்டும் என்று ஒதுக்கி இருக்கிற தலைப்பில், ஓய்வூதியத்திலே அதிகம் காட்டியிருக்கின்



1989 மார்ச் 28] [திரு. மா. மணிமாறன்]

றார்கள், பொதுக் கல்வியிலே அதிகமாகக் காட்டியிருக்கின்றார்கள், மருத்துவத் துறையிலே அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள். குடிநீருக்காக அதிகம் காட்டியிருக்கின்றார்கள். நுகர்பொருள் வளர்ச்சியிலே அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள். ஆதிதிராவிடர் பழங்குடி மக்களுக்காக அதிகமாகக் காட்டியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-30)

கூட்டுறவுத் துறை, நுகர்பொருள் கழகம், இந்தத் தலைப்பிலே மிகுந்த அக்கறை எடுத்து, சமுதாயத்திற்காக, நலிந்த சமுதாயத்தினருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காக, முறையாக உணவுப் பெறுவதற்காக, சுகாதாரம் பெறுவதற்காக, இன்றைக்கு கிராமப் புறத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்கப்படும் மருத்துவ வசதியை அவர்கள் ஒழுங்காகப் பெற வேண்டும் என்பதற்காக, பல பிரைமரி ஹெல்த் சென்டர்களை திறக்க வேண்டுமென்ற ஒரு நிலையை இன்றைக்கு இந்த நிதி நிலை அறிக்கையின் வாயிலாக இந்த அரசு உருவாக்கியிருப்பதற்காக நான் என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் நாங்கள் ஆதரிக்கும் அதே நேரத்தில், ஒரு பக்கத்தில் மாநில அரசு கிராமப்புற மக்கள் எல்லாம் வளம்பெற வேண்டுமென்று கருதுகிற நேரத்தில், மத்திய அரசோ பம்பாய்க்கும், டெல்லிக்கும், கல்கத்தாவுக்கும், அங்கிருக்கிற குடிசை மேம்பாட்டுக்காக பணம் ஒதுக்கிவிட்டு தமிழ்நாட்டு குடிசை மேம்பாட்டுக்கு மட்டும் பணம் ஒதுக்காமல் ஓரவஞ்சனை செய்திருப்பதையும் நாம் இந்த அறிக்கை வாயிலாகப் பார்க்கிறோம். எனவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்காக, குடிசைவாசிகளுக்காக, அவர்கள் அங்கிங்கெனாதபடி எல்லா இடங்களிலும் நிரந்தரமாக வசிக்கிற நிலையில், அப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் ஏதாவது பாதுகாப்பு தருகிற நிலையை மைய அரசு எடுத்திருக்கிறார்களா என்பதை நாங்கள் எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இங்கே, நமக்குள்ள நிலை யார் எங்கே இருக்க வேண்டும் என்பதில் ஏற்பட்டிருக்கிற நிலையே தவிர, பொதுமக்கள் வாழ்வு வளர வேண்டாமா, அவர்களுடைய பாதுகாப்பைத் தகர்க்கின்ற நிலையை எல்லாம் போக்க வேண்டாமா? அப்படிப்பட்ட நிலை எல்லாம் ஆராயப்படாமலேயே இருக்கிறது. இதுபற்றி எல்லாம் கவனம் செலுத்த வேண்டும்.

இன்னும் ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி விடைபெறலாம் என்று நினைக்கிறேன். இந்த அறிக்கையைப் பொறுத்தவரையில், குறிப்பாக நன்னிலம் தொகுதியில் வாழ்கிற மக்களைப் பொறுத்த வரையில், எல்லா மக்களும் கட்டாயமாக மாண்புமிகு முதல்வர். டாக்டர் கலைஞருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம்

[திரு. மா. மணிமாறன்] [1989 மார்ச் 28

ஏனென்று சொன்னால் ஒரு காலத்தில் விவசாயத்தை நம்பிக் கொண்டிருந்த மக்கள், இன்றைக்கு விவசாயம் பொய்த்துப் போய், தொழில் துறையில் ஏதாவது அந்தத் தொகுதி மக்களுக்கு கிடைக்குமா என்று அவர்கள் எல்லாம் ஏங்கிக் கொண்டிருந்த நேரத்தில், மாமருந்தாக, நன்னிலத்தில் பெட்ரோல் ஆய்வு நிலையத்தை ஏற்படுத்தி, அங்குள்ளவர்களுக்கு வேலை வாய்ப்புத்தர ஏறத்தாழ 90 கோடி ரூபாய்க்கு மேல் திட்டத்தைத் தயாரித்து, அது தொடர்பான துணைத் தொழில்களையும் தொடங்க ஆரம்பித்திருக்கிறார்கள். நன்னிலம் தொகுதியைப் பொறுத்தவரை தொடர்ந்து 1971 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை நமக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். தோழமை என்று வந்தவர்கள் 1980-ல் துரோகம் செய்துவிட்ட காரணத்தினால் ஒரே ஒரு முறை தான் வர முடியாமல் போய்விட்டது. ஆனால் தொடர்ந்து இத்தனை ஆண்டுக் காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் அந்தத் தொகுதியில் வெற்றி பெற்று வந்திருக்கிறது. எனவே அப்படிப்பட்ட மக்களுக்கு சேவை செய்வதற்காக என்னைத் தேர்ந்தெடுத்து எனக்கு வாய்ப்பளித்தமைக்கு அந்தத் தொகுதி மக்கள் சார்பாக முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், என்னைத் தேர்ந்தெடுக்கச் செய்து, இந்த அவைக்கு உள்ளே வரச் செய்து, பேசவும் அனுமதித்தமைக்காக டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும், எங்கள் மாவட்டச் செயலாளரான வேளாண்மைத் துறை அமைச்சருக்கும், அண்ணன் திரு. மன்னை அவர்களுக்கும் நன்றி சொல்லி அமைகிறேன். வணக்கம்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, நான் ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது, 21-2-1989 அன்று, நம்முடைய மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் மகாபலிபுரம் அருகே 400 ஏக்கர் பினாமியாக ஒரு நபருக்கு நிலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்குள் அதைப் பற்றி கண்டுபிடித்து, விவரமான அறிக்கையாக அவைக்கு தருகிறேன் என்று சொல்லியிருந்தார்கள். அதுசம்பந்தமாக அறிக்கை ஒன்றை இங்கே தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். கணபதி) : இது எப்படி ஒழுங்குப் பிரச்சினை ஆகும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை, சட்டப் பேரவையினுடைய எந்த விதியின்கீழ் கிளப்பப்பட்டிருக்கிறது என்று தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதியில் வேண்டுமானால் வித்தியாசம் இருக்கலாம். ஆனால் அமைச்சர் சொன்னதை இங்கே தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டதெல்லாம், சட்டமன்ற நடவடிக்கைகள், ஏதாவது சட்டமன்ற விதியின்கீழ் அமைந்தால் நலமாக இருக்கும். ஏதாவது ஒரு விதியின்கீழ் இங்கே பிரச்சினை கிளப்பினால் நான் அதுபற்றிய விவரங்களைத் தருகிறேன்.

திரு. ரெ. பிச்சைமுத்து : பேரவைத் தலைவரவர்களே, முதன்முறையாக இங்கே பேச அனுமதித்த தங்களுக்கும், பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்காளர் பெருமக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். பெரம்பலூர் தொகுதி மிகவும் பின் தங்கிய தொகுதி. அந்தத் தொகுதியிலே வாழும் மக்கள் இன்றைக்குக் குடிநீர்ப் பற்றாக்குறை காரணமாக அந்தப் பகுதியை விட்டு வெளியேறுகிற அவல நிலைக்கு, கேவலமான நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கே நிலத்தடி நீர் மட்டம் மிகவும் கீழே இறங்கிவிட்டதால், அந்தப் பகுதியிலே குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியாத அளவுக்கு இருக்கிறது. நிலத்தடி நீர் மட்டம் 160 அடிக்குக் கீழே சென்றுவிட்டதால், அங்கே தண்ணீர் இல்லாமல் அந்தப் பகுதி பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

முந்தைய முதல்வர் அவர்கள் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு வள்ளுவர் மாவட்டம் என்று ஆரம்பிக்கப்படுமென்று சொன்னது இதுவரை செயல்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போதைய முதல்வர் அவர்கள் அந்தக் குறையைக் களையும் வகையில், அந்த மாவட்டத்திற்கு அடிக்கல் நாட்டி அந்தப் பெருமையைப் பெறுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து இந்தத் தொகுதியைப் பொறுத்த வரையில் சாலைகள் அதிகமான அளவுக்கு சீர்கேடான நிலையில் உள்ளன. அந்தச் சாலைகளைச் செப்பனிட அதிகமான நிதி ஒதுக்கீட்டைச் செய்து, அந்தத் தொகுதிக்கு அரசு வழங்குமென்று எதிர்பார்க்கிறோம். மற்றும் அந்தத் தொகுதி நீர்ப்பாசன வசதியிலும் மிகவும் பின் தங்கியுள்ளது. ஆகவே அந்தத்

(திரு. ரெ. பிச்சைமுத்து) [1989 மார்ச் 28

தொகுதிக்கான நிதி ஒதுக்கீட்டை அளித்து, நீர்ப்பாசன வசதிகளைச் செய்ய வேண்டும். நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்திக்கொள்ள அங்கேயுள்ள மக்களுக்கும் கடன் உதவி அளிக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அந்தத் தொகுதியிலுள்ள முக்கியமான பிரச்சினை, மலையாளப்பட்டி கிராமத்தில் அணைக்கட்டு கட்டும் திட்டம், கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்பு போட்ட திட்டம், இதுவரையில் செயல்படுத்தப்படாமல் இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் அந்தப் பகுதியிலே மூன்று மாவட்டங்களை இணைக்கும் ஒரு பாலத்தை வெண்பாடி கிராமத்திலே அமைத்தால் குறைந்தது 60 கிலோ மீட்டர் தொலைவைக் குறைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து கல்வி நிறுவனங்கள். பெரம்பலூர் தொகுதியைப் பொறுத்த வரையில் கல்வி நிறுவனங்கள் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டுள்ளன. அங்கேயுள்ள மக்கள் மிகவும் பின்தங்கிய மக்கள். அங்கேயுள்ள ரோவர்ஸ் கல்வி நிறுவனம், ஒவ்வொரு மாணவனுக்கும் பல ஆயிரம் ரூபாய் நன்கொடையாக வசூலிக்கிறது. மாணவர்கள் தங்கள் சான்றிதழ்களைப் பெற சாகும் வரை உண்ணாவிரதம் என்று கோரிக்கை வைத்து, போராடும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே அந்தக் கல்வி நிறுவனத்தில் உள்ள நிர்வாகத்தை மாற்றி அமைத்து, அந்த நிர்வாகத்தில் மாணவர்கள் நலன் கருதி, எல்லாத் தரப்பினரும் இடம் பெற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு பெரம்பலூரில் ஒரு கலைக் கல்லூரி அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் பெரம்பலூர் தொகுதியைப் பொறுத்தவரையில், பெரம்பலூரில் உள்ள மருத்துவமனை ரொம்பவும் சீர்கேடான நிலையில் உள்ளது. அந்த மருத்துவமனை அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு வழங்கி, அங்கேயுள்ள பொதுமக்கள் பயனடையும் அளவுக்கு மருத்துவ வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள அரிஜன மக்கள் ரொம்பவும் பின்தங்கியுள்ளதால், குடிசைகளை மீண்டும் செம்மைப்படுத்தி கட்டிக் கொள்ள வழியில்லாமல் இருக்கிறார்கள். அந்த மக்களுக்குத் தேவையான நிதியை கடனாக வழங்கிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தத் தொகுதி மக்கள் நலனைக் கருதி, அங்கே வாழும் ஏழை எளிய மக்களுக்கு வீட்டு மனைப் பட்டாவும், வீடு கட்ட கடனும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. ரெ. பிச்சைமுத்து]

திருச்சி மாவட்டத்தில் 7 தொகுதிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. அதில் அமைச்சர் பெருமான் தொகுதியும் அடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40.)

அப்படி அந்த 7 பின்தங்கிய வட்டாரங்களின் நிலைமையைக் கருத்தில் கொண்டு, அங்கே இருக்கிற சூழ்நிலையை அனுசரித்து, அவற்றிற்கு என்று தனியாக நிதியை ஒதுக்கி அங்கே தேவையான காரியங்களைச் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக அங்கே இருக்கிற கிராமப்புற மக்களின் நலனைக் கருதி அதிகமான நிதியை அவர்களின் நலனுக்கு ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அந்தப் பகுதி மக்களின் மருத்துவத் தேவைகளைக் கருத்தில் கொண்டு பெரம்பலூரில் செயல்படுகிற மருத்துவமனையை அபிவிருத்தி செய்து, அதற்கு அதிகமான நிதியை ஒதுக்கி உதவ வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில் உள்ள சூழ்நிலைக்கு ஏற்ப ஒரு சிறு தொழில் நிறுவனமாவது அமைத்து, படித்த இளைஞர்களுக்கு அங்கே வேலை வாய்ப்பினை உருவாக்கித் தந்திட வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் என்னுடைய பகுதியிலே ஒரு சர்க்கரை ஆலை செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த ஆலையின் அரைவைத் திறனை அதிகரித்து, அபிவிருத்தி செய்திடும் வகையில் மாநில அரசு மத்திய அரசை வலியுறுத்தி அனுமதி பெற்றுத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு இந்த அரிய வாய்ப்பை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. கே. வி. இராமசாமி : பெருமதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, கழகத் தலைவர், தமிழக முதல்வர் அவர்களே, இங்கே தமிழக முதல்வர் அவர்கள் கடந்த 25ஆம் தேதியன்று பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள ஆன்றோர்களும், சான்றோர்களும் மற்றும் அனைத்து வணிகர்களும் பாராட்டுகிற அளவுக்கு ஒரு நல்ல பட்ஜெட்டை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். தமிழகத்தில் கடந்த 11 ஆண்டுக் காலமாக இல்லாத வகையில் ஏழை எளிய மக்களுக்கு பல்வேறுபட்ட நல்ல திட்டங்களை அதன் மூலம் அளித்திருக்கிறார்கள். தமிழகத்தில் உள்ள அனைத்து மக்களும் மனசாட்சியோடு அவரைப் பாராட்டுகிற அளவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த பட்ஜெட்டை தாக்கல் செய்திருக்கிறார்கள்.

[திரு. கே. வி. ராமசாமி] [1989 மார்ச் 28

கரூர் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் நானும் அதனைப் பாராட்டி, இங்கே எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே அளிக்கப்பட்டிருக்கிற பட்ஜெட்டில் திருச்சி மாவட்டத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை என்னுடைய தொகுதியான கரூரிலே அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய கரூர் நகரில் வடக்கே காவிரியும் தெற்கே அமராவதி நதியும் இவை இரண்டுமல்லாமல் வேறொரு பக்கத்திலே மூன்றாவது நதியும் ஓடியும் கூட, இந்த 3 நதிகளுக்கு இடையிலே உள்ள கரூர் நகரம் குடிநீர்ப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டிருப்பதால், இதற்கென்று காவிரி குடிநீர் திட்டத்தை உடனடியாக செயல்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே கரூர் பகுதியில் 7 பஞ்சாயத்துக்களும் இரண்டு நகர பஞ்சாயத்துக்களும் கொண்ட ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்தி குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கவேண்டுமென்றும் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் நகரம், இந்தியாவிலேயே கைத்தறி ஏற்றுமதியில் முதலிடம் வகிக்கிற நகரம் என்பதை தமிழகத்தில் உள்ள அனைவரும் அறிவர். ஏறக்குறைய ஓராண்டுக்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் கரூர் நகரிலே இருந்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அங்கே ஏறத்தாழ 40,000 கைத்தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டில் அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கெல்லாம் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட திட்டங்களை, ஏழை எளிய நெசவாளர்கள் பயன்பெறுகிற வகையில், கரூர் தொகுதிக்கு அளித்து நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு கரூர் நகரில் 40 கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் இருக்கின்றன. அந்த 40 சங்கங்களுக்கும், அதனுடைய தொழிலாளர்களுக்கும் வாழ்வளிக்கின்ற வகையில் ஏழை எளிய நெசவாளர்களைக் காப்பாற்றிடும் வகையில் தமிழக முதல்வர் அவர்கள் தனி கவனம் வைத்து கரூர் தொகுதிக்கு அந்தத் திட்டங்களை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. கே. வி. ராமசாமி]

அதுபோல கரூர் பகுதியில் அமராவதி ஆற்றின் ஆயக்கட்டில் ஏறக்குறைய கரூர் தாலுகாவில் 14 ஆயிரம் ஏக்கர் இருந்தாலும் ஆண்டுக்கு 3 போகம் தண்ணீர் இருந்தாலும், அமராவதி ஆற்றில் நீர் குறைவின் காரணமாக ஒரு ஆண்டுக்கு ஒரு போகம் தான் செயல்பட்டு வருகின்றது. அங்கு செட்டிபாளையம் பகுதியில் ஒரு தடுப்புச் சுவர் கட்டி, பள்ளா பாளையம் வாய்க்காலும் புலியூர் வாய்க்காலும் செயல்பட்டு ஏறக்குறைய 14 ஆயிரம் ஏக்கர் மூன்று போகம் பயன்படும் அளவுக்கு அங்கே தமிழக அரசு அதை முன்னின்று நடத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல கரூர் நகராட்சியில், அதைச் சுற்றியுள்ள அரவக்குறிச்சி தொகுதி, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கரூர் தொகுதி ஆகிய மூன்று தொகுதிகளும் சேர்ந்து ஏறக்குறைய 10 இலட்சம் ஜனத் தொகை கொண்ட இந்தப் பகுதியில் ஒரு அரசு மருத்துவமனை இருந்தாலும், அது போதுமான நவீன முறையிலே செயல்படாது இயங்குவதால், அதற்கு பல்வேறு வசதிகளை உண்டாக்கி அதைச் சிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல கரூர் நகரத்தில் கரூர்--தூத்துக்குடி இரயில் பாதை திட்டம் இருந்தாலும், கரூர் நகரத்தை எதிர் காலத்திலே ''கரூர் ஜில்லாவாக'' மாற்றியமைப்பதற்கான வழி முறைகளை இன்றைக்கு தமிழகத்தின் முதல்வரவர்கள் நியாயமான முறையிலே செயல்படுத்திக் கொடுப்பார் என்று எதிர்பார்க்கிறோம். காரணம் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பாகவே கரூர் நகரத்தை ஒரு மாவட்டமாக ஆக்க வேண்டுமென்று, கரூர் நகர வாக்காளர்களும், அனைத்து அரசியல் கட்சிகளும் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த வகையில் இன்றைக்கு கரூர் நகரம், மாவட்டம் ஆகும் அளவுக்கு மருத்துவமனைகள், பல்வேறு நிறுவனங்கள், மற்ற அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்றன. அந்த வகையில் கரூர் நகரத்தை, நாங்கள் வற்புறுத்திக் கேட்டுக் கொள்வது என்னவென்றால், எதிர் காலத்திலே கரூர் மாவட்டமாக ஆக்க வேண்டுமென்று தமிழக அரசையும், முதல்வர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக முதல்வர் அவர்கள் நாட்டிலுள்ள ஏழை எளிய மக்களுக்கு தொழில் திட்டத்தை அளித்திருந்தாலும், குறிப்பாக இங்கே குடும்பத்தில் வாரிசு அடிப்படையில் ஆணுக்கும், பெண்ணுக்கும் சம உரிமை ஏற்படுத்தி அவருடைய பட்ஜெட்டை தாக்கல் செய்தது இன்றைக்கு இந்தியாவிலே தமிழகத்திலே ஒரு நல்ல வரவேற்கின்ற திட்டமாக இருக்கின்றது. சாதாரண குடும்பங்களிலிருந்து இன்றைக்கு பெண் கொடுக்கும்போது

[திரு. கே. வி. இராமசாமி] [1989 மார்ச் 28

பல இலட்சம் ரூபாய், நூற்றுக் கணக்கான பவுன்கள், வீடுகள், கார்கள் கொடுக்கின்ற அந்தக் கொள்கையை மாற்றி இன்றைக்கு ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான சொத்து உரிமையை தமிழக முதல்வர் அவர்கள் அளித்ததை ஏழை எளிய மக்கள் அனைவரும் வரவேற்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். அந்த வகை யில்தான் இன்றைக்கு தமிழக முதல்வரவர்கள் ஏழை எளியவர் களுக்கு ஏற்படுத்திய வீடு கட்டும் திட்டமும், நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டமும், குறிப்பாக இன்றைக்கு தமிழகத்திலுள்ள நகராட்சிமன்றத் தலைவர்களும், ஒன்றியத் தலைவர்களும் ஏற்கெனவே நடைபெற்ற அரசில் ஒரு கூண்டுக் கிளியாகவும், நடக்கின்ற நிழலாகவும் இருந்த அந்தத் திட்டத்தை மாற்றி இன்றைக்கு நகர்மன்றத் தலைவர்களும், ஒன்றியத் தலைவர் களும் சுதந்திரப் பறவையாக செயல்படுவதைப் பார்த்து இந்த அரசை அனைத்துக் கட்சிகளுமே வரவேற்கிறார்கள். காரணம் நான் ஒரு நகர்மன்றத் தலைவர் என்ற காரணத்தால் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஆளாகியிருக்கிறேன். 3 ஆண்டுக் காலம் நகர்மன்றத் தலைவராக இருந்த காலத்தில் பல்வேறு கஷ்டங்கள், பல்வேறு குறைபாடுகள், பல்வேறு இடை யூறுகள் ஏற்பட்டதை மாற்றியமைத்து, தமிழகத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களுக்கும், அனைத்து நகராட்சிகளுக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்த தானைத் தலைவர் கலைஞர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

(பிற்பகல் 12-50).

இன்றைக்கு ஏழை-எளியவர்களுக்கு, தனியார் வீடுகளைக் கட்டிக் கொடுத்தாலும், கூட்டுறவுச் சங்கங்களில் சாதாரண நபர் ஒருவர் 10 ஆயிரம் ரூபாயோ அல்லது 50 ஆயிரம் ரூபாயோ லோன் வாங்குகின்ற நிலை இருக்கிறது. ஏழை எளிய மக்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் சார்பாக பல பண உதவிகளைச் செய்து கொடுக்கக் கூடிய நிலையை, ஒன்றியத் தலைவனாக நான் இருக்கிற காரணத்தால், அதைத் தெளிவுபடுத்துகிறேன்.

ஏறக்குறைய ஆறு மாத காலமாக கூட்டுறவு வங்கியில் ஒரு லோனும் ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கின்ற நிலை இல்லாத அளவுக்கு அன்றைய அரசு செயல்பட்டுக் கொண்டிருந்தது இப்பொழுது தமிழக முதல்வர் அவர்களுடைய பட்ஜெட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகையை ஏழை எளிய மக்களை ஊக்கப்படுத்துகின்ற வகையில் செலவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1989 மார்ச் 28] [திரு. கே. வி. இராமசாமி]

இன்றைக்கு தமிழகத்தில் பல்வேறு பிரிவினரும், பல்வேறு ஏழை எளிய மக்களும், நடுத்தர மக்களும், விவசாயப் பிரிவினரும், வணிகப் பெருமக்களும்—அத்தனை பேரும் தமிழகத்தின் முதல் வர் அவர்களுடைய பட்ஜெட்டை மனச்சாட்சியோடு வரவேற் கிறார்கள். அந்த வகையில், கரூர் தொகுதி சட்டமன்ற உறுப் பினராக இருக்கின்ற நானும், ஏழை எளிய மக்களும் தமிழகத்தின் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த பட்ஜெட்டை மனமார வரவேற்று, இங்கே எனக்குப் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றி கூறி, விடை பெறு கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, 1989–90ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை யினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே தாக்கல் செய்திருக்கிறார்கள். பொதுவாக, எங்கள் கட்சியின் சார்பாக ஏற்கெனவே திரு. வரதராசன் அவர்களும் வரவேற்று இருக்கிறார்கள். நானும் அதை வரவேற்கிறேன். ஏழை-எளிய மக்களுக்காக நல்ல சில திட்டங்கள் அதிலே காணப்படுகின்றன. அந்த முறையிலே நாங்கள் இந்த பட்ஜெட்டை வரவேற்கி றோம். அதே நேரத்தில் ஒரு சில கருத்துக்களை நான் இந்த அவையிலே சொல்ல விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல், ''மாநிலத்தில் பெரிய, நடுத்தர மற்றும் சிறிய தொழில்களை வளம் பெறச்செய்வது நம்முடைய அரசின் முக்கிய குறிக்கோளாக இருக்கும்'' என்று 23 ஆம் பக்கம், 41 ஆம் பாராவில் சொல்லியிருக்கிறார். அதிலே நான் சொல்வதெல்லாம், கோவை மாவட்டத்தில்—குறிப்பாக, சிறிய தொழில்களாக இருக்கக் கூடிய என்ஜினியரிங் தொழில்கள் சம்பந் தப்பட்ட வரையில் ஒரு சில கருத்துக்களைக் குறிப்பிட விரும்பு கிறேன். அங்கே, பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஆயிரக் கணக்கான சிறு தொழில்களும் இருக்கின்ற அந்த நகரத் தில், அந்தத் தொழில்கள் நீண்ட காலமாக மிகப்பெரிய பாதிப்புக் குள்ளாகி இருக்கின்றன என்பதை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன், குறிப்பாக, மூலப் பொருள்கள் கிடைக்காத காரணத்தினால் கிட்டத்தட்ட பல ஆண்டுக் கால மாக அந்தத் தொழில்கள் நலிவடைந்த நிலையைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்பு கிறேன். அந்தத் தொழில்களுக்குத் தேவையான ''பிக்-அயர்னும்'' கோக்கும் மத்திய அரசாங்கத்திடமிருந்து வர வேண்டுமென்ப தால், அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அதை வேண்டு மென்றே குறைத்துக் கொண்டிருக்கிறார்கள், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடனே அரிசியை எவ் வாறு குறைத்தார்களோ, அது போல மாதம் ஒன்றுக்கு 8 ஆயிரம் டன் இரும்பு தேவைப்படுகிற போது, கோவை மாநகர திற்கு ஆயிரம் டன்னாக குறைத்துக் கொடுத்திருக்கிறார்கள்.

[திரு. கே. வி. இராமசாமி] [1989 மார்ச் 28

ஆகவே நாம் மத்திய அரசிடமிருந்து அதைக் கோரிப் பெற வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேநேரத்தில் ''கோக்'' கிடைப்பது கிடையாது. அந்த இரண்டுக்கும் அன்றாடம் விலையை ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள், ஆகவே, அந்தத் தொழில்களை நடத்துவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறதென்று அங்கே இருக்கக் கூடிய நிர்வாகிகள் சொல்கிறார்கள் என்பதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு, தேவையான அளவுக்கு மத்திய அரசிடமிருந்து கோக்கும், பிக்-அயர்னும் கோரிப் பெற வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில், நேற்றைய தினம் அளித்த நிதிநிலை அறிக்கையில் மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு வரி விலக்கு அளிக்கின்ற முறையில் 3; 5, 8 எச். பி. பம்பு செட்டுகளுக்கு 8 சதவீதம் வரியை தள்ளுபடி செய்திருக்கிறார்கள். நான் அரசுக்குச் சொல்வதெல்லாம், அது தஞ்சாவூரிலே இருக்கக் கூடிய பகுதிகளுக்குத்தான் பொருந்துமே தவிர, கோவை, ஈரோடு போன்ற பகுதிகளுக்குப் பொருந்தாது. அங்கே விவசாயத்திற்குப் பயன்படுத்தக் கூடிய பம்ப் செட்டுகளுக்கு, மோட்டார்களுக்கு அநேகமாக 7½ எச்.பி., 10 எச்.பி., கொண்டிருக்கக்கூடிய மோட்டார்களைத் தான் அங்கே பயன்படுத்துகிறார்கள். ஆகவே அதற்கும் வரி விலக்கு அளிக்கவேண்டுமென்று நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது முடியவில்லை என்று சொன்னால், பகுதியாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால், அந்த இரண்டு மாவட்டங்களில் 400 அடி ஆழத்திலிருந்துதான் தண்ணீரை எடுக்க வேண்டும். ஆகவே, அதற்கு இரண்டு மோட்டார்களைப் பயன்படுத்த வேண்டும் என்பதை நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

ஆயில் இன்ஜின்களை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய ஆயில் இன்ஜின்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். வேறு தொழிற்சாலைகளுக்கு இருக்கக்கூடிய மோட்டார்களுக்கு வரி போடலாம்; வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், விவசாயத்திற்காகப் பயன்படுத்தக்கூடிய 7½ எச்.பி., 10 எச்.பி. மோட்டார் பம்ப் செட்டுகளுக்கு முழுமையாக வரி விலக்கு அளிக்க வேண்டுமென்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மத்திய அரசுக்கு நான் ஒரு கடிதம் அனுப்பினேன். கோவையிலே இன்ஜினீரிங் தொழிலுக்கு தேவையான பிக் அயர்ன் வழங்க வேண்டுமென்று ஒரு கடிதம் எழுதினேன். முதல்வர் அவர்களுக்கும் நான் ஒரு கடிதம் எழுதி இருக்கிறேன். மத்திய அரசின்



1989 மார்ச் 28] [திரு. ஜூ. கே. வெள்ளிங்கிரி]

ஸ்டீல் அத்தாரிட்டியிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது வருஷம் ஒன்றுக்கு 1 1/4 டன் பிக் அயர்ன் தேவையாக இருக்கிறது, ஆனால், பகுதிதான் உற்பத்தி செய்கிறார்கள், மீதம் இருக்கக்கூடிய பற்றாக்குறையை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டுமென்று எனக்கு ஒரு பதில் வந்திருக்கிறது. ஆகவே, இது நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்வதாக இல்லை என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பிக் அயர்னை ஸ்டீலாகப் பயன்படுத்துகிறார்கள். ஆகவே, பிக் அயர்ன்தான் நமக்குத் தேவை என்பதை வலியுறுத்தி சட்டமன்றத்திலே இருக்கிற அத்தனை உறுப்பினர்களின் கருத்தாக மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன்.

கோவை மாவட்டத்தின் பட்டா பிரச்சினை பற்றி பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொன்னேன். என்னுடைய தொகுதியிலே இப்பிரச்சினை அதிகமாக இருக்கிறது. அநேகமாக நத்தம் புறம்போக்கிலே மட்டும்தான் பட்டா கொடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் கூறுகிறார்கள். அநேகமாக 15 வருடம், 20 வருடம், 30 வருடம் அப்படி இருக்கின்றன. பள்ளவாரி, மந்தைவெளி, மானம் புறம்போக்கு என்று பல பிரிவுகள் வைத்திருக்கிறார்கள். நான் அரசுக்குச் சொல்வதெல்லாம் அந்த இடங்கள் பொது நலனுக்குப் பாதகம் இல்லாமல் இருந்தால் அந்த இடத்தில் குறிப்பாக 15 ஆண்டுக்காலம் ஒருவர் குடிசைப் போட்டுக் கொண்டிருந்தார் என்றால், அவருக்குப் பட்டா வழங்க வேண்டுமென்று அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லா இடங்களிலும் அத்தகைய நிலங்கள் இருக்கின்றன. மந்தைவெளி என்றால் பட்டா கிடைக்காது என்று சொல்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே அங்கே புல்லும் கிடையாது, ஆடும் மேய்வது கிடையாது. நான் நேரடியாகப் பார்த்திருக்கிறேன். பள்ளவாரி என்று சொல்கிறார்கள். மேடான பகுதி, தண்ணீரே அங்கு நிற்பது கிடையாது ஆனால் அது மந்திரி சொல்கிறார்கள். ஆகவே, மரியாதைக்குரிய வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கவனத்திலே எடுத்துக் கொண்டு, 15 ஆண்டுக்காலம் ஒருவர் குடிசை போட்டு வாழ்ந்திருந்தால் அவர்களுக்குக் கட்டாயமாகப் பட்டா கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அத்தகைய நிலை என்னுடைய பகுதியிலே மிக அதிகமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உணவு சம்பந்தமாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். ரேஷன் கார்டு முறையாக, எளிதாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்திலே எசான்னார்கள். கோவை மாவட்டத்திலே என்ன நிலைமையென்றால், நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் பேசும் பொழுது, ஒரு ரேஷன் கார்டு கூட கைவசம் இல்லையென்று சொல்கிறார்கள். 12,000 ரேஷன் கார்டுகளைப் பிடித்திருக்கி

றார்கள். அது வரவேற்கத்தக்கது, நாங்களே சொன்னோம். ஆனால், 10,000 பேர்கள் உண்மையாகக் கார்டு இல்லாமல் இருக்கக்கூடிய நிலைமை கோவையிலே இருக்கிறது. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசும்பொழுது, ஒன்றும் செய்ய முடியாது, அரசாங்கத்திடமிருந்து ரேஷன் கார்டு வந்தால்தான் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். ஒரு கார்டு கூட கை வசம் கிடையாது என்று சொன்னார்கள். ஆகவே, மரியாதைக்கும் மதிப்பிற்குமுரிய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் உண்மையிலே ரேஷன் கார்டு இல்லாதவர்களுக்குக் கார்டு கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

கோவை மாவட்டத்தை வறட்சிப் பகுதியாக அறிவிக்க வேண்டும். ஏற்கெனவே, கோவை மாவட்டத்தில் வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் கலந்து கொண்டோம். உண்மையிலே, கோவை மாவட்டத்தில், நகரத்தைத் தவிர மற்ற பகுதிகள் முழுவதும் அநேகமாக மிகக் கடின நிலையில் இருக்கின்றன. ஆகவே, கோவையை வறட்சிப் பகுதியாக அறிவித்து, மத்திய அரசாங்கத்திடமிருந்து நியாயமான நிதி உதவியைப் பெற்று, வறட்சிப் பணிகள், நியாயமாக, துரிதமாக நடத்தப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

விலைவாசிகள் ஏறிக் கொண்டேயிருக்கின்றன : கள்ள மார்க்கெட்டுகள் அதிகமாகப் பெருகிக் கொண்டிருக்கின்றன. அதை முழுவதும் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நீண்டகாலமாக பல பிரச்சினைகள் இருக்கின்றன. இருந்தாலும் இரண்டாரு பிரச்சினைகளைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்துக்கு உட்பட்ட கவண்டம்பாளையத்தில் மிகப் பெரிய பாலம் கட்டப்படாமலேயே போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது. கவண்டம்பாளையத்திற்கும் இடையார்பாளையத்திற்கும் இடையில் போக்குவரத்து வசதி இல்லாமல் இருக்கிறது.

(பிற்பகல் 1-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் அலுவல் நேரம் சில மணித் துளிகள் நீட்டிக்கப்பெறுகிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : இன்றுவரையில் அதையும் செய்யவில்லை என்பதையும் அதை உடனடியாகச் செய்து கொடுத்தால் ஒரு மிகப்பெரிய பிரச்சினை அந்தப் பகுதியிலே தீரும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.





அதைப்போல, சங்கனூர்பள்ளம் என்பது மிகப் பெரிய பிரச்சினை. நீண்ட காலமாக இருக்கிறது. மழை பெய்தால் தண்ணீர் ஏராளமாக வந்து குடிசைகளை அடித்துச் செல்லும். நாங்களெல்லாம் போய் நிவாரணம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. அதைப் போக்குவதற்காக சின்னவேடம்பட்டியில் ஒரு குளத்தை அமைப்பதாக இப்பொழுது உத்தரவிட்டு, அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் அது நிற்கின்றது. மெதுவாக நடக்கின்றது. ஆமை வேகத்தில் நடக்கின்றது. அதை இந்த அரசு கொஞ்சம் துரிதப்படுத்தி, உடனடியாக அந்தக் குளத்தினுடைய வேலையை முடித்தால் நிச்சயமாக அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தண்ணீரும் கிடைக்கும் ; ஓரளவிற்காவது பயன்படுத்த முடியும் என்பதையும் இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல என்னுடைய தொகுதியில் ஆலாந்துறையும், அதேபோல இருக்கக்கூடிய வடவள்ளியிலேயும் பள்ளிக்கூடங்கள் சம்பந்தப்பட்டவரைக்கும் தீயிலே எரிந்து ஓராண்டுக் காலம் ஆகிறது. மருதமலை தேவஸ்தானத்தின் சார்பிலே நடத்தக்கூடிய பள்ளிக்கூடம். இன்றைய வரைக்கும் அந்தப் பள்ளிக்கூடத்தைக் கட்டாமல் குழந்தைகள் முழுவதும்—நூற்றுக்கணக்கான குழந்தைகள்-மரத்தடியிலே படிக்கக்கூடியதை நானே நேரில் சென்று பார்த்தேன். ஆகவே அந்தக் குறையைக் கல்வியமைச்சரவர்களும், அதேபோல தேவஸ்தானத்திற்குப் பொறுப்பில் இருக்கக்கூடிய அமைச்சரவர்களும் கவனிக்க வேண்டுமென்பதையும் நான் இந்த நேரத்திலே சொல்லி, எனக்கு வாய்ப்பு கொடுத்தமைக்கு நன்றி கூறி நான் முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (29—3—1989) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-01 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

13. 1978-79-ஆம் ஆண்டு முதல் 1982-83-ஆம் ஆண்டு முடிய பட்டுநூல் விதைகளுக்காக, போடிநாயக்கனூர் மற்றும் பெரியகுளத்தைச் சேர்ந்த பட்டுநூல் விற்பனையாளர்கள் செலுத்த வேண்டிய வரி, கூடுதல் வரி மற்றும் மேல்வரியினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 3—5—1988-ஆம் நாளிட்ட 692-ஆம் எண் அரசாணையில்

(திரு. யூ. கே. வெள்ளிங்கிரி) [1989 மார்ச் 28

வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைச் வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959/ 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

14. 25—7—1977 முதல் 31—12—1982 முடிய செயற்கை பசைகளின் விற்பனையின் மீது ஒருமுனை மற்றும் பலமுனையில் விதிக்கக் கூடிய பல்வேறு வரியினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 29—9—1988 ஆம் நாளிட்ட 1292-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.].

15. ஜெலட்டின் விற்பனைக்காக விற்பனையாளர்கள் செலுத்த வேண்டிய வரியினை ரத்து செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 1—8—1988-ஆம் நாளிட்ட 1088-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

16. சீர்காழி ஊராட்சி ஒன்றிய (தச்சுவேலை பிரிவு) ஆணையரால் செலுத்த வேண்டிய தண்டத் தீர்வையினை ரத்து செய்வது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 4—7—1988-ஆம் நாளிட்ட 1024-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

D
V 241,31 N89
N89.5.3
144355
600 008.

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Javakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

---

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.